Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வித சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1352)

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 21 செவ்வாய்க்கிழமை (03.04.2012) பக்கங்கள் 20 ஓசை - 186



உறவில் பழுது (07)



சம்பந்தன் துரோகி (12)



வெற்றிக் களிப்பு (17)



எலும்புக்கூடு (11)

# பிரேரணைக்கு ஆதரவளித்த நாடுகளுடன் முரண்பாடில்லை

## அரசாங்கம் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜெனிவா தீர்மானத்திற்கு ஆதரவாக செயற்பட்டமைக்காக எந்தவொரு நாட்டுடனும் முரண்பாட்டுடன் அரசாங்கம் செயற்படமாட்டாதென அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொருட்கள் மீதான வரி அதிகரிக்கப்பட்ட தீர்மானத்திற்கு சர்வதேச நாணய நிதியத்தின் அழுத்தங்கள் காரணமாக அமையவில்லை.

முன்னர் சர்வதேச நாணய நிதியத்துடன் நாம் பேச்சுவார்த்தைகளை நடத்திய போது, இலங்கை கடனுதவியை கேட்கும் என்பது நிதியத்திற்கு தெரியாது. எனினும் அரசுக்கு எதிராக

19 ஆம் பக்கம் பார்க்க

## மாணவியை காணவில்லை

(வடமராட்சி)

வடமராட்சி நெல்லியடியில் மாணவி ஒருவர் நேற்று காணாமற்போயுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருக்கிறது.

மேற்படி பகுதியைச் சேர்ந்த பொன்னுத்துரை யாழினி (வயது - 17) என்ற மாணவியே இவ்வாறு காணாமற் போயுள்ளார்.

நெல்லியடியில் உள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்கு நேற்றுக் காலை 8.30 மணியளவில் புறப்பட்டுச் சென்ற இவர் நேற்றிரவு வரை வீடு திரும்பவில்லை என்று அம்மாணவியின் உறவினர்கள் தெரிவித்தனர்.

## இராணுவ வாகனம் மோதி குடும்பஸ்தர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேசத்திற்கு உட்பட்ட கற்குளம் சந்திப் பகுதியில் நேற்று மாலை இராணுவத்தினரின் கன்ரர் ரக வாகனம் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

ஊஞ்சல் கட்டிப் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான நற்குணம் பாலசிங்கம் (வயது - 59) என்பவரே மேற்படி சம்பவத்தின் போது உயிரிழந்தவராவார்.

மோட்டர் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த குறித்த நபர் மீது எதிரே வந்த இராணுவ வாகனம் மோதியபோதே விபத்து நிகழ்ந்திருக்கின்றது.

# நிரந்தர சமாதானத்திற்கு தீர்மானம் வழிவகுக்கும்

## அமெரிக்கா நம்பிக்கை



(வொஷிங்டன்)

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம், அந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தை உருவாக்குமென தாம் நம்புவதாகவும், இந்த தீர்மானம் இலங்கை அரசாங்கத்தை நல்ல பாதையில் முன்னேற்றிச் செல்வதற்கு அளிக்கப்படும் ஊக்கம் எனவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கான அமெரிக்கத் தூதுவர் Eileen Chamberlain Donahoe தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் Eileen Chamberlain Donahoe ஊடகங்களை சந்தித்திருந்தார். இதன்போது அவர் தெரிவித்துள்ளதாவது,

இப்பொழுது நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கையில் நிரந்தர சமாதானத்தை உருவாக்கும் என்பது எமது நம்பிக்கை. இந்த பிரேரணையின் நோக்கம் இலங்கை அரசுக்கு அது தன் சகல மக்களுடனும் ஏற்படுத்தும் நல்லிணக்க முயற்சியில் உதவுவதாகும். பொறுப்புக்கூறுதலும், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நிறைவேற்றுவதும் நிரந்தர சாமாதானத்தை நோக்கி முன்னேற தேவையான இரண்டு அடிப்படை அம்சங்களில் இலங்கைக்காக மட்டுமல்லாது, சர்வதேச மனித உரிமைக் கொள்கைகளுக்குமாக பாரிய அளவில் மனித அழிவுகள் ஏற்பட்டும், உரிமைகள் மீறப்பட்டுமிருக்கும் போது நம்பிக்கையான விசாரணை ஒன்றும், ஒருவகையான பொறுப்பு கூறலும்

19 ஆம் பக்கம் பார்க்க

# காலவரையறையுடன் பரிந்துரைகள் அமுல்



(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் ஒரு காலவரையறையுடன் அமுல்படுத்துமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். ஏசியன் ட்ரிபியுனுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 13 ஆம் திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று இனப்பிரச்சினைக்கான தீர்வினையும் அரசாங்கம் வழங்கும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு பகிரப்படக் கூடாது என தாம் ஒருபோதும் கூறவில்லை எனவும், இந்த அதிகாரங்களைப் பெறுவதற்கு முன்னர்

19 ஆம் பக்கம் பார்க்க

## பிரிட்டன் எம்.பிக்கள் குழு குடாநாட்டிற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள் மற்றும் வீடமைப்புத் திட்டங்கள் குறித்து நேரில் பார்வையிடும் நோக்கில் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் குழுவொன்று நேற்றுப் பிற்பகல் யாழ். மாவட்டத்திற்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் விமானப்படை உலங்கு வானூர்தியில் வந்திறங்கிய இக்குழுவினர் நகரின் விடுதியொன்றில்

19 ஆம் பக்கம் பார்க்க

# தமிழ்நாட்டில் புலிகளுக்கு பயிற்சியா? அடியோடு மறுக்கிறது இந்தியா

(கொழும்பு)

தமிழ்நாட்டில், விடுதலைப் புலிகளுக்கு மூன்று முகாம்களில் பயற்சி அளிக்கப்பட்டுள்ளதாக, அரச புலனாய்வுச் சேவையை ஆதாரம்காட்டி ஊடகங்களில் வெளியான தகவல்களை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் நிராகரித்துள்ளது.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் நேற்று மாலை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்நாட்டில் பயிற்சி பெற்ற விடுதலைப் புலிகள் 150 பேர், நாசவேலைகளை மேற்கொள்வதற்காக இலங்கைக்குத் திரும்பியுள்ளதாக அரச புலனாய்வுச் சேவையை ஆதாரம் காட்டி ஐலன்ட் நாளிதழ் வெளியிட்டுள்ள செய்தி முற்றிலும் தவறானதும் அடிப்படையற்றதுமாகும்.

இரு நாடுகளினதும் தொடர்புடைய முகவரமைப்புகள் தொடர்ந்தும் ஒன்றிணைந்து செயற்படுகின்றன.

இதுதொடர்பாக எந்தத் தகவலும் இந்திய அரசாங்கத்துக்கு அறியத் தரப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

இதனிடையே இது குறித்து இலங்கை தேசியப்

19 ஆம் பக்கம் பார்க்க

## வாழ்க்கைச் சுமை மேலும் அதிகரிக்கும்



### எச்சரிக்கிறது ஐ.தே.க.

(கொழும்பு)

மக்கள் மீதான வாழ்க்கைச் சுமை புதுவருடத்தின் பின்னர் மேலும் அதிகரிக்குமென ஐ.தே. கட்சி எச்சரித்துள்ளது.

அத்துடன் அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் நாளாந்தம் அதிகரிக்கின்ற வாழ்க்கைச் செலவினால் துன்பத்தில் உழன்றே மக்கள் புதுவருடத்தைக் கொண்டாட வேண்டியேற்பட்டுள்ளதாகவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியினால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பொன்றில், அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க இவ்வாறு தெரிவித்தார். யுத்தம் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர்

19 ஆம் பக்கம் பார்க்க

# சேதமடைந்த விளானை முன்பள்ளி புதுப்பொலிவுடன் மீண்டும் ஆரம்பம்

(காரைநகர்)

யுத்தத்தினால் சேதமடைந்த காரைநகர் விளானை முன்பள்ளி புனரமைப்புச் செய்யப்பட்டு மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது. கடந்த 27 ஆம் திகதி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைநகர் பிரதேச இணைப்பாளரும், காரைநகர் பிரதேச சபை எதிர்க் கட்சித் தலைவருமான வி.கண்ணன் (ரஜனி) இந்த முன்பள்ளியைத் திறந்துவைத்தார்.

முன்பள்ளியினைத் திறந்து வைத்து உரையாற்றிய கண்ணன, இந்த முன்பள்ளியானது விளானை சனசமூக நிலையக் கட்டடத்தில் இயங்கிவருகிறது. 1998 ஆம் ஆண்டு அமைச்சர டக்ளஸ் தேவானந்தாவின் பன்முகப்படுத்தப் பட்ட நிதியில் இக் கட்டடம் கட்டப் பட்டு தறபோது 14 வருடங்களின் பின்னர் அவரது நிதியில் கட்டடம் புனரமைப்புச் செய்யப் பட்டதை இட்டு நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

பிரதேச சபை எழுதுவினைஞரான அமரர் சிவஞானம் அவர்களின் அயராத ஊக்கத்தினாலும், முயற்சியினாலும் இக்கட்டடம் கடடப்பட்டது. அதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். வளர்ந்துவருகின்ற சிறார்களின் எதிர்காலத்தைக் கவனத்தில் எடுத்து கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறான சேவைகளை முன்னெடுத்து வருவது யாவரும் அறிந்ததே.

ஆகவே, நாம் நல்லதே நினைத்தால் நல்லதே நடக்கும். தீயவை நினைத்தால் தீயவைகளே நடக்கும் இது இயற்கை நியதி. இந்த மாணவச் செல்வங்கள் நல்லவற்றை நினைத்து நல்லவைகளையே பெறவேண்டும் என்பது எனது அவாவாகும் என அவர் மேலும் தெரிவித்தார். இந்நிகழ்வில் தீவக வலயக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் புவனேந்திரன், கோட்டக்கல்விப் பணிப்பாளர் சிறி விக்கினேஸ்வரன், முன்பள்ளிகளின் இணைப்பாளர் புஸ்பராணி, சைவ சித்தாந்த வித்தகர் நடராசா ஐயா, முன்பள்ளி ஆசிரியர்கள, மாணவர்கள, பெற்றோர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித் தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கபபுளியடி, யாழ்ப்பாணம். Tel:- 021 222 8680, 0775925088 (C/1350)

**கணினி திருத்தம்**

(Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன. அழையுங்கள் 0779086737 (C/1351)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை**

**முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்**

**வணிக மாணி / தொழில் நிர்வாகமாணி விசேட விரிவுரைகள்**

எமது பீடத்தில் கல்விகற்றுத் தவிர்க்கமுடியாத காரணங்களால் தொடர்ந்து கற்கமுடியாத 2 ஆம், 3 ஆம் வருட மாணவர் களுக்கான விசேட விரிவுரைகள் நடாத்த முடிவுசெய்யப்பட்டுள்ளதால் மாணவர்கள் முகாமைத்துவக், கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தில் உரிய விண்ணபத்தைப் பெற்று பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களைப் பீடாதிபதி அலுவலகத்தில் 20.04. 2012 அன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

இது அவர்களுக்கு வழங்கப்படத் தீர்மானிக்கப்பட்ட இறுதி சந்தர்ப்பமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பதிவாளர். (C/1356)

**AAA 2012 விருதுகளுக்கான குறுந்திரைப்படப் போட்டி**

AAA MOVIES INTERNATIONAL நிறுவனம் தனது மூன்றாவது குறுந்திரைப்படப் போட்டியை அகில இலங்கை ரீதியில் நடாத்தவுள்ளது.

* திறந்த பிரிவு, பாடசாலை மட்டப்பிரிவு என இரண்டு பிரிவுகளாக நடைபெறும்.
* பாடசாலைப் பிரிவில் பங்குபற்றும் படங்கள் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப் பட வேண்டும்.
* கால அளவு: 5 நிமிடத்திலிருந்து 20 நிமிடம் வரை.
* மக்களின் வாழ்வியல், உளவியல், சமூகப்பிரச்சினைகள் சம்பந்தமான படைப்புகள்.
* ஒரு பாடசாலை தயாரிக்கும் படங்களில் அப்பாடசாலை தவிர்ந்த பிற நடிகர்களும் பங்குபற்றலாம்.
* ஒருவர் அல்லது ஒரு அமைப்பு அல்லது ஒரு பாடசாலை எத்தனை படங்களையும் போட்டிக்கு அனுப்பலாம்.
* போட்டியில் பங்குபற்றும் திரைப்படத் தயாரிப்பாளர்கள் 30.04.2012 ஆம் திகதிக்கு முன்பாக எமது அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.
* பங்குபற்றும் குறுந்திரைப்படங்களை 31.07.2012 ஆம் திகதிக்கு முன்பு சமர்ப்பிக்க வேண்டும். சமர்ப்பிக்கும் போது பங்குபற்றும் நடிகர்கள் தொழில்நுட்பக் கலைஞர்களின விபரங்களை வழங்க வேண்டும்.
* ஒவ்வொரு குறும்படத்தையும் DVD அமைப்பில் மூன்று பிரதிகளாக வழங்கவேண்டும். வழங்கப்பட்ட குறுந்திரைப்படப் பிரதிகள் திரும்ப வழங்கப்படமாட்டாது.

**கடந்த வருடம் இக்குறுந்திரைப்படப் போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் நன்றிகள்.**

**குறிப்பு: விவரணப்படங்கள், குறும்படங்கள், வர்த்தக நிறுவனங்களுக்கான விளம்பரங்கள் என்பன துறைசார் வல்லுனர்களைக் கொண்டு தயாரித்துக் கொடுக்கப்படும். தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்.**

**தொடர்புகளுக்கு:**

**AAA Movies International**

**No 92, Brown Road, Jaffna.**

**Tel: +94(0)21 320 7386, +94(0)21 373 4742** (R/128)

## UNIVERSITY OF JAFFNA, SRILANKA VACANCIES

Applications will be received by me up to 30th April 2012 From sutiavly qualified candidates for the following post:

**POST - FULL TIME SUB - WARDEN GRADE (II) (MALE& FEMALE)**

**Qualification:**

A graduate of a recognized University.
Preference will be given to those with experience in administration and management of hostel.
Preference will be given to those who have experience in handling the matters related to student's welfare and disciplines.

**Note :** The successful applicant should reside in the hostel. But, he/she cannot reside with his/her family.

The successful canndidate should pay a refundable security deposit of Rs.10,000.00, This amount shall be deducted from his/her salary in 10 installments.

Salary Scale: Rs.22,240 - 18 X 320 - 28,000 p.m
Selection :By Test and Interview.

**Age not more than 45 years.**

**STATUTORY BENEFITS**

01. Allowances approved by the University Grants Commission.
02. Membership in Universities Provident fund and pension Scheme in the University Scheme.
03. Gratuity payment.
04. Employment trust fund
05. Free Medical care.

Application forms may be obtained from the office of the Senior Assistant Registrar/Establishments (Non-Academic) of this University on Payment of Rs.100/= for each Appilication forms at the people's bank, University of Jaffna Branch or at the shroff's counter of this University. Those who wish to obtain the forms by post are requested to send a money order drawn in favour of the bursar, University of Jaffna. together with a self - addressed Rs.5.00 stamped envelope of 23X10 cm.in size.

The envelope containing duly filled application form must bear the name of the post to which they apply on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the Registrar on or before 30th April 2012.

only Applications sent on the specified form will ve accepted. Applications received after the closing date and illegible and incomplete applications will be rejected without intimation.

Applicants from Governments/State Corporations and Statutory Bodies Should apply through their Head of the Department. Age Limit is not applicable to those who are in Service.

Applications received after the closing date will be rejected without intimation.

**Registrar,**
**University of Jaffna,**
**02.04.2012** (C/1357)



உ
சிவமயம்
"நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்குக"
**புளியம்பொக்கணை**
**நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை**



**கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழாவை முன்னிட்டு தண்டல் ஒழுங்குகள் பற்றிய அறிவித்தல்**

நாகதம்பிரான் பொங்கல் விழா எதிர்வரும் 05.04.2012 வியாழன் நடைபெறவுள்ளது. இதை முன்னிட்டு கடந்த 30.03. 2012 தொடக்கம் இன்று வரை வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடு, விசுவமடு, திருவையாறு, பிரமந்தனாறு, மயில்வாகனபுரம், உடையார்கட்டு, சுதந்திரபுரம், தேவிபுரம் போன்ற பகுதிகளுக்கு ஆலயத் தொண்டர்கள் ஆலய சின்னக் கொடிகளுடன் தண்டல் ஒழுங்குகளுக்காக வருகை தரவுள்ளனர்.

இவ்வண்ணம்
ஆலய பரிபாலனசபை
(C/1345)

சிரிப்பு என்பது மனதை வலிமைப்படுத்தி புத்துணர்வுடன் வைத்திருக்கும் மாமருந்து ஆகும். சிரிக்கத் தெரிந்த ஒரே இனம் மனித இனம்தான்.

- அப்துல்கலாம்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## மியான்மாரில் மேலும் ஒரு நம்பிக்கை!

மியான்மாரில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இடைத்தேர்தலில் ஆங் சான் சூகி தலைமையிலான ஜனநாயகத்துக்கான தேசிய முன்னணி (என்.எல்.டி.) போட்டியிட்ட 44 தொகுதிகளிலும் அமோக வெற்றி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மியான்மார் நாடாளுமன்றில், இரு சபைகளிலுமாக 664 உறுப்பினர்கள் உள்ளனர். இதில் 45 பேர் அமைச்சர்களாகி விட்டதால், மியான்மார் சட்டங்களின் பிரகாரம் அவர்களால் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தொடர்ந்து நீடிக்க முடியாது. எனவே இவர்களது தொகுதிகளிலேயே இடைத்தேர்தல் நடைபெற்றது.

ஆங் சான் சூகியின் ஜனநாயகத்துக்கான தேசிய முன்னணி, 44 இடங்களில் போட்டியிட்டது. காவ்மு தொகுதியில் சூகி போட்டியிட்டார். இவரை எதிர்த்து, ஆளும் கட்சி சார்பில், இராணுவ மருத்துவர் ஒருவர் போட்டியிட்டார். சூகி வெற்றி பெற்றுள்ளதால், அவர் முதன் முதலாக, நாடாளுமன்றுக்குள் நுழைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அவர் எதிர்க்கட்சித் தலைவராகலாம்.

66 வயதான ஆங் சான் சூகி, 22 ஆண்டுகளை சிறையிலேயே கழித்தவர். சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவர். எத்தனையோ இடையூறுகளுடன் மியான்மாரில் ஜனநாயகத்தின் வெற்றிக்காகத் தொடர்ந்து போராடி வருபவர்.

கடந்த 90 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில், ஜனநாயகத்துக்கான தேசிய முன்னணி அமோக வெற்றி பெற்றது. ஆனால், சூகியை ஆட்சியில் அமரவிடாதபடி, அரசு வீட்டுக் காவலில் அடைத்தது. ஏழாண்டுகள் தொடர்ச்சியாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். கடந்த 2010 ஆம் ஆண்டு, நடந்த தேர்தலின் போது, அவர் விடுதலை செய்யப்பட்டாலும், அவர் மீது சில குற் றச்சாட்டுகளை சுமத்தி, அவரை தேர்தலில் போட்டியிடாதவாறு செய்தனர்.

மியான்மாரில் பல தசாப்தங்களின் பின்னர் இடம்பெற்ற மூன்றாவது தேர்தல் இதுவாகும். இராணுவத்தின் ஆதரவுடன், தற்போது ஆட்சியில் உள்ள யூனியன் சொலிடாரிட்டி முன்னேற்றக் கட்சி, இப்போது ஜனநாயக ரீதியாக, சில சீர்திருத்தங்களை கொண்டு வந்துள்ளது. அதில் ஒரு அங்கமான இத்தேர்தலை சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானித்தது.

இத்தேர்தல் முடிவுகள் ஆங் சான் சூகியின் ஜனநாயகத்துக்கான தேசிய முன்னணிக்கு சாதகமாக அமைந்திருப்பதால், மியான்மார் மீது மேற்கு நாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடை நீக்கப்படலாம் என கூறப்படுகிறது.

2009 ஆம் ஆண்டில் மனிதஉரிமைகள் நிலைமை காரணமாக மியான்மார் பல்வேறு சர்வதேச அழுத்தங்களை சந்தித்தது. ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில் கொண்டு வரப்பட்ட ஒரு தீர்மானத்தில் அது தோல்வியடைந்தது. ஆனால் இன்று அந்த நாட்டுக்கு எதிராக எவரும் இல்லை. ஏனென்றால் அது மாறி வருகிறது.

ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில் ஏற்பட்ட தோல்வியை அடுத்து மியான்மார், தனது அயல்நாடுகளுடன், குறிப்பாக ஆசியான் நாடுகளுடன் இணைந்து தனது மனிதஉரிமைகள் நிலைமையை மேம்படுத்துவதற்காக பணியாற்றியது. அதில் கண்ட முன்னேற்றத்தால் மியான்மார் அடுத்த ஆண்டில் ஆசியான் கூட்டத்துக்குத் தலைமை தாங்கும் அளவுக்கு வந்துள்ளது.

ஜனநாயக சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதில் பிரமாண்டமான, நம்பவே முடியாதளவுக்கு முன்னேற்றத்தைக் காண்பித்தது. சக்திவாய்ந்த நாடுகளின் பொறியில் இருந்து இப்படித்தான் மியான்மார் வெளியே வந்திருக்கிறது.

- ஆசிரியர்.

# தொழில் சட்டத்தை மதிக்காவிடின் அமெரிக்காவின் சலுகைகளை இழக்க நேரிடும்

(கொழும்பு)

அரசாங்கம் தொழில் சட்டத்தை மேம்படுத்தாவிட்டால் அமெரிக்காவில் இருந்து இலங்கைக்கு கிடைக்கப்பெறும் வரிச் சலுகைகள் சிலவற்றை இழக்க நேரிடும் என கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய பொதுச் சேவைச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் அரசாங்கம் விரைவில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் என சங்கத்தின் செயலாளர் என்டன் மார்க்ஸ் தெரிவித்துள்ளார்.

தொழில் சட்டதிட்டங்களை வார்த்தைகளால் மாத்திரமன்றி செயலிலும் நிகழ்த்திக்காட்டுமாறு அவர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொழில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக உறுதியளித்தே அரசாங்கம் ஜி.எஸ்.பி வரிச் சலுகையை பெற்றுக் கொண்டதாகவும் சட்டத்தை செயற்படுத்த அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, தனியார் துறை ஊழியர்களின் சம்பள உயர்வு குறித்து தகவல் வழங்குமாறு தொழில்துறை அமைச்சர் காமினி லொக்குகே சம்பளக் கடடுப்பாட்டு சபையிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

எனினும் தனியார் துறையினரின் சம்பள உயர்வு விடயத்தில் அரசாங்கத்தால் பூரண தலையீடு செய்ய முடியாது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## பொருட்களை பதுக்குவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

வர்த்தக நிலையங்களில் விற்பனைக்குரிய பொருட்கள் இருந்தும் அவற்றை விற்க மறுப்பவர்கள் மீதும் பதுக்கிவைத்திருப்போர் மீதும் பாவனையாளர் அலுவலர்கள் அதிகார கட்டளைச் சட்டத்தின்படி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரி என்.சிவசீலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் வர்த்தக நிலையங்களில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் என எதிர்பார்த்து அவற்றை பதுக்கி வைத்து விற்க மறுப்பது பாவனையாளர் அலுவலகள் கட்டளைச்சட்டத்திற்கு முரணானதாகும்.

யாழ்.நகரப்பகுதியில் உள்ள மோட்டார் வாகனங்கள் விற்பனை நிலையங்களில் வாகனங்களை கொள்வனவு செய்யச் சென்ற பாவனையாளருக்கு வாகனங்களை வைத்துக்கொண்டு விற்பனைக்கு இல்லை என விற்பனை நிலைய உரிமையாளர்கள் கூறி அவர்களை திருப்பி அனுப்பியதற்கான முறைப்பாடுகள் எமக்கு கிடைத்துள்ளது.

விலை அதிகரிப்பை எதிர்பார்த்து விற்பனைக்குரிய பொருட்களை பதுக்கி வைத்து விற்பனையை நிறுத்தி வைக்கும் வர்த்தக நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (146)

## கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட ஒயிலில் தண்ணீர் கலப்பு

(திருநெல்வேலி)

சுன்னாகம் நொதேர்ன் பவர் மின்பிறப்பாக்கிகளுக்கு கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட எச்.எவ் ஒயிலில் தண்ணீர் கலப்படம் செய்யப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் இந் நிலையத்தின் மின்பிறப்பாக்கிகளின் உபயோகத்திற்காக 13 ஆயிரத்து 200 லீற்றர் ஒயில் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இதன் மாதிரிகளை சுன்னாகத்தில் உள்ள மேற்படி நிறுவனத்தின் அதிகாரிகள் பரிசோதித்து பார்த்தபோது அதில் கலப்படம் செய்யப்பட்டிருப்பதாக சந்தேகம் கொண்டனர். யாழ்ப்பாண பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு உடன் அதனை தெரிவித்ததை அடுத்து கொலன்னாவ பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ஆய்வுக்குட்படுத்த அனுப்பியிருந்தனர். அதன் முடிவுகள் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த ஒயிலில் கலப்படம் செய்யப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டு கொலன்னாவ பெற்றோலிய கூட்டுத்தாபன ஆய்வு கூடத்திலிருந்து அறிக்கை கிடைத்துள்ளது.

இதனையடுத்து சில நாட்களாக சுன்னாகம் நொதேர்ன் பவர் நிறுவனத்தில் ஒயிலுடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பௌசர் மீண்டும் கொழும்புக்கு அதே ஒயிலுடன் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (137)

## அனுமதியற்ற ஒலிபெருக்கியாளர் மீது சட்ட நடவடிக்கை

(புத்தூர்)

கோப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட பகுதிகளில் ஒலி பெருக்கி வைத்திருப்பவர்கள் பிரதேச செயலகத்தில் அதற்குரிய அனுமதியைப் பெற்று கட்டுப்பாட்டுடன் பயன்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பிரதேசத்திற்குட்பட்ட பகுதியில் அனுமதியின்றி ஒலிபெருக்கிச் சாதனங்கள் பயன்படுத்தப் படுவதாகவும் அதனால் பொதுமக்கள் பெரும் பாதிப்புக்களுக்குள்ளாகி வருவதாகவும், திருவிழா, மற்றும் பொது நிகழ்வுகளின் போது நேர வரையறை இன்றி ஒலிபெருக்கி சாதனங்கள் பயன்படுத்தப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவ்வாறான செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்தப் புதிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. அனுமதியின்றி ஒலிபெருக்கி சாதனங்களை பயன்படுத்துவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இது தொடர்பாக பொலிஸார் விசேட கண்காணிப்பில் ஈடுபடவுள்ளனர் என்று கோப்பாய் பிரதேச செயலர் உதவித்திட்டமிடல் பணிப்பாளர் கிருஸ்ணராசன் தெரிவித்தார்.(02)

## கடற்படை உறுப்பினர்கள் நால்வர் மீது விசாரணை

(கொழும்பு)

கடவத்தைப் பகுதியில் வைத்திய அதிகாரி ஒருவரின் வீட்டில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பில் நான்கு கடற்படை உறுப்பினர்கள் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெலிசர கடற்படை முகாமைச்சேர்ந்த நான்கு கடற்படை உறுப்பினர்கள் தொடர்பிலேயே முறைப்பாடு கிடைத்துள்ளதென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவிக்கையில், கடற்படை உறுப்பினர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஒழுக்காற்று பாதுகாப்புத் திணைக்களத்தினூடாக விசாரணை நடத்தப்படுவதாகக் கூறினார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவரிடம் பொலிஸார் நடத்திய விசாரணையின்போது குறித்த கொள்ளைச் சம்பவத்துடன் கடற்படை உறுப்பினர்கள் நால்வர் தொடர்புபட்டுள்ளதாக கிடைத்த தகவலுக்கு அமைய இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படை பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பாடசாலைகளில் போதைப் பொருள் தடுப்புக் குழுக்கள் அமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நாடு தழுவிய ரீதியில் சகல பாடசாலைகளிலும போதைப்பொருள் பாவனையைத் தடுக்கும் முகமாக போதைப்பொருள் தடுப்புக்குழுக்களை அமைப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகிறது.

அண்மைக் காலமாக பாடசாலை மாணவர்கள பாபுல் உட்பட மற்றும் சில போதைப்பொருள்களுக்கு அடிமையாகி வருவது கண்டறியப்பட்டதை அடுத்து அதனைத் தடுக்கும் நோக்கில் தடுப்புக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

பாடசாலைகளில் உள்ள சிற்றுண்டிச்சாலைகள், மற்றும் பாடசாலைகளைச் சூழவுள்ள வெளிக் கடைகளிலும் போதைப்பொருள் உண்டா என்று கண்காணிக்கும் பொறுப்பு இக்குழுக்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

பாடசாலை அதிபர், பழைய மாணவர் சங்கப் பிரதிநிதி, மாணவத்தலைவர், மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கப்பிரதிநிதி ஒருவரும் இத் தடுப்புக்குழுவில் நியமிக்கப்படவுள்ளனர்.

போதைப் பொருள்களுக்கு அடிமையாகும் மாணவர்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை பாடசாலை அதிபர்கள் மேற்கொள்ளவேண்டும் என சுற்றுநிருபம் மூலம் அவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கிழக்கில் மறுமலர்ச்சி ஏற்படுத்துவோம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



(மட்டக்களப்பு)

வாழ்வெழுச்சித் திட்டத்தினூடாக மட்டக்களப்பு மாவட்டம் உள்ளடங்கலாக கிழக்கு மாகாணத்திலும் சிறிய மற்றும் நடுத்தரக் குடிசைக் கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கு துரிதமான நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரியில் குடிசைக்கைத்தொழில் கண்காட்சியை ஆரம்பித்து வைககும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். முன்பதாக மகாஜனக் கல்லூரியின் பிரதான நுழைவாயிலில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர் வரவேற்கப்பட்டு மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டை கைத்தொழிற் துறையின் மூலம் கட்டியெழுப்ப வேண்டுமென்ற மேன்மை தங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சிந்தனைக்கமைவாக அறிமுகப்படுத்தப்பட்ட 'திவிநெகும' எனப்படும் வாழ்வெழுச்சித் திட்டமானது இன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் வழிகாட்டலுடன் நாடாளவிய ரீதியில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இருவருக்கும் மக்கள் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இம்மாவட்டத்தில் தேவைகள கோரிக்கைகள் தொடர்பில் பலதரப்பட்டோராலும் சுட்டிக்காட்டப்பட்டதற்கமைய கிழக்கு மாகாண சபையின் துறைசார்ந்த அதிகாரிகளுடன் விரைவில் கலந்துரையாடி வாழ்வெழுச்சித் திட்டத்தை எமது அமைச்சினூடாக இப்பகுதியிலும் ஜனாதிபதியின் தலைமையிலும் பொருளா தார அபிவிருத்தி அமைச்சரின் ஆலோசனையின் பிரகாரமும் விரைவாக முன்னெடுக்கவுள்ளோம்.

இத்திட்டத்தின் மூலம் சிறிய மற்றும் நடுத்தர குடிசைக் கைத்தொழில்கள் அபிவிருத்தி செய்யப்படுவதுடன் இதனூடாக தனிநபர் மட்டுமல்லாது நாட்டின் பொருளாதாரமும் மேம்படும் எனறும் சுட்டிக்காட்டினார்.

அங்கு வாழ்வெழுச்சித் திட்டத்தின் நோக்கம் மற்றும் அதன் பயன்பாடு குறித்து பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி விளக்கவுரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் நகர சபைத் தவிசாளருமான அலிசாஹிர் மௌலானா, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் இணைப்பாளர் செல்வி தங்கேஸ்வரி, திவிநெகும திட்டப் பணிப்பாளர் கமகே, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் திருமதி ஜஸ்மின் மன்னப்பெரும, ஈ.பி.டி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மகாஜனக் கல்லூரி மற்றும் கிழக்கு பல்கலைக்கழக விபுலானந்தா இசைநடனக் கல்லூரி மாணவிகளின் நாட்டிய நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வு

(தீவகம்)

எழுவைதீவு கடற்றொழிலாளர்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் சம்பந்தமாக ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தவிசாளர் மு.ஜேக்காந்தனிடம் எழுவைதீவு மக்கள் முறையிட்டதன் பெயரில் கடந்த 29ஆம் திகதி எழுவைதீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டடத்தில் இம்மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

எழுவைதீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் நெல்சன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் விருந்தினர்களாக ஜேக்காந்தன், காரைநகர் - எழுவை தீவுக்கான கடற்படையின் கட்டளையிடும் அதிகாரி கப்டன் சில்வா, எழுவைதீவு கிராம சேவையாளரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின் போது கடற்றொழிலாளர்களின் பாஸ் பிரச்சினைகள் சம்பந்தமாக உரையாடல் இடம்பெற்ற பின்னர் எழுவைதீவு கடற்றொழிலாளர் பாஸ் நடைமுறையில் சில கட்டுப்பாடுகள் தளர்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து தவிசாளர் தெரிவிக்கையில், எழுவைதீவுப் பகுதியில் இருக்கின்ற வீதிகள், உடைவடைந்திருக்கும் பாலங்களைத் திருத்துவதற்கு உரிய அதிகாரிகளிடம் தொடர்பு கொணடிருப்பதாகவும் தெரிவித்தார். (85)

# ஸ்தாபகர் தினம்

(புத்தூர்)

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர் தினமும், பரிசில் வழங்கும் நிகழ்வும் இன்று காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் முதல்வர் அருந்தவசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வராசா சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலைச் சமூகம் கேட்டுள்ளது. (02)

# க.பொ.த.(சா/த) பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

**பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை**

எஸ்.அபிநயா-9ஏ, எஸ்.வாகினி - 9ஏ, எஸ்.சுதேசனா - 9ஏ, ரி.கார்த்திகா - 9ஏ, ரி.வேணுஜா - 9ஏ, வி.அகல்யா - 9ஏ.

ஏ.அனோஜா - 9ஏ, கே.ஆர்த்திகா - 8ஏ,பி, எஸ்.ஜசீதா - 7ஏ,2பி, எஸ்.சர்மிளா - 7ஏ,பி,சி, கே.லினோஜா - 7ஏ, பி,சி, இ.பிரியங்கா - 6ஏ,3பி, ரி.நிவேதினி - 6ஏ,2பி,சி, எஸ்.ஜஸ்வர்யா - 6ஏ,2பி,சி, இ.மேரி பவுஸ்ரினா - 6ஏ,பி,2சி, ஆர்.கர்சிகா - 5ஏ,4பி, எம்.மாதுரி - 5ஏ,4பி, ரி.விதூஷனா - 5ஏ,3பி,சி, கே.சுஜிதா - 5ஏ,3பி,எஸ், பி.தர்சிகா - 5ஏ,2பி,சி,எஸ், எம்.மதூஷா - 5ஏ,3சி,எஸ், எஸ்.கௌசிகா - 5ஏ,பி.சி.எஸ். (116)

**உசன் இராமநாதன் ம.வி.**

எம்.சேனுஜா - 8ஏ,பி, வி.மதுஷா - 8ஏ,பி, வி.சுதர்சன் - 4ஏ,4சி, எஸ்.நிரேகா - 3ஏ,3சி,2எஸ், ரி.பிரிந்தன் - 2ஏ,4பி,2சி,எஸ், ரி.பிரபாஜினி - 2ஏ,2பி,3சி,எஸ், எஸ்.சுகந்தினி - 2ஏ,2பி,3சி,எஸ், வை.துசானி - ஏ,3பி,2சி,3எஸ், எஸ்.விதுஜனன் - ஏ,3பி,4சி, வை.பவிதரன் - ஏ,2பி,2சி,2எஸ், எஸ்.கோமதர்சன் - ஏ.2பி,2சி, 3எஸ், எம்.லக்சிகன் - ஏ,பி,3சி,3எஸ், என்.நிருஷா - ஏ,பி,2சி,2எஸ், கே.சாளினி - ஏ,பி,சி,4எஸ், எஸ்.லகேஸ்வரன் - ஏ,4சி, 2எஸ், எஸ்.கயதீபா - ஏ,2சி,4எஸ், ஆர்.நவநீதன் - பி,2சி,5எஸ். (54)

# நட்டஈடு வழங்க நடவடிக்கை

(யாழ்.நிருபர்)

காரைநகரில் பாதுகாப்புப் படையினரின் தேவைகளுக்காக அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காரைநகர் கடற்படைத்தளத்தினை விஸ்தரிப்பதற்காக ஏற்கனவே சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளில் ஒரு தொகுதியினருக்கு இந்த நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

நட்டஈட்டுக்கான ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றுள்ளதால் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சம்பந்தப்பட்டவர்களை உடனடியாக காரைநகர் பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் இலக்க காணிச் சொந்தக்காரர்கள் பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு காரைநகர் பிரதேச செயலர் திருமதி தே.பாபு தெரிவித்துள்ளார். காணித்துண்டு இலக்கங்கள் - 26, 67, 67 1/2, 68, 90, 93, 125, 126, 131, 149, 151 என்பனவாகும். (10)

# பன்றித்தலைச்சியில் பங்குனி உற்சவம்

(புத்தூர்)

பங்குனி உற்சவத்தை முன்னிட்டு மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் விசேடபூசை வழிபாடுகள் இடம்பெற்றுள்ளன.

வருடத்தில் பங்குனி மாதத்தில் வரும் திங்கட்கிழமைகளில் அம்மனுக்குரிய வழிபாட்டுத்தலமாக அனுஷ்கப்பட்டு வருகிறது. நேற்றைய தினம் பங்குனி மாதத்தில் மூன்றாவது திங்கள் என்பதால் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் இருந்தும் காவடிகள், கரகங்கள், பால்குடம் தாங்கியவாறு பெரும் எண்ணிக்கையான மக்கள் கால் நடையாகத் தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றியும் வழிபாட்டில் கலந்து கொண்டனர்.

அத்துடன் இந்த ஆலயத்திற்குச் செல்வதற்கு அச்சுவேலி தனியார் பஸ் சங்கத்தினால் விசேட போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதேவேளை, முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்திலும் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றதுடன், அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. (02)

# மேற்பார்வையாளர் நியமனம்

(வலிகாமம்)

2010 ஆம் வருடம் முதல் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இரு மொழிக் கல்விச் செயற்றிட்டத்தை மேற்பார்வை செய்வதற்கு மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தரம் 6-13 வரையான மாணவர்கள் தங்கள் தாய்மொழி மூலமும், ஆங்கில மொழி மூலமும் விரும்பிய பாடங்களைக் கற்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

இதனை மேற்பார்வை செய்வதற்கு ஆங்கில பாடத்திற்கு ஆங்கில பாட சேவைக்கால ஆலோசகர் கே.வர்ணகுலசிங்கமும் கணிதபாட ஆசிரிய ஆலோசகர் க.ஸ்ரீகணேசும், விஞ்ஞான பாடத்திற்கு விஞ்ஞான பாட ஆசிரியர் எஸ்.ஸ்ரீகரனும், வலிகாமம் கல்வி வலயத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர். (06)

# துர்நாற்றம் வீசும் மருதடிவீதி



(யாழ்ப்பாணம்)

யாழ்.மருதடி வீதிப்பகுதியில் வீதியோரத்தில் குப்பை கூழங்களைக் கொட்டுவதனால் பெரும் அசௌகரியங்களை சந்திப்பதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் இறந்த மிருகங்களின் எச்சகங்களை வீசுவதனாலும் துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியூடாக பாடசாலை மாணவர்கள் பாடசாலை செல்வதுடன், பிரபலமான வழிபாட்டுதலங்கள் என்பன காணப்படுகின்றன.

எனவே இவ்வீதியில் குப்பை கூழங்களைப் போடாமல் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் மேற்கொள்ளுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (எஸ்)

# கைதி தப்பியோட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையில் இருந்து சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கைதி தப்பியோடியதாகத் தெரியவருகிறது.

இராசரத்தினம் என்ற கைதியே 24ஆம் விடுதியில் இருந்து காணாமல் போயுள்ளார். குறித்த நபருக்கு சிறைக்காவலர்கள் பாதுகாப்பு வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எஸ்)

# கரையோரப் பகுதிகளைப் பாதுகாக்க பௌதீக வள பாதுகாப்புச் செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரத்தின் கரையோரப் பகுதிகளை ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் தலைமையிலான குழுவினர் பார்வையிட்டதுடன் கரையோர பகுதிகளின் பௌதீகச் சூழலை பாதுகாப்பது தொடர்பாகவும் ஆராய்ந்தனர்.

யாழ்.குடாநாட்டில் கரையோரப் பகுதிகளான குருநகர் மற்றும் பாசையூர் கடற்கரைப் பகுதிகளை ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதயன், ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), யாழ்.மாநகர சபை உறுப்பினர் துரைராஜா இளங்கோ (றீகன்) உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்டனர்.

இக் கடற்கரையை அண்டி செறிவாக வாழும் பொது மக்களால் அகற்றப்படும் பிளாஸரிக் மற்றும் கழிவுப் பொருட்கள் கடற்கரையோரங்களில் கரையொதுங்கி காணப்படுவதுடன், கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலை மேற்கொள்வுதற்கு இடையூறுகள் ஏற்பட்டு வருகின்றன.



இக் கழிவுப் பொருட்களை அகற்றுவது தொடர்பில் சம்பந்தப்பட்டோருக்கு பணிப்புரை வழங்கப்பட்டது. இதேவேளை அகற்றப்படாது காணப்பட்ட கழிவு நீர் வாய்க்கால் தொகுதியை பார்வையிட்டதுடன், கழிவுகளை உடனடியாக அகற்றுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டது.

யாழ்.குடாநாட்டின் கரையோரப் பகுதிகளை பாதுகாக்கும் ஈ.பி.டி.பியின் பௌதீக வள பாதுகாப்புச் செயற்பாட்டின் முதற்கட்டமாகவே இவ் நேரடி விஜயத்தை ஈ.பி.டி.பியின் உயர்மட்டக் குழுவினர் மேற்கொண்டனர். பிளாஸ்ரிக் கழிவுகளால் கடல்வாழ் உயிரினங்களையும் தாவரங்களையும் பாதுகாக்கும் செயற்பாட்டில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் ஈடுபட்டிருப்பது கரையோரப் பகுதி மக்கள் மத்தியிலும் சமூகவள ஆர்வலர்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பை பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

# வவுனிக்குள வாய்க்கால்கள் துரித கதியில் புனரமைப்பு

(முல்லைத்தீவு)

வவுனிக்குளம் மற்றும் அதன் கீழுள்ள பிரதான நீர் விநியோக வாய்க்கால்கள், கழிவு நீர் வாய்க்கால்கள் என்பன 585 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டு வருகின்றன. கடந்த பல ஆண்டுகளாக புனரமைப்புக்கள் எவையுமின்றி வவுனிக்குளம் காணப்பட்டது. கடந்த ஆண்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின்கீழ் 585 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதன் புனரமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 240 மில்லியன் ரூபா செலவில் குளத்தின் உள்ளகப் புனரமைப்புப் பணிகள் கடந்த ஆண்டு ஜுன்மாதம் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இந்தக் குளத்தின் கீழ் உள்ள இடது கரை மற்றும் வலதுகரை வாய்க்கால்களின் புனரமைப்புக்கள் ஏனைய சிறு வாய்க்கால்களின் புனரமைப்புக்கள் என்பன தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்நிலையில் இந்தக் குளத்தின் கீழ் உள்ள சுமார் 6897 ஏக்கர் செய்கை நிலப்பரப்புக்களில் தற்போது 4500 ஏக்கர் வரையான பகுதிகளிலேயே செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில் இந்தக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் நிறைவடையும்போது மேற்படி 6897 ஏக்கர் நிலப்பரப்புகளிலும் நெற்செய்கைகளை மேற்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# வெள்ளோட்டம்

(காரைநகர்)

காரைநகர் - வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சப்பறரதம் வெள்ளோட்ட விழா எதிர்வரும் 11ஆம் திகதி புதன் கிழமை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. (50)

# வடமராட்சியில் 16 குடும்பங்களுக்கு சுய தொழிலுக்கான உபகரணம்

(வடமராட்சி)

யாழ்ப்பாணம் உதயதாரகை மகளிர் சம்மேளனம் பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச செயலகப்பிரிவில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 16 குடும்பங்களுக்கு சுய தொழில்களை மேற்கொள்வதற்கான உபகரணங்களை வழங்கியுள்ளது.

யாழ்.குடாநாட்டில் மேற்கொண்டுவரும் சுயதொழில் உதவித்திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெண்களை தலைமைத்து வமாக கொண்டதுமான 16 குடும்பங்கள் பிரதேச செயலக சமூக சேவைப்பிரிவின் முழு உதவியுடன் வடமராட்சி வடக்குப் பிரிவினால் தெரிவு செய்யப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு சுய தொழில்களை மேற்கொள்ள வசதியாக தையல் இயந்திரம், கடற்தொழில் உபகரணங்கள் மற்றும் கால்நடை வளர்ப்பிற்கான கோழிகள், ஆடுகள் என்பன வழங்கப்பட்டன.

சுய தொழில் உதவிக்கு தெரிவான பயனாளிகளில் இ.பரமேஸ்வரி, பு.அங்கயற்கன்னி, சு.நிர்மலாதேவி ஆகிய மூவருக்கும் தையல் இயந்திரங்களும், கு.இரத்தினம்மா, கெ.ஜெகதீஸ்வரி, ப.கனகாம்பிகை, மு.கமலாதேவி, சோ.மங்கையற்கரசி, கு.ஜீவராணி, கு.கலாதேவி, ச.ஜெட்தா ஆகிய எட்டு பேருக்கும் கடற்தொழில் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

எஞ்சியவர்கள் சி.பராசக்தி, பா.லலிதாமணி, பெ.கிருபாலட்சுமி, க.சல்பேற்றம்மா ஆகிய நான்கு பேருக்கும் ஆடு வளர்ப்புக்கான நல்லின ஆடுகளும், தனுசியாவுக்கு கோழிவளர்ப்புக்கான கோழிகளும் வழங்கப்பட்டன.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக உதயதாரகை மகளிர் சம்மேளனம் தொடர்ந்தும் மக்களுக்காக உதவிகளை வழங்கவுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. (116)

# பாதுகாப்பற்ற பயணம்; குடும்பஸ்தருக்கு கால் முறிந்தது

(யாழ்ப்பாணம்)

தண்ணீர் பவுசர் தடம் புரண்டதில் அதற்கு மேலிருந்து பயணம் செய்த குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புளியம் பொக்கணைப் பகுதியில் நேற்று முன்தினம் காலை இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த வீதியில் கனரக வாகனமென்றிற்கு வழி விட்டுக் கொடுக்கும் போது பவுசர் வாகனம் தடம் புரண்டுள்ளது. இதில் உடையார்கட்டுப் பகுதியைச் சேர்ந்த எஸ்.பத்மநாதன் (வயது - 48) என்ற குடும்பஸ்தரே கால் முறிந்த நிலையில் கிளிநொச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

# முரசின் இன்றைய பலன்

(03.04.2012 –செவ்வாய்க்கிழமை)

கர வருஷம் பங்குனி 21 ஆம் திகதி. ஏகாதசி முற்பகல் 5.02 வரை. நட்சத்திரம் மகம் பின்னிரவு 5.02 வரை. சித்தயோகம். இராகுகாலம் 3.10 - 4.40 வரை. சுபநேரம் 10.40- 12.10 வரை. எமகண்டம் 9.10 -10.40 வரை. குளிகைகாலம் 12.10 - 1.40 வரை. ஏகாதசி விரதம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | காரியலாபம், திருப்பணிகளில் நாட்டம், உடல் நலனில் அக்கறை, செலவுகள் அதிகரிப்பு. |
| ரிஷபம் | உற்சாகம், மறைமுக எதிர்ப்புக்கள் குறையும், நட்புத் தேடிவரும், பொன்பொருள் சேரும். |
| மிதுனம் | காரியானுகூலம், வீண்விவகாரங்களை தவிர்க்கவும், வீண் செலவுகள், முன்னெச்சரிக்கை. |
| கடகம் | சாதனைகள், நம்பநட நம்பி நடவாதே, அரச மானியம் கிடைக்கும், சுப காரியம் கை கூடும். |
| சிம்மம் | தொழில் நலம், கொடுக்கல் வாங்கலில் திருப்தி, சேமிப்புப் பெருக்கம், பிணை போவதில் கவனம். |
| கன்னி | இருப்பிட மேன்மை, ஆரோக்கியத்தில் திருப்தி, கருத்து வேறுபாட்டால் சஞ்சலம், சுப காரியம. |
| துலாம் | செலவு அதிகரிப்பு, பேச்சில் நிதானம் நன்று, வேலைபளு அதிகரிக்கும், ஞாபக மறதி. |
| விருச்சிகம் | பொருள் விருத்தி, மருத்துவச் செலவுகள், பயண அலைச்சல், எதிர்பாராத இடமாற்றம். |
| தனுசு | குடும்ப விருத்தி, தகுதிக்கேற்ற வேலை வாய்ப்பு, கடன் வசூலாகும், எதிர்ப்புகள் மறையும். |
| மகரம் | சந்திராட்டமம் – பயணம் கூடாது, குடும்பத்தில் வறுமை, தேவையற்ற அலைச்சல், சிக்கனம நன்று. |
| கும்பம் | சுப காரியம், முற்கோபம் தவிர்க்கவும், குடும்பத்தில் மனஸ்தாபம், உறவினர் அனுசரணை. |
| மீனம் | மனத்தயக்கம், அனாவசிய செலவுகள், உறவினரால் இடையூறு, உயர்வுகள் தடைப்படும். |

# நிழற்படக்கண்காட்சி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் பொது நூலக மண்டபத்தில் முன்பள்ளிச் சிறார்களை ஊக்குவிக்கும் திட்டத்தில் கீழ் நிழற்படக் கண்காட்சி ஒன்று இடம்பெற்றது.

சுதர்சன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விருந்தினர்களாக ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தவிசாளர் மு.ஜேகாந்தன் மற்றும் பிரதேச சபையின் உறுப்பினர் அல்பேட் மாஸ்ரர், சன சமூக நிலையங்களின் உத்தி யோகத்தர்களும் மற்றும் முன் பள்ளி சிறார்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். (85)

# மின்வசதி இல்லை; கல்விச் செயற்பாடு பாதிப்பு

(வலிகாமம்)

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் வீமன்காமம் மகா வித்தியாலயம் சொந்த இடமாகிய வீமன்காமத்தில் இயங்கி வருகின்றது.

இந்நிலையில் அதிபர் காரியாலயம், வகுப்பறைக்கட்டடங்கள் என்பவற்றுக்கான மின்சார வேலைகள் முடிவுற்றிருந்த போதிலும் இதுவரை மின்சார விநியோகம் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக மின்சார சபையினருக்கு அறிவித்திருந்த போதும் பிரதான வீதியிலிருந்து பாடசாலைக்கு மின் இணைப்பை ஏற்படுத்துவதற்குரிய செலவை யார் பொறுப்பேற்பது என்ற நிலையில் இந்த மின் இணைப்பு இழுபறியில் காணப்படுகின்றது.

இதன் காரணமாக நவீன கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்தி மாணவர்களிற்கு கற்பிக்க முடியாதுள்ளதாக அதிபர், ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர். அத்துடன் பாடசாலைக்கு நலன் விரும்பிகளால் வழங்கப்பட்ட போட்டோ பிரதி இயந்திரத்தையும் காரியாலயத்தேவைக்கும் பயன்படுத்த முடியாமல் உள்ளதாகவும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் குடிநீர் பிரச்சினையையும் எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (06)

# பதிவு இல்லாத பட்டதாரிகள் சங்கத்தால் தீவக பட்டதாரிகள் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

பதிவு செய்யப்படாது இயங்குகின்ற வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் தீவக பிரதேசங்களிலுள்ள வேலையற்ற பட்டதாரிகளைப் புறக்கணித்து வருவதாக அறிய முடிகின்றது.

யாழ்.குடாநாட்டில் விதிமுறைகளுக்கு அமையாது இயங்குகின்ற வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் எனும் அமைப்பு எதுவிதமான அறிவிப்புக்களோ, பகிரங்கமான ஊடக வெளிப்படுத்தல்களைளோ இன்றி சுயமாகவே தாம் ஓர் நிர்வாகமாக இயங்குவதாக காட்டிக் கொள்வதுடன், வேலை வாய்ப்பு விடயங்களில் அனைவரையும் உள்வாங்காது செயற்படுவதாக தீவக பிரதேச வேலையற்ற பட்ட தாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தற்போது சுயமாக தயார் செய்து அனுப்பப்பட்டுள்ள வேலை வாய்ப்பு விண்ணப்பங்களில் வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு போன்ற பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள வேலையற்ற பட்டதாரிகளின் பெயர் விபரங்கள் முற்று முழுதாக புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

மிகுந்த பொருளாதார நெருக்கடிக்குள்ளும், வறிய குடும்பங்களைச்சேர்ந்த பட்டதாரிகளின் கல்வியூடாக தமது வாழ்வை நிலைப்படுத்திக் கொள்ள முற்படுகின்ற போது, இவ்வாறான செயற்பாடுகள் தமக்கு கவலை அளிப்பதாக அப் பட்டதாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

எனவே இது விடயத்தில் சகல பிரதேச வேலையற்ற பட்டதாரிகளையும் உள்வாங்குவதுடன், பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச சபைகளின் ஊடாக பெறப்பட்ட வேலையற்ற பட்டதாரிகளின் விபரங்களை உள்வாங்குவது சிறந்ததொரு செயற் பாடாக அமையும் என தீவக பிரதேச பட்டதாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (69)

# சிறிகொத்தா தாக்குதல் அறிக்கை ஒரு பக்கச்சார்பு எழுத்து ஆவணம்

## குற்றம் சாட்டுகிறார் கரு ஜயசூரிய

(கொழும்பு)

சிறிகொத்தா தாக்குதல் தொடர்பாக ஸ்ரீநாத் பெரேரா குழு வெளியிட்டுள்ள அறிக்கை நடுநிலையற்ற பக்கசார்பான செயற்பாடொன்றின் எழுத்து மூல ஆவணமாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜய சூரிய தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே அனுமானிக்கப்பட்ட மற்றும் முன்கூட்டியே தயார்படுத்தி வைக்கப்பட்ட பல்வேறு பரிந்துரைகள் உறுதிப் படுத்தப்பட்டு அறிக்கையாக தயாரித்து சமர்ப்பிப்பதற்கான முயற்சியை இந்த நடவடிக்கை பிரதிபலிப்பதாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறிகொத்தாவில் தேர்தலின் போது செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் பாதுகாப்பு உறுப்பினர்களைத் தவிர வெளி நபர்கள் பிரவேசிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்ததை குறித்த குழு திட்டமிட்ட வகையில் கவனத்திற்கொள்ளவில்லை.

தேர்தல் சந்தர்ப்பத்தில் ஒரு குழுவினர் சட்டவிரோதமாக சிறிகொத்தவிற்குள் தங்கியிருந்ததை ஸ்ரீநாத் பெரேரா குழு இறுவெட்டுக்கள் ஊடாகவே, புகைப்படங்கள் மூலமாகவோ காணவில்லை.

முன்கூட்டியே அவர்கள் உட்பிரவேசிப்பதற்கான அனுமதியை வழங்கியது யார்? ஆயுதங்களுடன் இருந்த அவர்களை வெளியேற்றுவதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டதாக தெரியவில்லை.

குறித்த குழுவினர் நிராயுதபாணிகளான நபர்களையும், பெண்களையும் பின்தொடர்ந்து தாக்குதல் நடத்திய விதத்தை தொலைக்காட்சி அலைவரிசைகள் தெளிவாக ஒளிபரப்பிய போதிலும், அந்தக் குழு அது தொடர்பில் மௌனம் சாதித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.



தேர்தலின் போது, ரணில் விக்ரமசிங்கவிற்கு சார்பான தரப்பினரைப் போன்றே எதிர்த்தரப்பினரும் அங்கு இருந்தமை வெளிப்படையான விடயமாகும்.

சிறிகொத்தா மீதான தாக்குதலை பயன்படுத்தி ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிரான குழுவினரை அரசியல் தூக்கு மேடையை நோக்கி இட்டுச் செல்வதற்கு குறித்த குழு முயற்சித்துள்ளமை கவலைக்குரிய விடயம்.

சிறிகொத்தாவுக்கு வெளியே இருந்தவர்கள் தூண்டுதல் காரணமாக அங்கு வரவில்லை ஒருவரைச்சுட்டிக்காட்டும் போது தம்மை நோக்கி நான்கு விரல்கள் திரும்பும் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும் என்றார்.

# 5 இலங்கையர்கள் உட்பட 24 பேர் மலேசியாவில் கைது

(கொழும்பு)

மலேசியாவிற்குள் சட்டவிரோதமாக நுழைய முயற்சித்ததாகக் கருதப்படும் 5 இலங்கையர்கள் உள்ளிட்ட 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மலேசியாவின் பென்கொராங் கிராம வாசிகள் 20 பேர் இணைந்து குறித்த 24 வெளிநாட்டவர்களையும் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

ஒரு வான் மற்றும் இரு கார்களில் வந்திறங்கிய 24 வெளிநாட்டவர்கள் பென்கொராங் கிராமத்தில் 10 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தாதுள்ள பாடசாலை ஒன்றிற்குள் செல்ல முயற்சித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் 14 ஆப்கானியர்களும் 3 பாகிஸ்தானியர்களும் 5 இலங்கையர்களும் அடங்குகின்றனர்.

கைது செய்யப்பட்டுள்ளவர்களின் கடவுச்சீட்டு செல்லுபடியானதா? இல்லையா?என்பது குறித்து மலேசிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டால் மலேசிய ஆட்கடத்தல் சட்டத்தின் கீழ் 15 வருடகால சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கல்வியமைச்சு சுற்றறிக்கை; விரிவுரையாளர்கள் அதிருப்தி

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், வெளியார்களினால் ஏற்பாடு செய்யப்படும் கருத்தரங்கு மற்றும் நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு தடைவிதித்து கல்வியமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்க சம்மேளனம் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.

இந்தச் சுற்றறிக்கையின் படி அரசாங்க நிறுவனங்கள் அல்லாத ஏனைய அமைப்புக்களினால் ஏற்பாடு செய்யப்படும் கல்வி தொடர்பான நிகழ்வுகளில் அவர்கள் கலந்து கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடைக்கு தாம் வெளிப்படையாக எதிர்ப்பை தெரிவிப்பதாக சம்மேளனத்தின் தலைவர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

சுற்றறிக்கை குறித்து கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஜீ.ஜீ. ஜயசிங்க தெரிவிக்கையில்,

விரிவுரையாளர்கள் வெளிநிகழ்வுகளில் கலந்துகொண்டு பல்கலைக்கழகத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்கிறார்கள். இந்தநிலையிலேயே அமைச்சரவையின் பணிப்புரைக்கு அமைய இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

# பரீட்சைக்குச் செல்லாமல் பெறுபேறு கிடைக்குமா?

(கொழும்பு)

க.பொத சாதாரண தர பரீட்சைக்குச் செல்வதாகக் கூறி பெற்றோரை ஏமாற்றியதுடன் பெறுபேறு வெளியாகியதும் பரீட்சைகள் திணைக்களத்தின் மீது பழி சுமத்திய சம்பவமொன்று கம்பஹா மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

தனது பிள்ளை நடன பாடத்துக்குத் தோற்றியும், பெறுபேறுகள் அனுப்பப்படவில்லை எனவும் இது பரீட்சைத் திணைக்களத்தின் அசமந்தப் போக்கு எனவும் கடுமையாகச் சாடி கம்பஹா மாவட்டத்திலுள்ள ஒரு மாணவியின் தந்தை முறைபாடு ஒன்றை கம்பஹா மாவட்ட பொலிஸ் நிலையத்தில் செய்திருந்தார்.

இந்த முறைப்பாடு குறித்து கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தனாவும் கல்வி அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவந்திருந்தார். இவ் விடயம் தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்துமாறு அமைச்சர் பரீட்சை ஆணையாளருக்கு வழங்கிய பணிப்பின் பேரில் விசாரணைகள் நடத்தப்பட்டபோது குறித்த மாணவி எல்லோரையும் ஏமாற்றியுள்ளமை தெரியவந்துள்ளது.

கம்பஹா மாவட்டத்திலுள்ள பிரபல பாடசாலையொன்றில் கல்வி கற்றுவரும் குறித்த சிங்கள மாணவியை கபொத சாதாரணதர பரீட்சை தினத்தன்று இவரின் தந்தை மாணவியை



பரீட்சை மண்டபத்துக்கு அழைத்து வந்து விட்டுச் சென்றுள்ளார். எனினும் குறித்த மாணவி பரீட்சை மண்டபத்துக்குள் வரவில்லையென பரீட்சை மண்டப பொறுப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள், சக மாணவர்களும் உறுதி செய்துள்ளனர்.

விசாரணைகளின் இறுதியில் குறித்த மாணவி பெற்றோரை ஏமாற்றியது மட்டுமல்லாமல் பழியை பரீட்சைத்திணைக்களத்தின் மீது சுமத்தியுள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டதாக பரீட்சை ஆணையாளர் புஷ்பகுமார தெரிவித்தார். பெற்றோரை ஏமாற்றி பரீட்சை மண்டபத்துக்கு செல்வதாக போக்குக் காட்டியதாலேயே க. பொ. த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய மாணவிக்கு நடன பாடத்துக்கான பெறுபேறுகள் கிடைக்கவில்லையென அவர் தெரிவித்தார்.

## - மூன்று மாத காலப்பகுதிக்குள் -

# 578 பேரை காவு கொண்டது வீதி

(கொழும்பு)

நாடுமுழுவதும் இவ்வருடம் மார்ச் 28 ஆம் திகதிவரையான 3 மாத காலப்பகுதியில் வீதி விபத்துக்களால் 578 பேர் உயிரிழந்ததுடன் 1270 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை காலை 6.00 மணிமுதல் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிவரையான 24 மணித்தியாலங்களில் வீதி விபத்துக்களால் 11 பேர் பலியானதுடன் 23 பேர் காயமடைந்தனர்.

கடுவெலயில் நடைபெற்ற விபத்தொன்றில் இருவர் பலியானதுடன் 7 பேர் காயமடைந்தனர். ஆடைத்தொழிற்சாலையொன்றின் ஊழியர்களை ஏற்றிக்கொண்டு வந்த பஸ் ஒன்றுடன் கார் ஒன்று மோதியதால் இந்த அனர்த்தம் ஏற்பட்டது.

கேகாலையில் பஸ் ஒன்றும் வான் ஒன்றும் மோதியதால் இருவர் பலியானதுடன் 6 பேர் காயமடைந்தனர்.

குருநாகல் நாரம்மலவில் மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் 24 வயதான இளைஞர் ஒருவர் பலியானார். நுவரெலியா - பதுளை வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலியானதுடன் இருவர் காயமடைந்தனர். அம்பலாங்கொடையில் வான் ஒன்றும் - ட்ரக் ஒன்றும் மோதிக்கொண்டதால் ஒருவர் பலியானார்.

# மேற்கு நாடுகளே யுத்தக் குற்றவாளிகள்



உலகம் வெப்ப மயமாதலுக்கு பங்களிப்புச் செய்யும் நாடுகளே உண்மையான யுத்தக் குற்றவாளிகள் என ஜனாதிபதி மகிந்த தெரிவித்துள்ளார். கண்டியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உலகம் வெப்ப மயமாதல் காரணமாக உலகின் தாவரங்கள், விலங்குகள் உள்ளிட்ட சகல ஜீவராசிகளும் அழிவடையக் கூடிய அபாயம் காணப்படுகின்றது.

உலகம் வெப்ப மயமாதலுக்கு பங்களிப்புச் செய்யும் நாடுகளே உண்மையில் மனித உரிமைகளை மீறுகின்றன. இயற்கைக்கு குந்தகம் ஏற்படும் வகையில் மேற்குலக நாடுகளே செயற்பட்டு வருகின்றன. உலகம் வெப்பமயமாதல் நடவடிக்கைகளுக்கு பங்களிப்புச் செய்யும் நாடுகளில் அமெரிக்கா முன்னிலை வகிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

# நாட்டினை வழிநடத்த தவறியுள்ள ஊடகங்கள்

## அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையின் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் பிரதான செய்திகள் பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் மையப்படுத்தியவையாக உள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் சந்திரபால லியனகே தெரிவித்துள்ளார். அரசியல் பழிவாங்கல் மற்றும் மனித உரிமைப் பிரச்சினை என்ற போர்வையில் சர்வதேச சமூகத்திற்கு செய்திகளை விற்பனை செய்யவே ஊடகங்கள் முயற்சிக்கின்றன.

இவ்வாறான செய்திகளினால் ஊடக நிறுவனங்களுக்கு இலாபம் கிடைக்கக் கூடும் என்ற போதிலும், அது சமூகத்திற்கு பாரியளவில் பாதகத்தை ஏற்படுத்தும் சில ஊடகங்களின் செய்திகள் மக்களின் மனதை மாற்றும் வகையில் அமைகின்றன.

இவ்வாறான விடயத்தை விற்பனை செய்து இலாபமீட்ட நினைக்கும் ஊடகங்களை குப்பைக் கூடைகளாகவே கருத வேண்டும். மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதே ஊடகங்களின் பாரிய பொறுப்பு. ஊடகம் என்பது பொதுச்சொத்து அதனை மிகவும் நிதானமாக பயன்படுத்த அனைவரும் பழகிக்கொள்ள வேண்டும். ஊடகம் தொடர்பில் தேசியக் கொள்கைகள் வகுக்கப்பட வேண்டியது அவசியமானது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மின்சாரத்தை சேமிக்க வீதி விளக்குகள் அகற்றல்

(கொழும்பு)

மின்சாரத்தைச் சேமிக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் மேலதிக வீதி விளக்குகளை அகற்றவும் வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள அதிசக்தி கொண்ட மின்குமிழ்களுக்கு பதிலாக குறைந்த சக்தி கொண்ட மின்குமிழ்களை பொருத்தவும் மாகாண விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது .

இதற்கு மேலதிகமாக விடியற் காலையில் சகல வீதி விளக்குகளையும் அணைத்துவிட அதற்குப் பொறுப்பான ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியா - இலங்கை உறவில் பழுது பார்க்கும் வேலை அவசியம்



SALMAN HAIDAR

**ஐ.நா.** மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின் ஒருவித சீற்ற உணர்வு நாடெங்கும் வியாபித்துள்ளது. அந்த தீர்மானத்தை முன்வைத்த அமெரிக்கா பொது மக்களின் பயங்கரக் கோபத்துக்கு இலக்காகியுள்ளது. அமெரிக்காவுக்கு எதிரான வீதி ஆர்ப்பாட்டங்கள் அரங்கேறி உள்ளதுடன், அமெரிக்க பொருட்களைப் புறக்கணிக்குமாறு அழைப்புகளும் விடுக்கப்பட்டுள்ளன.

பின் விளைவாக உருவான கோபம் தொடருகிறது. கொழும்பில் வெளியாகும் வலுவான அச்சுறுத்தல் தொனியில் அமைந்துள்ள அறிக்கைகள் அவமதிப்புக்கு உள்ளான அந்த நகரத்தின் மனநிலையைப் பிரதிபலிக்கிறது.

மறுபக்கம், அமெரிக்க இராஜாங்கச் செயலாளர், பேரவையின் பரிந்துரைகளை விரைவாக நடைமுறைப்படுத்துமாறு கேட்டுள்ளார். மற்றொரு மூத்த அமெரிக்கப் பேச்சாளர்,இராஜாங்கச் செயலாளரின் வேண்டுகோளை எதிரொலிக்கும் வகையில், பேரவையின் தீர்மானத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒரு திட்டத்தை வரையும்படி இலங்கையிடம் கேட்டுள்ளார்.

- சல்மான் ஹைதர்
(முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர்)

அமெரிக்கா எழுப்பியுள்ள கோரிக்கைகளின் தொனி பயமுறுத்துவதாக இல்லாத போதிலும், இலங்கையின் திசையிலுள்ள கண்டனங்களையிட்டு திருப்திப்பட்டு ஓய்ந்துவிடும் எண்ணத்தில் அது இல்லையென்றே தெரிகிறது.

தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி விடப்படும் கோரிக்கைகள் வலுவானதாக இருப்பதோடு, இலங்கையின் மனித உரிமைகள் மீறல்களைப் பற்றிய பொறுப்புக்கூறல் உறுதியாக வழங்கப்பட வேண்டிய தேவையும் உள்ளது. கடந்தகால நிகழ்வுகளுக்கு பொறுப்புக்கூறாமல் நிலையான சமாதானத்தை அடைய முடியாது என்று விவாதிக்கப் படுகிறது.

அமெரிக்க அதிகாரிகளின் செய்தி, இலங்கை அரசாங்கத்தின் மன நிலையை எந்த விதத்திலும் சமாதானப் படுத்துவதாக இல்லை. அநேகரைப்பாதிப்படையச் செய்ததும் கணக்கிட முடியாத கொடுமைகளை இலங்கை மக்களுக்கு இழைத்ததுமான ஆபத்தான கிளர்ச்சியாளர்களினால் பாதிக்கப் பட்டுள்ளது என்கிற காரணத்தை அது முன்வைக்கிறது.

மிகவும் உயர்மட்ட தலைவர்கள் முடிவில்லாது இலக்கு வைக்கப்பட்ட தொடர் கொலைத் தாக்குதல்களினால் அநியாயமாகக் கொல்லப்பட்டார்கள். எல்.ரீ.ரீ.ஈ யின் பயங்கரவாதம், அதன் தற்கொலைத் தாக்குதல்களாலும் மற்றும் சிறுவர் போராளிகளைப் பயன்படுத்தும் பயங்கரவாத உத்திகளை கையாண்டதாலும் உலகப் பிரசித்தம் பெற்றிருந்தது.

இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்த தமிழர்கள், அதன் ஆயுதத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தனது வளங்களைக் கவனமாகப் பாய்ச்சியது, படிப்படியாக மேற்கொண்ட தாக்குதல்கள் மேலும் பயமற்ற நிலையை தோற்றுவித்தது. நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து, தமிழ் பகுதிகளை ஒரு கற்பனையான பிரிவினை மூலம் பிரித்தது, ஒரு ஆயுதப்படையின் நிறுவலை தோற்றுவித்தது.

எல்.ரீ.ரீ.ஈ நாட்டுக்குள்ளேயே மற்றொரு தனி நாட்டை நடத்தியது, அதன் முழு ஆட்சி அதிகாரத்தையும் அதுவே கொண்டிருந்தது. தனது கட்டுப்பாட்டை நிலைநிறுத்த அத்தகைய இரக்கமற்ற எதிரியுடன் போராட கொழும்பு முயற்சித்தபோது சர்வதேசத்தின் ஆதரவு அதற்கு தாராளமாகவே கிடைத்தது. இதற்கு ஒரு தீர்வினைக் கண்டு இருபகுதியினரிடத்தும் மத்தியஸ்தம் மேற்கொண்டு சமரசத்தை ஏற்படுத்த ஏராளமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த முயற்சிகள் யாவும் பெருமளவில் பயனற்றவை என்பதனையே நிரூபித்தன, ஏனெனில் கிளர்ச்சியாளர்கள் தங்கள் இறுதி இலட்சியத்துக்கு குறைவான எதனையும் நிராகரிப்பதில் பிடிவாதமாக இருந்தனர். இறுதிக் கட்டத்தில் மத்தியஸ்தர்களின் முயற்சிகள் யாவும் நிறுத்தி வைக்கப்படும் நிலைக்கு வந்துவிட்டது என்றே தோன்றியது, இதனால் கொழும்பு எல்லாவற்றையும் விட்டு இராணுவத் தீர்வு என்ற ஒன்றைத்தான் தேடுவதற்குதான் கட்டுப்பட்டிருப்பதாக உணரத் தொடங்கியது.

கொழும்பு, மிகக் கடுமையான இராணுவ மோதலைத் தன் வழியில் முன்னின்று நடத்தி, இறுதியில் அதில் வெற்றியும் பெற்றதால் உலகம் அதன் வழியில் குறுக்கே நிற்கவில்லை. கிளர்ச்சி ஒரு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. வெற்றியின் சிற்பியான ஜனாதிபதி ராஜபக்ஷ, பயங்கரவாதம் சமாதானத்துக்கும் மற்றும் நல்லொழுங்குக்கும் பிரதான எதிரி என அடையாளப் படுத்திக் கொண்ட ஒரு சர்வதேச சமூகத்திடமிருந்து ஏராளமான பாராட்டுக்களைப் பெற்றார். இதன்படி எல்.ரீ.ரீ.ஈயினை அழித்தது, ஒரு சாதகமான ஆதாயம் என பலராலும் பார்க்கப்பட்டது.

ஆனால் இறுதிப் போராட்டத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகள், விரைவிலேயே சர்வதேச ஊடக வளங்களினதும் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களினதும் கண்டனங்களுக்கு இலக்காக நேர்ந்தது. பொதுமக்களின் மரணங்களின் எண்ணிக்கை மிக அதிகம் எனவும், விமர்சனங்கள் குவிந்தன. மற்றும் வெளிநாட்டு பார்வையாளரின் கண்களுக்கு, இங்கு பிரதிபலித்த வெற்றிக் கொண்டாட்ட உணர்வுகளைப் பற்றிய வெற்றிகரமான பிரச்சாரங்கள் மங்கிப் போகத் தொடங்கின.

அல்லது, சண்டை நடந்தபோது, பெரும்பான்மை சிங்களவர்கள், மற்றும் ஒரு சிறுபான்மைத் தமிழர்கள், ஆகியோருக்கு இடையில் ஒரு நல்லிணக்கத்தை தேடும் தீர்க்கமான முயற்சியில் கொழும்பு ஈடுபட்டதற்கான சான்றுகள் இருந்தனவா என்று பார்த்தால், உண்மையில் இதற்காக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்ற ஒன்று அமைக்கப்பட்டது. ஆனால் இது இன்னும் அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்றே தோன்றுகிறது, ஐநா மனித உரிமைப் பேரவையில் எழும் விமர்சனங்களை எந்த விகிதத்திலும் திசை திருப்புவதற்கு இது போதுமானதாக இல்லை.

அர்த்தமுள்ள நடவடிக்கைகள் குறைவாகவே உள்ளன என்று உணரப்பட்டதனால், அது அதிருப்தியை ஏற்படுத்தியதோடு, ஐநா மனித உரிமைப் பேரவையில் இலங்கையைப் பற்றிய முக்கிய பிரேரணையை வெற்றிபெறவும் உதவி செய்தது. மனித உரிமைகள் பற்றிய விடயங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவையாக இருப்பதுடன், உலகெங்கும் உள்ளவர்கள் அதற்கு ஆதரவாக குரல் எழுப்புவதுடன், மனித உரிமைகள் மீறல்கள் சம்பந்தமான நிகழ்வுகளை அடையாளம் கண்டு அவற்றைத் தடுப்பதற்கான முயற்சிகளில் அவர்கள் விழிப்பாக உள்ளார்கள் என்பதற்கு இது சான்றாக உள்ளது. காஷ்மீரில் தீவிரவாதம் உச்சத்தில் தலைதூக்கிய போது, இந்தியாவும் கிட்டத்தட்ட இதே போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டபோது, ஜெனிவாவில் புதுடில்லி அதற்கு பதிலளிக்க வேண்டியிருந்தது.

ஆரம்பத்திலிருந்தே தனது அண்டை நாடான இலங்கையில் ஏற்பட்ட இனப்பிரச்சினைகள் காரணமாக இந்தியா மிகவும் நெருக்கமாக பாதிக்கப்பட்டது.அதில் பல ஏற்றத்தாழ்வுகள் இருந்தன, அவைகளைத் திரும்பவும் இங்கே நினைவுபடுத்துவது தேவையற்ற ஒன்று. கடந்த சில தசாப்தங்களாக, இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகள், அநேகமாக பதற்றமானதாகவும் நிச்சயமற்றதுமான நிலையில் இருந்தது என்பதை மட்டும் நினைவு கூர்ந்தால் போதுமானது.

இந்த நெருக்கமான அயலவர்களின் தீர்க்கப்படாத நிலை, வெவ்வேறு குழுக்களிடையே ஓரளவு சமரசத்தை ஏற்படுத்தும் முயற்சியில் இந்தியாவின் தலையீட்டை உள்வாங்கும் நிலைக்கு கொண்டு சென்றதுடன், அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இந்திய அமைதி காக்கும் படை இலங்கைக்கு அனுப்பப் பட்டது. அது சாதித்தது கொஞ்சம்தான், முரண்பாடுகள் தீவிரமாகியதன் காரணமாக இறுதியில் இந்தியா அதன் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட துயர நிகழ்ச்சிக்கு முகம் கொடுக்க வேண்டியும் ஏற்பட்டது.

அதைத் தொடர்ந்து இந்தியா எச்சரிக்கையாக ஒரு குறிப்பிட்ட தூரம் ஒதுங்கி நின்று, இலங்கையின் இனப் பிளவுகளுக்கு மற்றவர்களை மத்தியஸ்தம் செய்ய விட்டுக் கொடுத்தது. சமீபத்தில்தான் இந்தியாவுக்கும் மற்றும் இலங்கைக்கும் இடையேயான உறவுகளில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் ஏற்பட்டு இரு நாடுகளினதும் ஆவலைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு உறவுகள் வலுப்பெற்றுள்ளன. எல்.ரீ.ரீ.ஈ கிளர்ச்சியாளர்களை அழித்தது, ஒரு தடையை அகற்றியதோடு, பின்னாளில் பொருளாதார கூட்டாண்மை பெருமளவில் செழிப்புற்று வளரத் தொடங்கியது.

எனினும் இந்த ஜெனிவா கூட்டம் தள்ளாட்டமான ஒரு தடையினை பிரதிபலிக்க கூடும். கொழும்பின் விளைவுகளைக் கட்டுப்படுத்திய போதிலும், ஐநா மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக வாக்களிக்க வேண்டியது அவசியம் என இந்தியா உணர்ந்தது, விசேடமாக அமெரிக்காவுக்கு எதிரான வெளிப்பாட்டுடன் ஒப்பிடும்போது அயல்வாசியும் நண்பருமான இலங்கையுடன் இந்தியா துணை நிற்பதில் தோல்வி கண்டது அங்கு ஒருவகையான சினத்தைக் கிளறிவிட்டுள்ளது.

பிரேரணையை நீர்த்துப் போகும்படி செய்து, அதன் கனத்தைக் குறைப்பதில், தான் வெற்றி கண்டிருப்பதாக இந்தியா கோரிக்கை விடுத்தாலும் அது பெரிதாக கவனத்தை ஈர்க்கவில்லை.

மரபு வழக்கப்படி, தனிப்பட்ட விதத்தில் நாடுகளைக் குறிவைக்கும் மனித உரிமை சம்பந்தமான பிரேரணைகளுக்கு இந்தியா ஆதரவு நிலையை எடுப்பதில்லை. எனவே ஐநா மனித உரிமைப் பேரவையில் அதன் வாக்கு அதன் வழமையான நிலைக்கு மாறுபட்டதாகும். இந்த விவகாரம் சம்பந்தமாக பிரதமர் மன்மோகன் சிங், ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு கடிதம் எழுதும் முயற்சிகளை எடுத்துள்ளார். பிரேரணைக்கு அதரவு வழங்கியது, வேறுபாடுகளைக் கருதாது நன்மைக் காக வேண்டிச் செய்யப் பட்டதாக இருந்தாலும், பழுது பார்க்கும் வேலைகளைச் செய்ய வேண்டியது அவசியம் என்பதை புதுடில்லி உணர்ந்திருக்கிறது என்பதை இது வெளிப்படுத்துகிறது.



# இன்றைய இறுதிப் போட்டியில் பல்கலை, யூனியன் கல்லூரி மோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினரால் நடத்தப்பட்டுவரும் வலைப்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதிப் போட் டிக்கு பல்கலைக்கழக ஏ அணி மற்றும் யூனியன் கல்லூரி ஏ அணிகள் இன்று மோதவுள்ளன.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினரால் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

14 அணிகள் பங்குகொண்ட இத்தொடரில் யூனியன் கல்லூரி ஏ, பி மற்றும் யாழ். பல்கலைக்கழக ஏ, பி அணிகள் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன.

இதில் முதலாவதாக நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் யூனியன் கல்லூரி ஏ அணியும், பல்கலைக்கழக பி அணியும் மோதின. இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய யூனியன் கல்லூரி ஏ அணி 24:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரணடாவது அரையிறுதிப் போட்டியில் பல்கலைக்கழக ஏ அணியும், யூனியன் கல்லூரி பி அணியும் மோதின. இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடி இரசிகர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினர். இறுதியில் யாழ். பல்கலைக்கழக அணி 34:30 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இறுதிப் போட்டி இன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சண்டிலிப்பாய் இந்து வலய மட்டத்தில் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலய கரப்பந்தாட்டத் தொடரின் 17 வயது ஆணகள் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி சம்பியன் பட்டம் வென்றது.

வலிகாமம் வலய பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் ம.வி. மைதானத்தில் நடைபெற்றது.

இதில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், இளவாலை மெய்கண்டான் ம.வி. அணியும் மோதின.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 25:15, 25:17 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று வலய மட்ட சம்பியனானது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணியும், அளவெட்டி அருணாசலம் ம.வி. அணியும் மோதின.

இதில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணி 24:26, 25:15, 25:18 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.(93)

# தெல்லிப்பளை பிரதேச செயலக விளையாட்டு முதலிடம் பிடித்தது இளவாலை இளஞ்சுடர்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டியில் இளவாலை இளஞ்சுடர் விளையாட்டுக்கழகம் முதலாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

தெல்லிப்பளை பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வு கடந்த சனிக்கிழமை மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் கனகராசா ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்ற இவ் விளையாட்டு நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இப்போட்டி நிகழ்வில் ஒட்டுமொத்தமாக 56 புள்ளிகளைப் பெற்ற இளவாலை இளஞ்சுடர் விளையாட்டுக்கழகம் முதலாமிடத்தையும், 54 புள்ளிகளைப் பெற்ற மல்லாகம் ஆர்.டி.எஸ். விளையாட்டுக்கழகம் இரண்டாமிடத்தையும், இளவாலை சென் லூட்ஸ் மூன்றாமிடத்தைப் பிடிதது்க் கொண்டன.

இதேவேளை, இவ்விளையாட்டு நிகழ்வில் ஒவ்வொரு பிரிவிலும் சிறந்த வீர,வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டு சிறப்பு பரிசில்கள் வழங்கப்பட்டது.

இதில் ஆண்களுக்கான 200 மீற்றர் போட்டியில் சிறப்பாகச் செயற்பட்ட சென் லூட்ஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த அன்ரன் வேக் சிறந்த தடகள வீரராகவும், இப்பிரிவில் சிறந்த தடகள வீராங்கனையாக அதே கழகத்தைச் சேர்ந்த கின்சிகா தெரிவு செய்யப்பட்டனர்.

நீளம் பாய்தலில் சிறந்த தடகள வீரராக விநாயகர் கழகத்தைச் சேர்ந்த ந. றிசாந்தும், இப்பிரிவில் சிறந்த வீராங்கனையாக அ. பவித்திராவும், முப்பாய்சலில் சிறந்த வீரராக விநாயகர் கழகத்தைச் சேர்ந்த றிசாத்தும் தெரிவு செய்யப்பட்டனர். (93)

# மாதகல் சென். ஜோசப் கால்பந்தில் சம்பியன்

வலிகாமம் கல்வி வலய பெண்களுக்கான கால்பந்துப் போட்டியில் மாதகல் சென். ஜோசப் வித்தியாலயம் சம்பியனானது.

வலிகாமம் வலய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்துப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி அண்மையில் மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதில் மானிப்பாய் மகளிர் கல்லூரி அணியும், மாதகல் சென். ஜோசப் வித்தியாலய அணியும் மோதின. ஆரம்பம் முதலே இரு அணிகளும் விறுவிறுப்பாக மோதிக் கொண்டனர். இருப்பினும் மாதகல் சென். ஜோசப் வித்தியாலய அணி இறுதி நேரத்தில் ஒரு கோலைப் போட்டது. இறுதியில் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று வலய மட்ட சம்பியனானது. (93)

# தென்மராட்சி கரப்பந்தாட்டம் மட்டுவில் மோகனதாஸ் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேச மட்டத்திற்குட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் அணி சம்பியனானது.

தென்மராட்சிப் பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் அரையிறுதி மற்றும் இறுதி ஆட்டங்கள் கடந்த சனிக்கிழமை இரவு மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இத்தொடரில் பல அணிகள் பங்குபற்றியிருந்தன. இருப்பினும் முதலாவது அரையிறுதிப் போட்டிக்கு மட்டுவில் மோகனதாஸ் அணியும், மட்டுவல் ஐங்கரன் அணியும் மோதின. இதில் சிறப்பாக ஆடிய மோகனதாஸ் அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் கைதடி குமரன் அணியும், கைதடி வளர்மதி அணியும் மோதின.

இதில் சிறப்பாக ஆடிய குமரன் அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதனைத் தொடர்ந்து இறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் மோகனதாஸ் அணியும், குமரன் அணியும் மோதின.

இரு அணிகளும் சமபலம் கொண்டமையால் இப்போட்டி ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது.

போட்டியின் தொடக்கத்திலிருந்து மோகனதாஸ் அணி வீரர்கள் சிறப்பான முறையில் ஆடி இரசிகர்களின் பாராட்டைப பெற்றதுடன் அணியின் வெற்றியையும் உறுதி செய்தனர். இறுதியில் மோகனதாஸ் அணி 2:1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (118)

# வடக்கில் முதன் முறையாக மஞ்சி தேசிய மட்ட கரப்பந்து

(யாழ்ப்பாணம்)

மஞ்சி தேசிய மட்ட கரப்பந்தாட்டப் போட்டித் தொடர் முதல் முறையாக வடமாகாணத்தில் நடைபெறவுள்ளது.

மஞ்சி நிறுவனத்தினால் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வரும் இக் கரப்பந்தாட்டத் தொடர் தென்னிலங்கை யிலேயே இதுவரை நடைபெற்று வந்தது.

இந்நிலையில் இம்முறை முதல் முறையாக வடமாகாணத்தில் இத்தொடர் நடைபெறவுள்ளது.

இப்போட்டித் தொடர் எதிர்வரும் 7,8ஆம் திகதிகளில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதில் யாழ். மாவட்டம் சார்பாக பெண்கள் பிரிவில் காங்கேசன்துறை ஐக்கிய அணியும், முல்லைத்தீவு மாவட்டம் சார்பாக முல்லைத்தீவு மின்ஒளி அணியும், ஆண்கள் பிரிவில் காங்கேசன்துறை இராணுவ அணியும், மன்னார் ஜின்னா அணியும் பங்குபற்றவுள்ளன.

இப்போட்டித் தொடர் வடமாகாணத்தில் நடைபெறவிருப்பது வடமாகாண வீர, வீராங்கனைகளின் விளையாட்டுத் திறனை மேலும் வளர்த்துக் கொள்ள ஊக்குவிப்பதாக அமையும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் இது போன்ற போட்டித் தொடர்களை சுழற்சி முறையில் நடத்தவும் திட்டமிட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். (93)



வவுனியா வடக்கு கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி அண்மையில் புளியங்குளம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் ஓமந்தை கோட்டம் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. போட்டியன்று இடம்பெற்ற இடைவேளை நிகழ்ச்சியின்போது 1000 மாணவர்கள் பங்குகொண்ட நிகழ்வைக் காணலாம். (12)



# ஜோகோவிச் சம்பியன்

(மியாமி)

அமெரிக்காவில் இடம்பெற்றுவந்த மியாமி மஸ்டர்ஸ் கிண்ண ரென்னிஸ் கிண்ணத் தொடரில் ஆண்களுக்கான ஒற்றையர் இறுதிப்போட்டியில் உலகின் முதற்தர வீரர் ஜோகோவிச் சம்பியம் பட்டம் வென்றுள்ளார். இது அவர் வெற்றிகொள்ளும் மூன்றாவது மியாமி சம்பியன் பட்டமாகும்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் பிரித்தானியாவின் அன்டி முர்ரேயை 6 - 1, 7 - 6 என்ற கணக்கில் ஜோகோவிச் வெற்றிகொண்டார். 2007ஆம் ஆண்டு முதன்முதலாக மியாமி மாஸ்டர்ஸ் சம்பியன் பட்டம் வென்ற ஜொக்கோவிச், 2011 ஆம் ஆண்டிலும் சம்பியன் பட்டம் வென்றிருந்தார்.

வெற்றி குறித்துக் கருத்துத் தெரிவித்த ஜொக்கோவிச், ஆரம்பத்திலிருந்து போட்டியில் மிகச்சிறப்பாக விளையாடியதாகவும், அன்டி முர்ரே மிகச்சிறந்த வீரர் என்பதால் தவறுகளை விடமுடியாது இருந்ததாகவும் தெரிவித்தார்.

# அஷ்ரபுல் அதிரடி நீக்கம்



(டாக்கா)

பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் வீரர்கள் ஒப்பந்தப் பட்டியலிலில் இருந்து முன்னாள் அணித்தலைவரும், அதிரடி வீரருமான மொகமட் அஷ்ரபுல் நீக்கப்பட்டுள்ளார்.

2012ஆம் ஆண்டுக்கான பங்களாதேஷ் கிரிக்கெட் வீரர்களின் ஒப்பந்தப் பட்டியல் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள பட்டியலில் 5 வகையான பிரிவுகள் வழங்கப்பட்டு வீரர்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளனர். அத்தோடு அனைத்து வீரர்களுக்கும் 10 சதவீத ஊதிய அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஏ பிளஸ், ஏ, பி, சி மற்றும் புதியவர்களுக்கான பட்டியல் என ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப் பட்டியலில் ஷகிப் அல் ஹசன், முஷபிக்கூர் ரஹீம், தமிம் இக்பால், அப்துர் ரஷாக் மற்றும் மஷ்ரபி மோர்தஷா ஆகியோர் முதல்நிலைப் பிரிவில் வகைகப்படுத்தப்பட்டுள்ளனர்.

மஹமதுல்லா மற்றும் இம்ருல் கைஸ் ஆகியோர் இரண்டாம் நிலையிலும், ரூபெல்ஹொசைன், ஷபீல் இஸ்லாம், நஷமுல் ஹொசைன் ஆகியோர் மூன்றாம் பிரிவிலும், நீர் ஹொசைன், ஜக்ருல் இஸ்லாம் நான்காம் பிரிவிலும் வகைப்படுத்தப்பட்டுள்ளனர். புதியவர்களுக்கான பிரிவில் நஷிமுடின், ஷுவகற்றா ஹொம் மற்றும் எலியாஸ் சணி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

அத்தோடு சஹாதத் ஹொசைன், ஜுனைட் சித்திக்கி, சயீட் ரசல், ரக்கிபுல் ஹசன், நயீம் இஸ்லாம்,சுரவடி ஸுவோ ஆகியோரும் ஒப்பந்தங்களை இழந்துள்ளனர்.

# டெஸ்ட் அறிமுகம்

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிராக இடம்பெறவுள்ள டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணியின் விக்கெட் காப்பாளர் மத்தியூ வேட் தனது டெஸ்ட் அறிமுகத்தை மேற்கொள்ளவுள்ளார் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலிய அணியின் முதற் தெரிவு டெஸ்ட் விக்கெட் காப்பாளர் பிரட் ஹடின் தனிப்பட்ட விடயங்கள் காரணமாக அவுஸ்ரேலியாவுக்குத் திரும்பியுள்ள நிலையில் மத்தியூ வேட் தனது டெஸ்ட் அறிமுகத்தை மேற் கொள்ளவுள்ளார்.

அவுஸ்ரேலிய அணியின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், ருவென்ரி 20 போட்டிகளுக்கான விக்கெட் காப் பாளராக மத்தியூ வேட் காணப்படுகின்ற போதிலும், இன்னமும் டெஸ்ட்போட்டிகளுக்கான முதற் தெரிவு விக்கெட் காப்பாளராக பிரட் ஹடின் காணப்படுகிறார்.

எனினும் மேற்கிந்தியத் தீவுகளுக்குப் பயணம் செய்திருந்த பிரட் ஹடின் தனிப்பட்ட விடயங்கள் காரணமாக அவுஸ்ரேலியாவுக்குத் திரும்பியிருந்தார்.

இந்த வாய்ப்பை உரிய முறையில் பயன்படுத்தி அணியில் எல்லா வகையான போட்டிகளிலும் நிரந்தர இடத்தைப் பிடிக்க முயற்சிப்போன் என வட் தெரிவித்துள்ளமை குறப்பிடத்தக்கது.

# வென்றது இ.எஸ்.பி.என்.

ESPN

(சென்னை)

இந்தியாவில் நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளுக்கான உரிமையை இ.எஸ்.பி.என் நிறுவ்னம் பெற்றுள்ளது.

இந்தியாவில் நடைபெறும் கிரிக்கெட் போட்டிக்கான ஒளிபரப்பும் உரிமத்தை நிம்பஸ் நிறுவனம் பெற்று இருந்தது. பணம் பிரச்சினை காரணமாக அந்த நிறுவனத்தின் ஒப்பந்தத்தை கிரிக்கெட் சபை இரத்து செய்தது.

இந்த ஆண்டு ஜுன்-ஜுலை முதல் 2018ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை 6 ஆண்டிற்கான டெலிவிசன் ஒளிரப்பு, இண்டர்நெட்,மொபைல் உரிமம் ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களை கிரிக்கெட் சபை வரவேற்று இருந்தன. இந்த டெண்டருக்கான கடைசி நாள் கடந்த 27ஆம் திகதி ஆகும். இ.எஸ்.பி.என். ஸ்டார் ஸ்போர்ட்ஸ், மல்டி ஸ்கிரீன் மிடியா (சோனி), டி.வி.18 மற்றும் ரிலையன்ஸ் ஆகிய 4 நிறுவனங்கள் விண்ணப்பித்து இருந்தன.

எந்த நிறுவனம் அதிக தொகையை டெண்டரில் குறிப்பிடுகிறதோ அந்த நிறுவனத்துக்கு ஒளிபரப்பு உரிமம் கிடைக்கும். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் மார்க்கெட்டிங் கமிட்டி கூட்டம் சென்னையில் நேற்று நடந்தது. இக்கூட்டத்தில் டெண்டர் ஓபன் செய்யப்பட்டது. அதில் இ.எஸ்.பி.என். டிவிக்கு ஒளிபரப்பும் உரிமை வழங்கப்பட்டது. இதன்மூலம் 6 வருடத்தில் இந்திய அணி விளையாடும் 96 போட்டிகளை ஒளிபரப்பும் உரிமையைப் பெற்றுள்ளது இந்த சனல். இ.எஸ்.பி.என். டி.வி. டெண்டரில் அதிகபட்சமாக 3851 கோடிக்கு கோரியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# இன்று களமிறங்க விருப்பம்

(கொழும்பு)

காலில் ஏற்பட்ட காயம் காரணமாக இலங்கைக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலிருந்து ஸ்டுவேர்ட் ப்ரோட் நீங்கியுள்ள நிலையில் அவருக்குப் பதிலாக அணியில் இடம்பெற எதிர்பார்ப்பதாக இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரிவன் ஃபின் தெரிவித்துள்ளார்.

யார் விளையாடப் போகிறார் என்பது தெரியவில்லை. ஆனால் அந்த வாய்ப்பு எனக்குக்கிடைக்குமாயின் அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளக் காத்திருக்கிறேன் எனத் தெரிவித்த ஸ்ரிவன் ஃபின், தொடர்ச்சியாக வாய்ப்புக்கள் கிடைக்காத பட்சத்தில் மனம் தளர்ந்து போவது சாதாரணமானது. எனினும் அணிக்கு தேவையானதையே செய்ய வேண்டியுள்ளது. அணிக்குப் பொருத்தமான சிறப்பான அணியையே தெரிவுசெய்ய வேண்டியிருப்பதை உணர்ந்து கொள்கிறேன் எனவும் தெரிவித்தார்.

ஸ்டுவேர்ட் ப்ரோட் அணிக்கு மிக முக்கியமான வீரர் அவருக்குப் பதிலாக விளையாடக்கூடிய வீரர்களைக் கொண்டிருக்கிறோம், ஆனால் ஸ்டுவேர்ட் ப்ரோடின் இடத்தை முழுமையாக நிரப்ப முடியாது என்பதை அறிவோம். ஆனால் வழங்கப்படும் வாய்ப்பை சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும் ஸ்டுவேர்ட் ப்ரோடிற்குப் பதிலாக விளையாடுவதற்கு ஸ்ரீவன் ஃபின், ரிம் ப்ரெஸ்னன் ஆகிய இருவரிடையே போட்டி நிலவுகின்றது. ரிம் ப்ரெஸ்னனின் சகலதுறைத் திறமைகள் ரிம் ப்ரெஸ்னனுக்கு வாய்ப்பாக அமையலாம் என்ற போதிலும், காயத் தின் பின்னர் அவர் அதிகமாகப் பந்து வீசியிராத காரணத்தால் பந்து வீச்சாளராக ஸ்ரிவன் ஃபின்னிற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளதாகக் கருதப்படுகிறார்.

எனினும் அவ்வாறு இடம்பெறின் இங்கிலாந்து அணி துடுப்பாட்டத்தில் சோர்வைச் சந்திக்க இடமுண்டு. அவ்வாறு இங்கிலாந்து அணி கருதுமாயின் கடந்த போட்டியில் விளையாடிய மொன்ரி பனேசர் நீக்கப்பட்டு ரிம் ப்ரெஸ்னனும், ஸ்டுவேர்ட் ப்ரோடிற்குப் பதிலாக ஸ்ரிவன் ஃபின்னும் விளையாட இடமுண்டு.

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவதுடெஸ்ட் போட்டி இன்று கொழும்பில் ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் இலங்கை அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

# பெண்கள் மல்யுத்தம் இந்திய வீரருக்கு வாய்ப்பு

(புதுடில்லி)

2012ஆம் ஆண்டிற்கான ஒலிம்பிக்கில் நடைபெற உள்ள பெண்களுக்கான மல்யுத்தப் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பை முதல் முதலாக இந்திய வீராங்கனை ஒருவர் பெற்றுள்ளார். வரும் ஜுலை 27ஆம் திகதி லண்டனில் ஒலிம்பிக் போட்டி நடைபெற உள்ளது. இந்த ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்பதற்கான தகுதிச் சுற்று போட்டிகள் நடைபெற்று வரும் நிலையில் நேற்று முன்தினம் ஆசிய கண்டத்திற்கான மல்யுத்த தகுதி சுற்று போட்டி கஜகஸ்தானில் நடைபெற்றது.

இந்தத் தகுதி சுற்றுப் போட்டியில் 55 கிலோ எடை பிரிவில் பெண்களுக்கான தகுதிச் சுற்றினுடைய இறுதிப் போட்டி நடந்தது. இதில் பங்கேற்ற இந்திய வீராங்கனையான கீதா, கொரிய நாட்டை சேர்ந்த ஜி இன் உம் உடன் போட்டியிட்டார். போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய கீதா, இறுதியில் 5-0 புள்ளி வித்தியாசத்தில் வெற்றி பெற்று கொரிய வீராங்கனையை வீழ்த்தி தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார். இவ்வெற்றியின் மூலம் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க கீதா தகுதி பெற்றார். ஒலிம்பிக் போட்டிகளில் பெண்கள் மல்யுத்த போட்டி பிரிவில் பங்கேற்க இந்திய வீராங்கனை ஒருவர் தகுதி பெறுவது இதுவே முதல் முறையாகும்.



# சச்சினின் ஊக்கம்



(லண்டன்)

உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் நான் சிறப்பாக விளையாடியதற்கு சச்சின் அளித்த ஊக்கமும், உற்சாகமும் தான் காரணம் என யுவ்ராஜ் சிங் தெரிவித்துள்ளார்.


சச்சின் மற்றும் சகீர்கானின் உற்சாக வார்த்தைகள் மற்றும் ஊக்கம் காரணமாகவே, என்னால் அந்தத் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, தொடர் நாயகன் விருதைப் பெற முடிந்தது. மும்பை வான்கடே மைதானத்தில் உலகக் கோப்பையை கைப்பற்றி வெற்றியைக் கொண்டாடும் விதமாக அணி வீரர்கள் அனைவரும் தேசியக் கொடியுடன் ரசிகர்கள் முன்னிலையில் வலம் வந்தது எனது நினைவில் என்றும் பசுமையாக இருக்கும்.

தற்போது உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்றது. விரைவில் களத்தில் இறங்ககூடிய சூழல் உருவாகும். விரைவில் களம் இறங்குவேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# இலங்கை தொடர்பில் தடுமாறும் இந்தியா

**- ஷிரால் லக்திலக்க கட்டுரையிலிருந்து**

இந்திய - இலங்கை உறவானது கடந்த 60 ஆண்டுகளாக சிக்கலான மட்டத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றது. உலகின் வல்லரசாக மாறுவதற்கான முயற்சிகளில் இந்தியா ஈடுபட்டுள்ளது. ஐ.நா.வின் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரி




மையைப் பெறுவதே இந்தியாவின் நோக்கமாக உள்ளது. அதற்காக அதன Hard power ஐயும் Soft power ஐயும் உலகின் முன் நிரூபணம் செய்ய வேண்டிய தேவை இந்தியாவுக்கு உள்ளது.

Hard power என்பது பொருளாதார பலம், இராணுவ பலம், சனத்தொகையின அடர்த்தி என்பனவாகும். மென்மையான அதிகாரம் Soft power என்பது இராஜதந்திர ஆற்றல், அரச எண்ணப்பாடு, மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் என்பனவற்றிற்கான அர்ப்பணிப்புத் தன்மை என்பனவாகும். இந்தியாவுக்கு தமது Hard power எனப்படும் கடும் அதிகாரங்கள் குறித்து ஐயப்பாடு இல்லாதபோதிலும், தமது மென்மைசார் அதிகாரங்களை வெளிப்படுத்துவதிலேயே தடுமாற்றமான பலவீன நிலையை வெளிப்படுத்துகின்றது.

ஆகக் குறைந்தது தமது பிராந்தியத்தில் திடமான வகையில் இந்த மென்போக்கு அதிகாரங்களை வெளிபடுத்த இந்தியாவால் முடியவில்லை. அதற்கான சிறந்த உதாரணம், பொருளாதார ரீதியில் நோக்கினால் இந்தியா உலகின் வேகமான பொருளாதார வளர்ச்சியினைக் கொண்ட சீனா, ஜேர்மனி, ரஷ்யா, பிரேஸில் ஆகிய நாடுகள் பட்டியலில் உள்ளடங்குகின்றது. கொள்வனவு செய்யும் ஆற்றல் குறிகாட்டியின் (PPP) படி பார்த்தால் ஐக்கிய அமெரிக்கா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் தோளுக்குத் தோள் சரிசமமாக இருப்பதுடன் ஜேர்மனி, ரஷ்யா, ஐக்கிய இராச்சியம் மற்றும் பிரான்ஸ் என்பன இந்த அடிப்படையில் பின்னால் நிற்கின்றன.

1998 இல் இந்தியா 45 கிலோ தொன் அணுகுண்டு ஒன்றினைப் பரீட்சித்துப் பார்த்து உலகின் ஐந்து அணு சக்தி வல்லரசுகளில் ஒன்றாக இணைநது கொண்டது.

அதேவேளை, சனத்தொகையில் சீனாவுக்கு அடுத்தபடியான இடத்தினையும் வகிக்கின்றது. இதன்படி இந்தியா உலகில் பாரிய மனித வள, வணிக வள உரித்துடைமை கொண்ட நாடாக விளங்குகின்றது. உலக வல்லரசாக மாறும் ஆற்றல் நிலையினை



இந்தியா இவ்வாறு வெளிப்படுத்திக் கொண்டிருக்கும்போது, அவ்வாறான வல்லரசாக மாறத் தேவையான மற்றுமொரு ஆக்கமான மென்நிலை அதிகாரங்களை வெளிப்படுத்துவதில் இந்தியா பின்னடைவு நிலையினையே எதிர்கொள்கின்றது.

இதற்குச் சிறந்த உதாரணமாக தமது பிராந்தியத்தில் நிலவும் ஸ்திரமற்ற நிலையாகும்.

பூட்டானில் ஓரளவு ஸ்திரமான நிலை நிலவுகின்ற போதிலும் பிராந்தியத்தில் பாகிஸ்தான், இலங்கை, நேபாளம், பங்களாதேஷ், மாலைதீவு என்பனவும்: வடக்கே உள்ள மியன்மார், ஆப்கானிஸ்தான் என்பனவும் இந்தியாவுடன் நட்பு ரீதியான தொடர்பு நிலையினைப் பேணவில்லை.

சர்வதேச உறவுகள் என்ற விடயத்தில் இந்தியா ஒரு முறை தலைமையினை ஏற்றது. அது 1954 இல் அணிசேர் நடைமுறையின் கீழ் நிகழ்ந்தது. ஆனால், இன்றளவில் பனிப்போர் நிறைவை எட்டியுள்ள நிலையில் அணிசேராக் கொள்கையும் வலிதற்ற ஒனறாக ஆகிவிட்டது. ஆனால், அணிசேராக் கொள்கையின் ஊடாக முன்வைக்கப்பட்ட பஞ்சசீலக் கொள்கையில் ஐந்தாவது கொள்கையினை இனறும் கூட இந்தியாவினால் பின்பற்ற முடியும். ஆயினும், இந்தியாவின் பொருளாதார இராணுவ அபிவிருத்தி நிலையுடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டுக் கொள்கை அபிவிருத்தியில் படுமோசமான பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது.

இந்த பஞ்சசீலக் கொள்கையில் சிறிய அல்லது பலவீனமான புதிய தேசிய அரசில் உள்ளூர், வெளிநாட்டு மற்றும் இராணுவத் தீர்மானங்களை எட்டும்போது சக்தி வாய்ந்த நாடுகளின் அழுத்தம் மற்றும் செல்வாக்கின்றி தமக்கே உரித்தான மாற்றுத் தீர்வுகளை இயலுமான வரை எடுக்கக்கூடிய ஆற்றலினை உறுதிப்படுத்த வேண்டும் என்று குறிப்பிடுகின்றது. இலங்கை தொடர்பில் இந்தியா முன்னெடுக்கும் நெருக்கடி மிக்க இராஜதந்திரத் தொடர்பு நிலைப் போக்கினை நோக்கும்போது எப்பொழுதும் இந்தியாவுக்கு பஞ்சசீலக் கொள்கையின் 5 ஆவது அம்சம் மறந்துவிடுகின்றது என்றே தோன்றுகின்றது. இம்முறை ஜெனிவாவிலும் இவ்விடயமே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பஞ்சசீலத்தினை மறப்பதற்கு இந்தியாவுக்கு விசேடமான காரணம் ஒன்று உள்ளது. தென்னிந்திய அரசியற் காரணிகளே இந்த குறிப்பிடத்தக்க காரணியாகும்.

1984 இல் இந்திராவின் படுகொலையின் பின்னர் ராஜீவ் காந்தி பிரதமரானார். இலங்கை தொடர்பான இந்தியாவின் தலையீடானது அப்போது இந்தியாவின் தமிழ் நாட்டுக் கொள்கையின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது. இதனாலேயே இந்தியா தனது கைகளைச் சுட்டுக்கொண்டது. இந்திய அமைதிப் படையின் தலையீடு, இலங்கையின் வான் பரப்பு ஆக்கிரமிப்பு, அதன் பின் இந்திய இராணுவத்திற்கு ஏற்பட்ட தோல்வி, ராஜீவ்காந்தி படுகொலை என்பன இந்தியாவின் இலங்கை தொடர்பான தமிழ் நாட்டுக்கொள்கையின் பிரதி விளைவுகளாகும். இதனால் உலக அரசியலில் இந்தியா வெட்கித் தலைகுனிந்து நின்றது.

இதனாலேயே பிற்காலத்தில் பதவியேற்ற பிரதமர்கள் இது பற்றி நன்கு சிந்தித்து செயற்பட்டனர். இதில் முன்னணி வகிப்பவர் பிரதமர் ஐ.கே.குஜ்ரால். (1997) அவர் இந்திரா காந்தியின் வெளிநாட்டுக் கொள்கையினை மாற்றியமைத்தார். எம்முடன் இல்லாதவர்களை, எம்மை எதிர்ப்பவர்கள் என்று கருதும் சவால்மிக்க பின்தங்கிய வெளிநாட்டுக் கொள்கை நிலைப்பாட்டினை (Those who are not with us are against us) மாற்றி நாடுகளின் ஆட்புல ஒருமைப்பாடு, இறைமை என்பனவற்றை மதித்து அந்தந்த நாடுகளின் உள்ளக விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்த்து அதற்குப் பதில் இரு தரப்பு தொடர்புகளைப் பேணி முன்னேற்றும் விடயங்களில் அவதானம் செலுத்தினார். இந்திய வெளியுறவுக் கொள்கையின் மைல் கல்லாகக் கருதப்படும் இந்தக் கொள்கை குஜ்ரால் கொள்கை என்று பிரபல்யம் பெற்றது.

முக்கியமான விடயம் தற்போதுள்ள இந்திய அரசாங்கம் இலங்கை தொடரபில் எந்தவொரு வெளியுறவுக் கொள்கையிலும் தன்னை சார்பு படுத்திக் கொள்ளாததே. முதலில் தமிழ் நாட்டுக் கொள்கையினைக் கைவிட்டு விட்டு இலங்கை அரசாங்கத்திற்கு புலிகளைத் தோற்கடிக்கத் தேவையான இராணுவ உதவிகளையும் வெளியுறவுக் கொள்கை சார்ந்த நலன்களையும் வசதிகளையும் வழங்கினர். அதன் பின்பு இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் இலங்கை அரசுடனான விவகாரத்தில் சிக்கிக் கொண்டனர். அது தோல்வியை அடைந்ததால் தற்போது தமிழ் நாட்டுக் கொள்கை மீது கவனத்தைத் திருப்பியுள்ளனர்.

இலங்கை தொடர்பில் இந்தியாவுக்கு ஸ்திரமான கொள்கை இல்லாமையானது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் பாதகமானதாகவே அமையும். இதனை உணரக்கூடிய 21 ஆம் நூற்றாண்டுக்கு பொருந்தக்கூடிய வெளியுறவுக் கொள்கை இந்தியாவுக்கு அவசியம்.

---

# சிலை ஏனில்லை?



மாவீரன் அலெக்சாண்டரைப் பார்க்க ஒரு விருந்தினர் வந்தார். விருந்தினரை அவர் நன்கு உபசரித்தார். தனது மாளிகையிலேயே தங்க வைத்தார். விருந்தினரைத் தன் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றார். தோட்டத்தில் அநேகப் பெரிய வீரர்களின் உருவச் சிலைகள் வைக்கப்பட்டிருந்தன. விருந்தினர் ஒவ்வொரு சிலையிடமும் நிற்பார். அலெக்சாண்டர் அவருக்கு அதன் வரலாற்றைச் சொல்வார். ஒவ்வொரு சிலையாகப் பார்த்துவிட்டு தோட்டத்தின் கடைசிப் பகுதிக்கு வந்தனர். விருந்தினர், “இத்தனை வீரர்களின் சிலைகள் இந்தத் தோட்டத்தில் இருக்கும்போது உங்களுடைய சிலை மட்டும் இங்கு ஏன் இல்லை?” என்று கேட்டார். அதற்கு அலெக்சாண்டர் “இங்கு என்னுடைய சிலையைப் பார்த்து “இது யாருடை சிலை?” என்று வருபவர்கள் கேட்பதைவிட,

“மாவீரன் அலெக்சாண்டரின் சிலை ஏன் இங்கு இல்லை என்று கேட்பதையே நான் விரும்புகிறேன்” என்றார்.

---

# பறவைகளுக்குப் பயந்த யானைகள்



சின்னஞ் சிறிய பறவைகளைப் பார்த்து, யானைக் கூட்டம், சிதறி ஓடிய வித்தியாசமான சம்பவம் நடந்துள்ளது. கென்யாவில் கிழக்கு ட்சாவோ என்ற இடத்தில், வன விலங்குகளுக்கான பூங்கா உள்ளது. மிருகங்கள், தங்களின் தாகத்தை தணித்துக் கொள்வதற்காக, பூங்காவின் ஒரு சில இடங்களில் நீர்க்குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன.

சமீபத்தில் ஒரு நாள், சில யானைகள் இங்கு தண்ணீர் குடிக்கச் சென்றன. அப்போது, அங்கிருந்த மரங்களின் மீது அமர்ந்திருந்த பறவைகள், யானைகளை பார்த்து பயந்து போய், அங்கிருந்து தப்பிச் செல்லும் நோக்கத்தில், கூட்டம், கூட்டமாக பறக்கத் தொடங்கின.

இந்தப் பறவைகள் பெரும் கூட்டமாக வந்ததை பார்த்த யானைகள், தங்களை நோக்கி பெரும் ஆபத்து வருவதாகக் கருதி, பயந்து, மிரண்டு ஓடின. அங்கிருந்த புகைப்படக்காரர் ஒருவர், இந்த அதிசயமான நிகழ்வை, தன் கமராவில் பதிவு செய்தார்.

அவர் கூறுகையில், “யாருக்குமே கிடைக்காத நல்ல வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அளவில் மிகச் சிறியதான பறவைகளைப் பார்த்து, மலை போன்ற வடிவமுடைய யானைகள் சிதறி ஓடின. இந்தப் பறவைகள், சிவப்பு நிற அலகுகளைக் கொண்டவை. தினமும், காலையிலும், மாலையிலும் தண்ணீர் குடிப்பதற்காக, நீர்க்குட்டைகளின் அருகில் உள்ள மரங்களில் அமர்ந்திருக்கும். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில், யானைகள் அங்கு வந்ததால்தான், பறவைகள் பெரும் கூட்டமாக பறந்தன. என் வாழ்வில் மறக்க முடியாத ஒரு புகைப்படமாக இது அமைந்து விட்டது...” எனப் பெருமிதப்படுகிறார்.






# ஐஸ்வர்யா தனுஷின் கொலைவெறி!

தற்கொலை எதற்கும் தீர்வல்ல என்கிற வாசகங்களோடு படம் முடிகிறது. ஐஸ்வர்யா தனுஷின் கருணையே கருணை. அவர் எடுத்திருக்கிற கொடூரமான மொக்கைப் படத்தை பார்த்து யாரும் தற்கொலை செய்துகொள்ளக்கூடாது என்கிற அன்பை நாம் பாராட்டியே தீரவேண்டும். ரஜினியின் மகள் அல்லவா? அவருடைய அன்பில் கருணையுள்ளத்தில் பாதியாவது இருக்காதா பின்னே!

தனுஷ் இதுவரை நடித்து ஓரளவு பேரும் துட்டும் சம்பாதித்த எல்லாப் படங்களிலிருந்தும் தலா நான்கு காட்சிகளை உபயோகித்து இந்தப் படத்தினை எடுத்திருக்கிறார்கள். துள்ளுவதோ இளமையிலிருந்து நாலு சீன், புதுப்பேட்டையிலிருந்து இரண்டு சீன், மயக்கம் என்ன, காதல்கொண்டேனிலிருந்து சில காட்சிகள்! பொல்லாதவன், படிக்காதவனிலிருந்து மேலும்...

அதுபோக தனுஷின் பெரும்பாலான படங்களில் வருவதைப் போலவே இந்தப் படத்திலும் அவருக்கு பைத்தியம் பிடித்துவிடுகிறது! தண்ணீர் தெளித்த கோழியைப் போல வெடுக் வெடுக் என இப்படியும் அப்படியும் ஆட்டி ஆட்டி பயமுறுத்துகிறார்! நமக்குச் சிரிப்பு வருகிறது.

தம்த்தூண்டு ஸ்கூல் பசங்க அத விட டாமாங்கோலி ஸ்கூல் புள்ளைங்கள காதலிப்பதைப் போல படம் எடுக்கிற புண்ணியவான்களுக்கு இபிகோவில் ஏதாவது செக்சனில் ஏதாவது கொடூரமான கட்டிங் வெட்டிங் தண்டனை வழங்கித் தொலையலாம். அதிலும் இந்தப்படம் சொல்லுகிற செய்தி இன்னும் மோசமானது. 'ஸ்கூல் படிக்கிறபோதே நல்ல பணக்காரப் பையனா பார்த்து லவ் பண்ணிட்டு செட்டிலாகிடுங்க கேர்ள்ஸ்' என்று சொல்லியிருக்கிறார் ஐஸ்வர்யா!.

சிவகார்த்திகேயன் சூப்பர் சிங்கர் சூப்பர் டான்ஸர் ப்ரோகிராம்களுக்கு நடுவில் புரொடியூசர் கிட்ட உச்சா போயிட்டு வரேனு சொல்லிட்டுவந்து நடிச்சிருப்பார் போல! திடீரென வந்து காணாமல் போகிறார். பிரபு, பானுசந்தர், பானுப்ரியா என பலரும் நட்புக்காக நடிச்சுக் கொடுத்திருக்க வேண்டும். ரோஹினியை கதறி கதறி கத்த விட்டிருக்கிறார்கள். ஸ்ருதிஹாசனும் அதைவிட அதிக டெசிபலில் ஆவ்வ்வ் என கத்திக்கொண்டேயிருக்கிறார்.. காதுக்கு புடிச்ச கேடு!

முதல்பாதியின் முதல் முக்கால் மணிநேரம் மட்டும் படத்தைப் பார்த்துவிட்டு தியேட்டரிலிருந்து வெளியேறிவிடுவது உத்தமம். மீதி படத்தையும் நான் பார்த்தே தீருவேன் என்று அடம்பிடித்தால் முக்கால் படத்தில் வெறியேறி பக்கத்து சீட்டில் இருப்பவர்களையெல்லாம் கடித்துவைத்து விடுவீர்கள் ஜாக்கிரதை!

நன்றாக நினைவிருக்கிறது. சக்கரக்கட்டி என்று ஒரு படம். டாக்ஸி டாக்ஸி என்கிற பாடலுக்காகவே போய் முதல் நாளே பார்த்து நொந்துபோன நினைவுகள் மனதில் அப்படியே இருக்கிறது. கதறகதற சுரணையே இல்லாமல் படமெடுத்திருப்பார் படத்தின் இயக்குநர். அதற்கு இணையான படமென்று 3 படத்தினை சொல்லலாம்.

ஐஸ்வர்யாவுக்கு செல்வராகவன் ஆகிவிடவேண்டும் என்றும் ஆசை வந்திருக்கலாம். அதற்காக செல்வராகவன் படங்களையே கலக்கி ரீமிக்ஸ் செய்திருப்பது அடடே!! ஸ்ருதிஹாசன் சில இடங்களில் பிரமாதமாகவும் பல இடங்களில் கொடூரமாகவும் நடித்திருக்கிறார். தனுஷ் நன்றாக நடித்திருப்பதாக சொல்லபபட்டாலும் ஒரே மாதிரி நடிப்பு கொஞ்சமாக போர் அடிக்க ஆரம்பிக்கிறது. அதன் பலன் எமோசனலான கிளைமாக்ஸ் காட்சியில் தியேட்டர் முழுக்க டேய் சீக்கிரம் சாவுடா படம் முடியட்டும் என்கிற சத்தம் காதை நிரப்புகிறது.

படம் பார்க்கும்போதுதான் தோணிச்சு.. படத்துல வர தனுஷ் பைத்தியமா? இல்ல படம் எடுத்த அவிங்க பைத்தியமா? ஒரே ஒரு பாட்டால காசு குடுத்து இந்த மொக்கைய பார்க்குற நாம பைத்தியமா?

- அதிஷா

# எலும்புக்கூடாகிறாராம் ஏஞ்சலினா!

ஹொலிவுட் நடிகை, ஏஞ்சலினா ஜோலியை தெரியாதவர்கள் இருக்க முடியாது. 36 வயதானாலும், கிறங்கடிக்கும் தன் அழகாலும், நடிப்புத் திறனாலும், ஹொலிவுட்டில் இன்னும் இவர் கொடி பறந்து கொண்டிருக்கிறது. மனிதாபிமானம் மிக்கவர். ஏழைக் குடும்பத்தில் பிறந்த குழந்தைகளை தத்தெடுத்து வளர்த்து வருகிறார்.சமீபத்தில், நடந்த ஒஸ்கார் விருது வழங்கும் விழாவில், இவர் அணிந்திருந்த உடை, பார்வையாளர்களின் கவனத்தை பெரிதும் ஈர்த்தது. தன் வலது கால் முழுவதும் வெளியில் தெரியும் படி, ஒரு கறுப்பு நிற உடையை அணிந்திருந்தார். படப்பிடிப்பாளர்களுக்கு, அன்று முழுவதும் நல்ல வேட்டையாகி விட்டது.



ஏஞ்சலினாவின், புகைப்படத்தை, பததிரிகைகளில் பார்த்த அமெரிக்காவைச் சேர்ந்த ட்ரூவ் என்ற டாக்டர், ஒரு அதிர்ச்சியான தகவலை தெரிவித்துள்ளார். "இந்தப் புகைப்படத்தில் ஏஞ்சலினாவின் கால், கை, தோள் ஆகியவற்றை பார்க்கும்போது, அவர் ஊட்டச்சத்து குறைபாடு நோயால் பாதிக்கப் பட்டிருக்கிறார் என்பது தெளிவாக தெரிகிறது. கால், கை போன்ற பகுதிகளில், தசைகளையே காணவில்லை. எலும்புகள், வெளியில் தெரியும்படி துருத்திக் கொண்டிருக்கின்றன. உடனடியாக சிகிச்சை பெறாவிட்டால், இன்னும் சில நாட்களில் அழகான ஏஞ்சலினா, எலும்புக் கூடு ஏஞ்சலினாவாக மாறி விடுவார். உயிருக்கே ஆபத்து ஏற்படலாம்..." என்றார்.


சரியான நேரத்துக்கு சாப்பிடாதது, எந்த நேரமும் உலகம் சுற்றுவது, சத்தான உணவுகளை சாப்பிடாதது போன்ற ஏஞ்சலினாவின் கவனக் குறைவு தான், அவரை இந்த பேராபத்துக்கு கொண்டு வந்துள்ளதாக, அவரது ரசிகர்கள் கவலைப்படுகின்றனர்.

# சின்ன உபாயங்கள்!



◆ எறும்புத் தொல்லைக்கு வெள்ளரிக்காயின் தோல்களை சீவி எறும்பு புற்றின் அருகில் வைத்தால் போதும்.

◆ ஆடையில் ஒட்டியுள்ள சுவிங்கம்மை எடுக்க ஆடையை குளிர்சாதனப் பெட்டியில் உள்ள ஃப்ரீஸரில் ஒரு மணி நேரம் வைத்துப் பின் துவைக்க வேண்டும்.




◆ வெந்நீரில் அரை எலுமிச்சம் பழத்தை வெட்டிப் போட்டு அதில் ஊற வைத்துத் துவைத்தால் வெள்ளைத் துணிகள் பளிச்சிடும்.

◆ எலுமிச்சம்பழத்தில் இருந்து அதிக ஜூஸைப் பெற பழத்தை ஒரு மணிநேரம் வெந்நீரில் போட்டு பின் பிழியவும்.

◆ முட்டைக்கோஸில் உள்ள வாசனை போக அதனை வேகவைக்கும்போது சிறிது பாண் துண்டை அதில் போட்டு விட்டால் போதும்.

◆ வெங்காயம் உரிக்கும்போது கண்ணில் இருந்து கண்ணீர் வராமல் இருக்க வாயில் சுவிங்கம் மெல்லலாம். அல்லது மின்விசிறியின் கீழ் இருந்து உரிக்கலாம்.



◆ ஆடையில் இருக்கும் பேனா மையைப் போக்க கறைகளின் மீது பற்பசையைத் தடவி, அது காய்ந்த பின் துவைக்க வேண்டும்.

◆ வேக வைத்த உருளைக்கிழங்கின் தோலை எளிதில் உரிக்க, வேக வைத்த உடன் குளிர்நீரில் போட்டுவிட வேண்டும்.

◆ எலித்தொல்லையில் இருந்து விடு பட மிளகுத்தூளை தூவினால் போதும்.

# 'வாழாத வாழ்வு" ஏன்?



ஒரு மனிதன், பிறந்த வினாடியிலிருந்து, அவனின் ஆயுள் காலம் முழுவதும் அவனை நிழலாய் பின்தொடர்வது இரண்டு விடயங்கள்தான். ஒன்று உணவு மற்றது மரணம். ஒருவனின் உணவு நிறைவுறும் போது, மரணம் அவனை தழுவச் செய்யும், அல்லது மரணம் அவனை தீண்டும் போது... அவனின் உணவு முடிவுற்றிருக்கும்.

நேரங்களின் திரட்சி, அல்லது வினாடிகளின் அடர்த்திகளையே காலம் என்கிறோம். அடர்த்தியின் அளவுக்கேற்ப, மணித் துளிகள், நாட்கள், வாரங்கள், வருடங்கள் என வகைப்படுத்துகி றோம். நடப்பாண்டு முடிந்து புதிய ஆண்டு பிறக்கையில் புத்தாண்டு என்ற பெயரிலும், ஒவ்வொரு வயதை கடக்கும் போதும பிறந்த நாள் என்ற பெயரிலும், காலங்களின் இழப்பை கொண்டாடி குதூகலித்து வருகிறோம்.

மாறாக ஒவ்வொரு புத்தாண்டிலும், பிறந்தநாளிலும், நம் வாழ்நாளில் ஒரு வருடத்தை அல்லது ஒரு வயதை தொலைத்துக் கொண்டிருக்கிறோம் என்ற உணர்வு மேலிடும்போதே நேரத்தின் அருமையும், காலத்தின் அவசியமும் விளங்கும்.

ஒரு மனிதனின் சராசரி வயது (அதுவும், எந்த ஒரு விபத்திலோ... நோய் நொடியிலோ மரணிக்காத பட்சத்தில்) 70 என்று வைத்துக் கொள்வோம் அதில 30 வயதான ஒரு வாலிபனின் மீதமுள்ள 40 வருடங்களின் எணணிக்கை நாட்களின் அடிப்படையில் 14,600 நாட்கள்.

மணிகளின் அடிப்படையில் 3,50,400 மணி நேரங்கள்.

நிமிடங்கள் அடிப்படையில் 2,10,24,000 நிமிடங்கள் வினாடிகளின் அடிப்படையில் 126,14,40,000 வினாடிகள் மட்டுமே!

இந்தக் கணக்கின் அடிப்படையில் 70 வருடத்தில் உங்களின் வயதை கழித்து மீதமுள்ள வருடங்களின், நேரங்களை கணக்கிட்டுப் பார்த்தீர்களானால் "ஆயுளின் அற்பம்" புரியும். நாள் ஒன்று 86,400 வினாடிகள், நம் ஒவ்வொருவரையும் கடந்து கொண்டிருக்கிறது.

இதைச் சொல்வது யாரையும் பயமுறுத்துவதற்கல்ல. நாமெல்லாம் அறிந்த ஒன்றை அலட்சியப் படுத்துவதையும், பொழுதே போகுதில்லை, வாழ்க்கையே விறு விறுப்பின்றி இருக்கிறது என்று பொன்னான நேரங்களை வீணடிப்பதையும் சுட்டிக் காட்டவே இந்த புள்ளிவிபரம்.

இன்னும், குடும்பங்களையும், உறவினர்களையும் பிரிந்து வெளிநாடுகளில் வேலை செய்பவர்களுக்கென்று தனிக் கணக்கு இருக்கத்தான் செய்கிறது. அதாவது,

30 வயதில் வேலை தேடி, வெளிநாடு செல்லும் ஒரு இளைஞன், தன் 60 வயது (முதுமை) வரை பணிபுரிந்தால் (அதற்கு மேல் பணிபுரிய நீங்களே, விரும்பினாலும் தற்போதைய சட்டத்தில் இடமில்லை) அவன் தன் குடும்பங்களைப் பிரிந்து (வாடிய) காலம் நாட்களின் அடிப்படையில் 9,900 நாட்கள். அதாவது 2,37,600 மணி நேரங்கள். ஆனால், அவன் தன் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக இருந்த (விடுமுறை) காலம் வெறும் 720 நாட்கள் அதாவது 17,280 மணிநேரங்கள் மட்டுமே. பெரும்பாலும், குடும்பத்தைப் பிரிந்து வெளிநாடுகளில் வசிப்பதற்கு... நம்மை நாமே சமாதானப்படுத்திக் கொள்ள முன்வைக்கும் உதாரண தத்துவம் "திரை கடலோடியும் திரவியம் தேடு'' ஒன்றை இழந்தால்தான் ஒன்றைப் பெற முடியும் போன்றவைகளாகும்.

இந்த வைரவரிகளில் நம் வாழ்க்கை எப்படி அடங்கும். எதைப் பெற, எதை இழக்கிறோம்? வெறும் 720 நாட்களின் மகிழ்ச்சிக்காக 9,900 நாட்களை தியாகம் செய்கிறோமே இதுவா...? ஒருவன் புழுக்களை போட்டு மீன்களைப் பிடிப்பதற்கு பதிலாக, மீன்களைப் போட்டு புழுக்களை பிடிப்பதற்கும், நமக்கும் பெரியதாய் என்ன வித்தியாசம் இருக்க முடியும்? வாழ்க்கையை இழந்து வசதிகளையும் பெறும் இந்த "வாழாத வாழ்வு" ஏன்?

மேலும் மேலும் வசதிகளைப் பெருக்க வாழ்க்கையை இழக்க வேண்டாமே. நமக்குத் தரப்பட்ட மகத்தான பரிசான, பொன்னான நேரங்களை வீணாக்காமல் பயனுள்ள வாழ்க்கை வாழ்ந்து பாருங்கள்.

# தேசத்துரோகிகளுக்கான தண்டனை சம்பந்தன் குழுவுக்கு வழங்க வேண்டும்

## கூறுகிறார் அமைச்சர் சம்பிக்க

(கொழும்பு)

அமெரிக்காவுடன் இணைந்து நாட்டை காட்டிக் கொடுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு எதிராக அரசியலமைப்பின் பிரகாரம் கடும் நடவடிக்கை அவசியம். இனியும் பொறுத்திருப்பதில் அர்த்தமில்லை.

நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்களை வெளிப்படையாக தண்டிக்க வேண்டும். இல்லையென்றால் நாட்டைப் பாதுகாப்பதில் நாம் தோல்வி கண்டு விடுவோம். அரசியலமைப்பின் 157ஆவது பிரிவின் படி தேசத்துரோகிகளுக்கு என்ன தண்டனையோ அதனை சம்பந்தன் குழுவிற்கும் வழங்க வேண்டும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

யுத்தத்தின் இறுதிக்காலப் பகுதியில் படையினரால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகின்ற போர்க் குற்றங்கள் குறித்து அர சாங்கம் விசாரணை செய்யும். ஆனால், நல்லி ணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் காணப்படுகின்ற அதிகாரப்பகிர்வு போன்ற தேசிய அரசியலுடன் தொடர்புபட்ட விடயங்களை ஒரு போதும் அமுல்படுத்த முடியாது.


அமெக்காவிற்கும் இந்தியாவிற்கும் ஒரு விடயத்தை உறுதியாக கூற விரும்புகின்றோம். இலங்கை ஒரு சுயாதீன நாடு. எனவே, இலங்கையின் உள்நாட்டு விடயங்களில் தலையிட அதிகாரம் கிடையாது. மீறி தலையிடுவது அநாகரிகமான செயலாகும். ஜெனிவாவின் தீர்மானங்களின்படி இலங்கை நடக்காது. குறிப்பாக நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உள்நாட்டில் நடைமுறைப்படுத்தப் போவதில்லை. ஆனால், யுத்தத்தின் இறுதிக்காலப்பகுதியில் நடைபெற்றதாக கூறப்படுகின்ற போர்க்குற்ற விடயங்கள் தொடர்பில் இராணுவத்திடம், கடற்படை மற்றும் ஏனைய படைகளிடம் உள்நாட்டு விசாரணைகளை செய்ய முடியும். இது ஜெனிவா தீர்மானத்திற்கு அடிபணிந்து அல்ல. அத்தோடு உள்நாட்டில் அரசியல் தீர்வை ஏற்படுத்துதல், வடக்கு, கிழக்கு இணைப்பு போனற விடயங்கள் குறித்து பேசுவதற்கு எந்தவொரு அந்நிய நாட்டிற்கும் உரிமையில்லை. எமக்கென்று நீதிமன்றங்கள் உள்ளன. அத்தோடு மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றம் உள்ளது.



இவற்றை விட மிஞ்சிய சக்தியாக சர்வதேசத்தை இலங்கை அரசு ஒருபோதும் கருதாது. எவ்வாறாயினும் சம்பந்தன் குழுவினர் உள்நாட்டில் இருந்து கொண்டே பாரிய துரோகத் தனங்களைச் செய்து வருகின்றனர். அரசாங்கம் இவர்கள் விடயத்தில் இனியும் பொறுமைகாக்கக் கூடாது என்றார்.

# கடனட்டை மோசடியில் எரிபொருள் நிரப்பு நிலையங்கள்

(கொழும்பு)



கடனட்டை மோசடி தொடர்பில் அதிக எண்ணிக்கையானவை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் நிரப்பும் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் மூலமாகவே இடம்பெறுவதாகவும், அந்த ஊழியர்கள் எரிபொருள் நிரப்ப வருவோரின் கடனட்டைகளை விசேட இயந்திரத்தில் ஸ்கேன் செய்யும்போது மோசடி இடம் பெறுவதாகவும் குற்றப்புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

திட்டமிட்ட குழுக்கள் மூலமாக வழங்கப்பட்டுள்ள இலத்திரனியல் உபகரணங்களை பயன்படுத்தி எரிபொருள் நிலைய ஊழியர்கள் மூலமாக கடனட்டைகளில் உள்ள தகவல்கள் இரகசியமாக பெற்றுக்கொள்ளப்பட்டு போலி கடனட்டைகள் தயாரிக்கப்படுவதாக திணைக்களம் தெரிவித்துள்ளது .

இது தொடர்பாக சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த விடயம் தொடர்பில் கடனட்டைகளை பயன்படுத்துவோர் அவதானமாக இருக்குமாறும் குற்றப்புலனாய்வு திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# 1172 வீடுகள் மெனிக்பாமில் சேதம்



(வவுனியா)

வவுனியா - மெனிக்பாம் நலன்புரி நிலையத்தை அண்மித்த பகுதியில் ஊடறுத்து வீசிய காற்றினால் சேதமடைந்த வீடுகளை புனரமைக்கும் பணிகள் பு,ர்த்தியடையும் தறுவாயில் உள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கடும் காற்றுக் காரணமாக 1,172 வீடுகள் சேதமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் 1,218 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 13 பேர் காயமடைந்துள்ளதாகவும் நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டோருக்கு சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருவதாகவும் புனரமைப்புப் பணிகள் இராணுவத்தினரின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கடும் காற்றினால் 15 பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் செட்டிக்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

# வெளிநாட்டு கைக்குண்டுடன் கைது

(கொழும்பு)

கம்பஹா - நிட்டம்புவ - களுவாகஸ்வில விகாரை வீதியில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுடன் ஒருவர் நேற்று முன்தினம் மாலை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரிடம் இருந்து இராணுவச் சீருடையும் கைப்பற்றப்பட்டுள்ளது. நிட்டம்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கைக்குண்டுகள் மற்றும் வெடி பொருட்களுடன் பல்வேறு பகுதிகளிலும் கைது செய்யப்படும் சம்பவங்கள் தற்போது அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாடு முன்னேற முற்படுகையில் வெளிநாட்டு அழுத்தம் அதிகரிக்கிறது

(கொழும்பு)



நாடு முன்னேற்றப் பாதையில் செல்ல ஆரம்பிக்கும் போதே, வெளிநாட்டு அழுத்தங்கள் அதிகரிப்பதாக, அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

தற்போது மக்களுக்கான சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. நகரில் காணப்படுகின்ற வசதிகள், கிராமங்களிலும் ஏற்படுத்தப்படுகின்றன.

நாடு தற்போது அபிவிருத்திப் பாதையில் செல்ல ஆரம்பித்துள்ள நிலையிலேயே, வெளிநாடுகளின் அழுத்தங்கள் அதிகரிக்கிறது.

இந்த நிலையில், நாட்டினை அபிவிருத்தி செய்வதே அரசாங்கத்தின் சவால் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புதையல் தோண்டும் புதிய கருவி மீட்பு

புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்தப்படும் நவீன தொழிநுட்பத்துடன் அமைந்த விசேட கருவி ஒன்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

அனுராதபுரத்தில் இந்த கருவி மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தக் கருவியை கொண்டு நிலத்துக்கு அடியில் உள்ள பொருட்களை ஆய்வு செய்ய முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

# வேறு நாட்டுப் பிரச்சினையை விடுத்து உள்நாட்டு சிக்கலை தீர்க்க வேண்டும்

(கொழும்பு)

வேறு நாடுகளின் பிரச்சினையை பார்ப்பதற்கு முன்னர், அரசாங்கம் உள்நாட்டுப் பிரச்சினையை தீர்த்துக் கொள்ள வேண்டும் என ஜே.வி.பி.யின் பொது செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் ஏற்பட்ட நிலைமை தற்போது இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தியாவை பழிவாங்குவது போல பார்ப்பது, இலங்கை அரசியலுக்கு உகந்தது அல்ல

இது இந்தியாவின் பிரச்சினை என்ற அடிப்படையில், அந்த விடயத்தில் தலையிடாமல், உள்நாட்டில் காணப்படுகின்ற பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# பெற்றோலிய ஆலோசகருக்கு 1 இலட்சத்து 65 ஆயிரம் ரூபா வேதனம்

(கொழும்பு)

ஒரு இலட்சம் ரூபா மாத வேதனம் மற்றும் வேறு பல கொடுப்பனவுகளுடன் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு தகவல் தொழில்நுட்ப முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கையில், ஒரு இலட்சத்து 65 ஆயிரம் ரூபா வேதனத்திற்கு தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் ஒருவரை நியமிக்க கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளதாக லங்காசி நிவ்ஸ் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக பிரேரணை அடங்கிய பத்திரம் தற்போது பணிப்பாளர் சபையிடம் சமர்பிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிப்பிரிவில் பணியாற்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் .

தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப் பட்ட முகாமையாளர் ஒருவர் இருக்கையில் அதிக நிதி செலவிடப்பட்டு வெளிநாட்டு ஆலோசகர் ஒருவர் வரவழைக்கப்படுவதற்கு அவசியமில்லை என அந்த அதிகாரி சுட்டிக் காட்டியுள்ளதாக அந்த செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அவுஸ்.செல்ல முற்பட்ட ஆறு பேர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவுக்குச் செல்வதற்கு தயாராகவிருந்த ஆறு பேரை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் கொட்டாஞ்சேனையில் உள்ள விடுதியொன்றுக்கு அருகில் வைத்து கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் சட்டவிரோதமாக நபர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஒருவரும் அடங்குவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக வெளிநாடு செல்வதற்காக குறித்த சந்தேக நபரிடம் ஏனைய ஐவரும் பணம் கொடுத்துள்ளமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. படகுகள் மூலம் இவர்கள் அவுஸரேலியாவுக்குச் செல்ல திட்டமிட்டிந்ததாகவும் கைது செய்யப்பட்டவர்கள் கொட்டாஞ்சேனை, கிளிநொச்சி, திரு கோணமலை, ஊர்காவற்துறை மற்றும் சாவகச்சேரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# தனியார் மருத்துவ கல்லூரி விவகாரம்; குழுவின் அறிக்கை வெற்றுப் பத்திரமல்ல

## பிரதி சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

தனியார் மருத்துவ கல்லூரிகள் தொடர்பாக ஆராய்வதற்கு அமைச்சரால் நிமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை வெற்றுப் பத்திரமல்லவென பிரதி சுகாதார அமைச்சர் லலித் திசாநாயக்க தெரிவிக்கின்றனர்.

இந்த அறிக்கை தொடர்பாக அகில இலங்கை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

தனியார் மருத்துவ கல்லூரிகள் குறித்த பரிந்துரைகள் அந்த அறிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தப் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்ட அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் பிரதி சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தனியார் மருத்துவ கல்லூரி தரம் தொடர்பில் ஆராய்வதற்காக சுகாதார அமைச்சர் நியமித்த குழுவின் அறிக்கையில் தமது நிலைப்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் டாக்டர் கிஷந்த தசநாயக்க தெரிவித்தார்.

எனினும், அந்தக் குழுவின் அறிக்கை உரிய காலத்தை விட ஆறு மாதங்கள் தாமதித்தே வெளியிட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியிருந்தார்.

## இளமைப் பெயர்கள்

1. பசு - கன்று
2. ஆடு - குட்டி
3. காகம் - குஞ்சு
4. குருவி - குஞ்சு
5. நாய் - குட்டி
6. கோழி - குஞ்சு
7. பாம்பு - குட்டி
8. குதிரை - குட்டி
9. மீன் - குஞ்சு
10. நெல் - நாற்று
11. பனை - வடலி
12. வாழை - குட்டி
13. கிளி - குஞ்சு, பிள்ளை
14. அணில் - குஞ்சு, பிள்ளை
15. தவளை - பேத்தை, குஞ்சு
16. புலி - குட்டி, குருளை
17. மான் - குட்டி, கன்று
18. குரங்கு - குட்டி, பறள்
19. யானை - கன்று, குட்டி, போதகம்
20. தென்னை - கன்று, பிள்ளை

## ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவான சொற்கள் சில

1. அகதி
2. அறிவாளி
3. எதிரி
4. ஒருவர்
5. சனாதிபதி
6. சட்டத்தரணி
7. சோம்பேறி
8. தைரியசாலி
9. நோயாளி
10. பிரதிவாதி
11. புலவர்
12. மந்திரி
13 வழக்காளி
14. அமைச்சர்
15. உலோபி
16. ஏழை
17. காரியதரிசி
18. குற்றவாளி
19. சுத்தவாளி
20. ஞானி
21. நீதிபதி
22. பாவி
23. புத்திசாலி
24. மந்திரவாதி
25. மேதை
26. வாதி

## ஐவகை நிலங்களும், பண்புகளும்

1. குறிஞ்சி - மலையும் மலை சார்ந்த இடமும்
2. முல்லை - காடும் காடு சார்ந்த இடமும்
3. நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடமும்
4. மருதம் - வயலும் வயல் சார்ந்த இடமும்
5. பாலை - மணலும் மணல் சார்ந்த இடமும்
6. ஐங்குரவர் - தாய், தந்தை, குரு, அரசன், தமையன்
7. ஐம்புலன் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் (மணம்)
8. ஐம்பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி
9. ஐம் பூதம் - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்
10. ஐந்தொழில் - படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைதல்



## இணை மொழிகள்

1. மேடு பள்ளம்
2. அங்கும் இங்கும்
3. ஊண் உறக்கம்
4. நன்மை தீமை
5. இன்ப துன்பம்
6. அக்கம் பக்கம்
7. உண்டு உடுத்து
8. கண்ணுங் கருத்தும்
9. உயர்வு தாழ்வு
10. வரவு செலவு
11. வாழ்வு தாழ்வு
12. சீரும் சிறப்பும்
13. மேல் கீழ்
14. மலையும் மடுவும்
15. விருப்பு வெறுப்பு
16. எலும்பும் தோலும்
17. எதிரும் புதிரும்
18. கோணல்மாணல்
19. உற்றார் உறவினர்
20. பொருள் பண்டம்
21. நோய் நொடி
22. தான தருமம்
23. அடிமுடி
24. கள்ளங்கபடு
25. ஏழை எளியவர்
26. சுகதுக்கம்
27. கணக்கு வழக்கு
28. ஆதி அந்தம்
29. பழக்க வழக்கம்
30. பட்டம் பதவி
31. கனவு நனவு
32. அல்லும் பகலும்
33. ஏற்றம் இறக்கம்
34. கரடு முரடு
35. ஈவு இரக்கம்
36. பயிர் பச்சை

## எதிர்ப்பாற் சொற்கள்

1. ஒருவன் - ஒருத்தி
2. குணவான் - குணவதி
3. பாங்கன் - பாங்கி
4. பிரான் - பிராட்டி
5. தாதன் - தாதி
6. நம்பி - நங்கை
7. பாடகன் - பாடகி
8. பிரியன் - பிரியை
9. புனிதன் - புனிதை
10. பெருமான் - பெருமாட்டி
11. பேரன் - பேத்தி
12. மணவ்ாளன் - மணவாட்டி
13. மருத்துவன் - மருத்துவிச்சி
14. மித்திரன் - மித்திரை
15. மூதாளன் - மூதாட்டி
16. விருத்தன் - விருத்தை
17. வீட்டுக்காரன் - வீட்டுக்காரி
18. திருவாளன் - திருவாட்டி
19. பாக்கியவான் - பாக்கியவதி
20. பாணன் - பாடினி, விறலி
21. பாலகன் - பாலகி, பாலிகை
22. வீரன் - வீரி, வீராங்கனை

### பேச்சு மொழியில் உள்ள சில சொற்களின் திருத்தமான வடிவங்கள்

1. நாகரீகம் - நாகரிகம்
2. சந்தணம் - சந்தனம்
3. உடமை - உடைமை
4. புடவை - புடைவை
5. அடயாளம் - அடையாளம்
6. யாவாரம் - வியாபாரம்



### தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

# கல்வி முரசு




இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

## இலங்கை

01) பரப்பளவு - 65, 525 சதுர கிலோமீற்றர்
02) மாகாணங்கள் - 09
03) நிர்வாக மாகாணங்கள் - 08
04) மாவட்டங்கள் - 25
05) தேர்தல் மாவட்டங்கள் - 22
06) பெரிய மாவட்டம் - அனுராதபுரம்
07) சிறிய மாவட்டம் - கொழும்பு
08) மிக நீளமான ஆறு - மகாவலி கங்கை
09) மிகக் கூடிய மழை வீழ்ச்சி பெறும் இடம் - வட்டவளை
10) உயரமான மேட்டுநிலம் - ஹட்டன்
11) உயரமான மலை - பீதுறுதாலகால
12) மிகப் பெரிய பூந்தோட்டம் - பேராதனை
13) மிக உயரமான குன்று - கொக்காகல
14) முதலாவது தமிழ்ப் பத்திரிகை - உதயதாரகை
15) நாடாளுமன்றத்தை சுற்றி ஓடும் ஆறு - தியவன்ன
16) தேசிய மலர் - நீலோற்பவம்
17) தேசிய மரம் - நாகமரம்
18) தேசிய விளையாட்டு - கரப்பந்தாட்டம்
19) தேசிய பறவை - காட்டுக்கோழி
20) தேசிய புனித மரம் - வெள்ளரசு மரம்
21) மிக உயர்ந்த நீர்வீழ்ச்சி - பம்பரகந்த
22) அழகிய நீர்வீழ்ச்சி - துன்கிந்த, தியலும
23) இயற்கைத் துறைமுகம் - திருகோணமலை
24) வலங்குகள் சரணாலயம் - ஜால, வில்பத்து
25) தேயிலை ஆராய்ச்சி நிலையம் - தலவாக்கல
26) இறப்பர் ஆராய்ச்சி நிலையம் - அகலவத்தை
27) தென்னை ஆராய்ச்சி நிலையம் - லுணவில்
28) எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் - சபுகஸ்கந்த
29) ஜனாதிபதி வசிப்பிடம் - ஜனாதிபதி மாளிகை
30) பிரதமர் வசிப்பிடம் - அலரி மாளிகை

- ✶ ஒரு நாட்டின் அடையாளம் தேசிய இலட்சினையாகும்
- ✶ தேசிய இலட்சினை இடுவதன் மூலம் அரச பத்திரங்கள் ஆணை இடப்படுகின்றன.




1 - தர்மசக்கரம்
2 - மலர் இதழ்கள்
3 - நெற்கதிர்
4 - சிங்கம்
5 - நிறைகுடம்
6 - சூரியன்
7 - சந்திரன்

**தேசிய இலட்சினையில் உள்ள அடையாளமும் வெளிப்படுத்தும் விடயங்களும்**

சிங்கம் - வீரம்
கலசம் - சௌபாக்கியம்
சந்திர சூரியர் - உலக நிலைப்பாடு
நெற்கதிர் - சௌபாக்கியம்
தர்மசக்கரம் - தர்மமும் சமத்துவமும்
தாமரை மலர் - சுத்தம்

- ✶ இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளது.
- ✶ இலங்கை பற்றிய வரலாறு அறிய மகாவம்சம் என்னும் நூல் உள்ளது.
- ✶ இலங்கைக்கு அண்மையில் உள்ள நாடு இந்தியா ஆகும். மாலைதீவு, பங்களாதேஷ், பாகிஸ்தான், பூட்டான், நேபாளம் போன்றன உள்ளது.



1) கூடுதல் மாவட்டங்கள் கொண்ட மாகாணம்?
   - வடமாகாணம்
2) நிலப்பரப்பில் கூடிய மாகாணம்?
   - வடமத்திய மாகாணம்
3) மூவின மக்களும் வழிபடும் இடம்?
   - சிவனொளிபாத மலை
4) சிகிரியா குகை ஓவியம் உள்ள இடம்?
   - அனுராதபுரம்
5) முதலாவது தமிழ்த் துறைப் பேராசிரியர்?
   - சுவாமி விபுலானந்தர்
6) சர்வதேச விமான நிலையம்?
   - பண்டாரநாயக்கா
7) கலாசார முக்கோண வலயம்?
   - அனுராதபுரம், பொலநறுவை, கண்டி
8) மனித மூளை தன் ஆயுட்காலத்தில் பத்துக் கோடி செய்திகளை சேமிக்கும் திறன் கொண்டது.
9) பெருந்தோட்டப் பயிர்கள்?
   - தேயிலை, இறப்பர், தென்னை
10) இந்து சமய மறுமலர்ச்சிக்கு பாடுபட்டவர்?
   - ஆறுமுகநாவலர்
11) பௌத்த சமய மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டவர்?
   - அநாகரிக தர்மபால
12) இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கு பாடுபட்டவர்?
   - சித்திலெப்பை

## சில சொற்களுக்கான கருத்து விளக்கங்கள்

01) பௌத்த மதகுரு - பிக்கு, பிக்குணி
02) இந்து மதகுரு - அந்தணர், குருக்கள்
03) இஸ்லாமிய மதகுரு - மௌலவி
04) கிறிஸ்தவ மதகுரு - அருட்தந்தை, அருட்சகோதரி
05) மீன்பிடிப்பவர் - கடற்றொழிலாளி
06) ஆடை நெய்பவர் - நெசவாளி
07) கத்தி செய்பவர் - கொல்லர்
08) தளபாடம் செய்பவர் - தச்சர்
09) மூட்டை தூக்குபவர் - நாட்டாமை
10) சட்டி, பானை செய்பவர் - குயவர்
11) நகை செய்பவர் - பொற்கொல்லர், தட்டார்
12) நீதிபதி - தீர்ப்புக் கூறுபவர்

## இலங்கையின் பிரதான ஆறுகள். (முக்கியமான ஆறுகளில் சில இங்கு தரப்பட்டுள்ளன)

| | | | |
|---|---|---|---|
| 01. மகாவலி கங்கை | 02. ஜின் கங்கை | 03. கிரிந்தி ஓயா | 04. மாணிக்க கங்கை |
| 05. களனி கங்கை | 06. நில்வள கங்கை | 07. மீ ஓயா | 08. கும்புகன் ஓயா |
| 09. களு கங்கை | 10. தெதுறு ஓயா | 11. மாதுறு ஓயா | 12. பறங்கி ஆறு |
| 13. வளவ கங்கை | 14. கலா ஓயா | 15. கல்லோயா | 16. மல்வத்து ஓயா |

## பிரதான ஆறுகளும் அவை கடலுடன் கலக்கும் இடங்களும

01 மகாவலி கங்கை - திருகோணமலை
02. களு கங்கை - களுத்துறை
03. களனி கங்கை - கொழும்பு
04. வளவ கங்கை - அம்பாந்தோட்டை
05. நில்வள கங்கை - மாத்தறை

## தொடர் மொழிக்கு ஒரு மொழி

01. சுயசரிதை :- ஒருவர் தானே தன்னைப் பற்றி எழுதும் வரலாறு
02. சுயநலவாதி :- தனது நலனை மட்டும் கருதி வாழ்பவன்
03. ஒத்திகை :- கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றும் முன்பு பார்த்துத் திருத்தும் நிகழ்ச்சி
04. ஊதாரி :- கண் மூடித்தனமாகப் பணத்தை வீணே செலவு செய்பவன்
05. ஆத்திகன் :- கடவுள் இருக்கின்றார் என நம்புகிறவன்
06. நாத்திகன் :- கடவுள் இல்லை என நம்புகிறவன்
07. நூன்முகம், முன்னுரை :- நூலாசிரியர் தனது நூலைப்பற்றி நூல் முகத்தில் எழுதும் உரை
08. அணிந்துரை :- ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த பிறர் வழங்கும் புகழ் உரை
09. அலி, பேடி :- ஆணும், பெண்ணும் அல்லாதது
10. கைமருந்து :- ஒருவர் வைத்தியர் இன்றி தாமே தனது நோய்க்குச் செய்யும் மருந்து
11. சரணாகதி :- வேறு துணையில்லாதபோது ஒருவரிடம் தன்னை ஒப்படைத்தல்

## சுருக்கப் பெயர்கள்

01. மு.ப. :- முற்பகல்
02. பி.ப. :- பிற்பகல்
03. கி.பி. :- கிறிஸ்துவுக்குப் பின்
04. கி.மு :- கிறிஸ்துவுக்கு முன்
05. இ.மி.ச. :- இலங்கை மின்சார சபை
06. ப.த. :- பதிவுத் தபால்
07. அ.ப. :- அரச பணி
08. சு.தி :- சுகாதாரத் திணைக்களம்
09. க.தி :- கல்வித் திணைக்களம்
10. உ.க.ப :- உதவிக் கல்விப் பணிப்பாளர்
11. சா.த :- சாதாரண தரம்
12. உ.த :- உயர்தரம்
13. ஐ.நா. :- ஐக்கிய நாடுகள்
14. ச.தொ.தா :- சர்வதேச தொழிலாளர் சம்மேளனம்
15. ச.நா.நி :- சர்வதேச நாணய நிதியம்
16. உ.உ.தி. :- உலக உணவுத் திட்டம்
17. உ.சு.தா. :- உல சுகாதார தாபனம்
18. வ.க.ப. :- வலயக் கல்விப் பணிப்பாளர்



## பொதுவாக அறிந்திருக்க வேண்டிய சில விடயங்கள்

01. இலங்கையின் மிகப்பெரிய தாவரவியற் பூங்கா எது? - பேராதனைப் பூங்கா
02. இலங்கையின் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம் - திருகோணமலை
03. இலங்கையையும், இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை எது? - பாக்குநீரிணை
04. இலங்கையில் அமைந்துள்ள செயற்கைத் துறைமுகம் எது? - கொழும்பு
05. இலங்கையில் விலங்குகள் சரணாலயம் அமைந்துள்ள இடம் எது? - வில்பத்து
06. இரத்தினக் கல் அதிகளவு கிடைக்கும் இடம் எது? - இரத்தினபுரி
07. இலங்கையின் அதியுயர்ந்த நீர்வீழ்ச்சி எது? - பம்பரகந்த
08. கறையானால் அரிக்கப்படாத தாவரம் எது? - தேக்கு, வேம்பு
09. அழகிய கூடு கட்டும் பிராணி எது? - தூக்கணாங் குருவி
10. பறக்க முடியாத பறவை எது? - தீக்கோழி
11. மிகப்பெரிய முட்டையிடும் பறவை எது? - தீக்கோழி
12. மிகச்சிறிய முட்டையிடும் பறவை எது? - தேன்சிட்டு
13. பாலைவனக் கப்பல் எனப்படும் மிருகம் எது? - ஒட்டகம்
14. மிகச் சிறிய இலையுடைய தாவரம் எது? - நெப்பந்திசு
15. உயரமான விலங்கு எது? - ஒட்டகச் சிவிங்கி
16. வேகமாகப் பறக்கும் பறவை எது? - பாடும் பறவை
17. மிக வேகமாகத் தரையில் ஓடும் விலங்கு எது? - சிறுத்தைப் புலி
18. உலகின் மிகப் பெரிய கண்டம் எது? - ஆசியாக் கண்டம்
19. உலகின் நீளமான நதி எது? - நைல் நதி
20. உலகின் மிகப்பெரிய பாலைவனம் எது? - சகாராப் பாலைவனம்
21. உலகின் மிக உயர்ந்த மலைச் சிகரம் - எவரெஸ்ட்
22. உலகின் அதிகளவு மக்கள் தொகை கொண்ட நாடு - சீனா
23. உலகிலேயே குறைந்த மக்கள் தொகையைக் கொண்ட நாடு - வத்திக்கான் நகரம்
24. உலகிலேயே மிகச் சிறிய கண்டம் - அவுஸ்ரேலியா
25. பூமிக்கு மிக அருகில் உள்ள கோள் எது? - வெள்ளி
26. பூமிக்கு மிகத் தொலைவில் உள்ள கோள் எது? - புளூட்டோ
27. மிகப்பெரிய கோள் எது? - வியாழன்
28. ஒளி மிகுந்த கோள் எது? - வெள்ளி
29. மிகச் சிறிய கோள் எது? - புதன்
30. சமுத்திரங்களில் மிக ஆழமானது எது? - மரியானா ஆழி
31. மின்சாரத்தைக் கண்டுபிடித்தவர் யார்? - மைக்கல்பரடே
32. வானொலியைக் கண்டுபிடித்தவர் யார்? - மார்க்கோணி
33. தொலைபேசியைக் கண்டு பிடித்தவர்? - அலெக்சாண்டர் கிரகாம் பெல்
34. மோட்டார் காரைக் கண்டுபிடித்தவர் யார்? - புல்மன்
35. மின்குமிழைக் கண்டுபிடித்தவர் யார்? - தோமஸ் அல்வா எடிசன்

| நீர்வீழ்ச்சி | உயரம் (மீற்றரில்) | அமைந்துள்ள ஆறு |
|---|---|---|
| துன்கிந்த | 55.6 மீ. | மகாவலி கங்கை |
| தியலும | 171 மீ. | மகாவலி கங்கை |
| பம்பரகந்த | 241 மீ. | வளவ கங்கை |
| கிரிந்தி | 165 மீ. | களு கங்கை |
| இராவணா | 49 மீ. | கிரிந்தி ஓயா |
| ரம்பொட | 119 மீ. | மகாவலி கங்கை |
| அபர்டின் | 90 மீ. | களனி கங்கை |

# ஆண்-பெண் உறவைப் பாதிக்கும் வகையில் பெண்ணியம் பேசுவோர் செயற்படக்கூடாது

## சட்ட விரிவுரையாளர் கோசலை

(நிரு)



பெண்ணியம் பேசுவதாகக்கூறி சமூகத்தில் ஆண் - பெண் நல்லுறவுகளைப் பாதிக்கும் வகையில் சிலர் செயறபடுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று யாழ்பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளர் கோசலை மனோகரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற மகளிர்தின நிகழ்வொன்றில் பிரதம விருந்தினராக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மகளிர் தினம் என்ற போர்வையில் பெண்கள் அனைவரும் குறிப்பிட்ட தினத்திலே கூடி தங்களுடைய உரிமைகள் தொடர்பாக கோசமிட்டுச் செல்வதுதான் மகளிர் தினமா? இவ்வாறான செயறபாடுகள் எந்தவகையில் பெண்களுடைய மேம்பாடடுக்கு உதவி செய்யப் போகிறது? ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 8ஆம் திகதி கொண்டாடப்படுகின்ற மகளிர் தினமானது பெண்கள் உரிமைகள் தொடர்பாக சமூகத்திலே இருக்கின்ற அத்தனை நபர்களும், குறிப்பாக பெண்கள் மட்டு மன்றி ஆண்களின் மனங்களிலும் மன மாற்றங்கள் ஏற்படக்கூடிய விதமாக அமைய வேண்டும்

வருடத்தில் ஒரு முறை மட்டும் கொண்டாடப்படுகின்ற இந்த மகளிர் தினம் வருடம் முழுவதும் பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை படிப்படியாகக் களைந்து செல்வதற்கு ஏற்றதொரு நிகழ்வாக அமையவேண்டும்.

முன்னைய காலங்களில் பெண்கள் மிக மோசமாக நடாத்தப்பட்டனர். படிப்பதற்கு, வேலை செய்வதற்கு, சுயாதீனமாக முடிவுகள் எடுப்பதற்கு அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. எனினும் தற்போது பெண்கள் உரிமைகள் தொடர்பாக கதைப்பதற்கு இருந்த சூழ்நிலைக்கும், இன்றைய பெண்கள் இருக்கும் நிலைமைக்கும் ஏராளமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலைமை மாறுவதற்கு பெண்கள் அதிகளவில் கல்வி கற்றமையே காரணம். .இன்று பெண்கள் அரசியல், வர்த்தகத்துறை, சட்டத்துறை, துணைவேந்தர், நீதிபதிகள் எனப் பல துறைகளில் காலடித்தடம் பதித்துள்ளார்கள். பெண்களின் அடிப்படை நிலைமையில் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

எனினும் பெண்கள் மீது பிரயோகிக்கப்படும் வன்முறைகளின் வடிவங்கள் மாற்றப்பட்டுள்ளதே தவிர வன்முறைகள் அதிகரித்தே காணப்படுகின்றன. இதனால் பல்வேறு பெண்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகவே உள்ளது.

யாழ்ப்பாணச் சமூகத்தைப் பொறுத்தவரையில் பெண்கள், ஆண்களிற்கு அடங்கியிருக்க வேண்டும் என்ற பிரச்சினை காணப்படுகின்றது. இந்த நிலை மாறவேண்டுமாயின் ஆண்-பெண் இருபாலரும் சேர்ந்து செயலாற்ற வேண்டும் என்றார். (சி)

# திருமறைக் கலாமன்றத்தில் திருப்பாடுகளின் காட்சி

(கிருஸாந்த்)



திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் தவக்கால ஆற்றுகை வேள்வித் திருமகன் திருப்பாடுகளின் காட்சி கடந்த வியாழக்கிழமை மாலை 6.45 மணிக்கு திருமறைக் கலாமன்ற அரங்கில் ஆரம்பமாகி நேற்று முன்தினம் வரை இடம்பெற்றது.

இந்தவருடமும் நடைபெறும் இந்த நிகழ்வில் 245இற்கு மேற்பட்ட கலைஞர்களின் உருவாக்கத்தில் 'கடவுள் வடித்த கண்ணீர்' எனும் கருப்பொருளில் யேசுநாதரின் வாழ்க்கையின் ஒருபகுதியை சித்தரிக்கின்ற திருப்பாடு நாடகக்காட்சி தொடர்ந்து இடம்பெற்றது.

கிறிஸ்தவர்கள் மத்தியில் சடங்கு நிலை ஆற்றுகையாகவும், விழாநிலை ஆற்றுகையாகவும் காணப்பட்டு வருவது பாஸ் (pass) என அழைக்கப்படுவதுதான் திருப்பாடுக்களின் காட்சி. இது ஆரம்பத்தில் பொம்மைகளைக் கொண்டு நிகழ்த்தப்பட்டாலும் இது 1950 களில் மனிதர்கள் நடிக்கின்ற நாடக மரபாக மாற்றம் அடைந்து முதலில் ஆங்கிலத்திலும் பின்னர் தமிழில் மொழிபெர்க்கப்பட்டும் ஆடப்பட்டு வருகின்றது.

திருமறைக் கலாமன்றத் தலைவர். அருட்கலாநிதி மரியசேவியார் அடிகள் தமிழ் மரபுக்குரியதான வகையில் முதன் முதலில் திருப்பா டுகள் நாடகத்துக்குரிய எழுத்துக்களை எழுதி நூற்றுக்கணக்கானோரை ஒன்றிணைத்து 1963ஆம் ஆண்டு தொடக்கம் இதனை மேற்கொண்டு வருகின்றார்.

ஆரம்பத்தில் மன்னார், நாரந்தனை, உரும்பிராய், குருநகர், அச்சுவேலி என ஆரம்பித்த இந்த மரபு 1980 களிலிருந்து யாழ்.நகரின் மத்தியில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்ற அரங்கில் வருடா வருடம் மேடையேற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சி)

# கோடைக்கு கூலான பானம்...

மனிதன் உட்பட அனைத்து ஜீவராசிகளும் குளிர்ச்சியைத் தேடி ஓடும் காலம் இது. அந்தளவிற்கு தற்போது யாழ்ப்பாணத்தில் வெயில் வாட்டி வதைக்கின்றது.

உடலுக்குத் தேவையான குளிர்ச்சியை அளித்து இரத்தத்தில் தாது உப்புக்களைச் சேர்த்து உடலுக்கு ஆரோக்கியத்தையும், சுறுசுறுப்பையும் வழங்கும் இயற்கை அளித்த இனிய பானம் இளநீர்.

இதனால், யாழ்ப்பாணத்தில் தற்போது இளநீர் விற்பனை களைகட்டியிருப்பதுடன், பல்வேறு இடங்களில் இளநீர்க் கடைகளும் புதிதாக முளைத்துள்ளன.

ஆனால், யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் இளநீர்களைக் கொள்வனவு செய்து சந்தையில் விற்பனை செய்யும் அளவிற்கு இளநீர் இல்லை என கவலையாகக் கூறுகின்றனர் யாழ். இளநீர் வியாபாரிகள்.

போதும் என்று சொல்லும் அளவுக்கு தேங்காய் மற்றும் இளநீர் உற்பத்தி பெருகிக் காணப்பட்ட யாழ்.மாவட்டத்தின் பெரும்பாலான பிரதேசங்களில். தென்னை மரங்கள் நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக அழிவடைந்துள்ளமையினாலேயே இந்த துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ளது.

இதனால் யாழ்.மக்கள் குடிப்பதற்கு மட்டுமல்ல பல்வேறு தேவைகளுக்குமாக பயன்படுத்துகின்ற இளநீர் தற்போது தென்னிலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டே விற்பனை செய்யப்படுகின்றது.

தென்னிலங்கை வியாபாரிகளிடமிருந்து இளநீர் ஒன்று 25 ரூபா முதல் 40 ரூபா வரை கொள்வனவு செய்து, 50 ரூபா தொடக்கம் 80 ரூபா வரை விற்பனை செய்வதாக திருநெல்வேலியில் இளநீர் வியாபாரம் செய்யும் வியாபாரி ஒருவர் குறிப்பிட்டார். ஆரம்பத்தில் இளநீர் ஒன்று 25 தொடக்கம் 30 ரூபா வரை விற்கப்பட்டதாகவும், தற்போது இளநீரின் விலை அதிகரித்துள்ளதனால் இளநீரைக் கொள்வனவு செய்யும் நுகர்வோரின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுவதாகவும் அவர் கவலை தெரிவித்தார்.

இதனால் நட்டம் என்று சொல்ல முடியாது, வருமானம் ஓரளவு போதுமானதாக இருக்கிறது என்கிறார் மற்றுமொரு வியாபாரி.

- பகீ

# பதிவிறக்கப் பெட்டகம்

பெரிய எழுத்தாளர்களை அடியொற்றி எழுதுவதோ தனக்கு முன் சிறப்பாக எழுதப்பட்டிருப்பதைத் தானும் திரும்ப ஒருதடவை [அந்த அளவுக்கு இல்லாமல்] பலவீனமாக முயன்று பார்ப்பதும் வீண் உழைப்பு ஆகும். தனக்கென ஒரு புதுப் பார்வை இருந்து ஏதாவது அதில் ஒரு நோக்கம் ஏற்ற முடியுமானால்தான் பேனாவைக் கையில் பிடிக்க வேண்டும்.

– சி.சு.செல்லப்பா

ஓர் அசலான கலைப்படைப்புக்கு எப்போதும் நூதனத் தன்மை – இதற்கு முன்பு இதுபோல ஒன்று இல்லை என்ற உணர்வு – இருக்கும்.

– சுந்தர ராமசாமி

சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லாமல் இருக்க முடிந்திருந்தால், மனிதர்கள், மனிதர்களுக்குச் சொல்ல வேண்டிய அனைத்தும் எப்பவோ சொல்லி முடிக்கப்பட்டிருக்கும்.

– பவுண்ட்

ஒரு கதையின் அமைப்பும் முடிவும் முன்னமே நமக்குத் தெரிந்துவிட்டால் அது நல்ல கதையல்ல. அந்தக் கதை வாசித்துக் கொண்டிருக்கும் தருணத்திலேயே நிகழ்ந்து கொண்டிருக்கும் விதமாக அமைய வேண்டும். வாழ்க்கையைப் போலவே எதிர்பாராத தருணங்களை அது கொண்டிருக்க வேண்டும். இத்தகைய உயிரம்சம்தான் கதையை வாசிக்கும்படி தூண்டுகிறது. சுவாரஷ்யப்படுத்துகிறது. எப்படி நம்மிடமிருந்தே வரும் கனவை நாம் அது வரும்வரை அறிந்திருப்பதில்லையோ அதுபோல. அறிந்தபிறகு வியப்பும் சிலசமயம் அதிர்ச்சியும் பரவசமும் அடைகிறோம். நல்ல படைப்பும் இவ்வாறுதான் நம்மை அடைகிறது.

– ருவா பஸ்டோல்

எந்தப் படைப்பின் அர்த்தத்தையும் வாசகனே உருவாக்குகிறான். நூறு வார்த்தைகள் கொண்ட ஒரு கவிதையை ஒவ்வொரு வார்த்தையாகப் படித்தால் அர்த்தம் வெளிப்படுவதில்லை. வாசகன் அவற்றை முறைப்படி இணைக்கும் போது – அதாவது தன்னை அதில் ஈடுபடுத்திக் கொள்ளும் போதுதான் அர்த்தம் கிடைக்கிறது.

– ஸார்த்

முதல் வாக்கியம் எழுதப்படுவதற்கு முன்பே எழுதப்பட்ட ஏராளமான வாக்கியங்கள் இருக்கின்றன. உண்மையில் இப்போது எழுதப்படும் எழுத்து ஏற்கனவே இருப்பவற்றின் யுத்தத்தில் தப்பிப் பிழைத்தவைதான். எல்லாமே நடுவிலிருந்து தான் தொடங்குகின்றன.

– ஹெலன் சிஸ

ஆக, தொடக்கமென்று ஏதுமில்லை. புதிய சொல்லாடலைத் தோற்றுவிப்பவன் என்று பெருமை பாராட்டிக் கொள்வதைக் காட்டிலும், சொல்லாடல் அவிழ்ந்து பரவும் ஒரு சந்தர்ப்பமாக, அது வெளிப்படுகிற மெல்லிய இடைவெளியாக, அது கரைந்து காணாமல் போகும் ஒரு புள்ளியாகவே என்னைக் கூறிக்கொள்வேன்.

– ஃபூக்கோ

கலைஞன் என்பவன் புதிதாக எதையும் செய்யவில்லை. அவன் சிருஷ்டியில் உள்ளவைகளைத் தேர்ந்தெடுக்கவும், இணைத்துவைக்கவும் மட்டுமே செய்கிறான்.

– கேசவதேவ்

இலக்கியத்தில் புதியது என்று எதுவுமில்லை.

– ரவீந்திரநாத் தாகூர்

எதுவும் புதிதில்லை; சொல்லும் முறைகள்தான் புதியதாகின்றன.

– சோயெங்கா

புதிதாக எதையும் சொல்லாத ஒன்று புதினமாக இருக்க இயலாது. புதிதாகச் சொல்ல இயலாதவை தோற்றுப் போனவை. தோற்றுப் போனவைகட்கு கலை இலக்கிய வரலாற்றில் இடமில்லை.

– மிலன் குந்தேரா

இருப்பைச் சார்ந்த பிரச்சினைகளை ஒற்றைப் பரிமாணத்தில் பிரதிபலித்து படைப்பை உருவாக்க முடியாது. படைப்பில ஒன்றைச் சொல்லும்போது சொல்லப்படாதவற்றின் அதிர்வுகளும் அதில் இருக்கின்றன. பிரச்சினைகளின் சமூக முக்கியத்துவம் பிரதிபலிப்புகளைப் படைப்பாக்கிவிடும் என்று எதிர்பார்ப்பது தவறு. "நானும் என்னைச் சுற்றியிருப்பவர்களும் சோகமாக இருக்கிறோம்" என்பதை அரற்றிக் கொண்டிருக்க ஒரு படைப்பாளி தேவையில்லை.

– க. மோகனரங்கன்

மனிதன் மனிதனாகத் தன்னை நிலைநிறுத்தப் போராட வேண்டிய அவலத்தை அனுபவமாக்குவது இலக்கியம்.

– ஒஸ்திரோவ்ஸ்கி

# மீண்டும் சேர்ப்பது ஜெயலலிதாவிற்கு ஆபத்து



(நாகர்கோவில்)

சசிகலா மீதான நடவடிக்கை இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் கட்சியில் சேர்க்கப்பட்டுள்ளதன் மூலம் ஜெயலலிதா பாதிக்கப் படுவார், என்று ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியசாமி தெரிவித்துள்ளார்.

நாகர்கோவிலில் அவர் மேலும் தெரிவித்தாவது,

ராமர் பாலத்தை தேசிய சின்னமாக அறிவிக்க வேண்டும். ராமர் பாலத்தை தொடாமல் சேது திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். இராணுவத் தளபதி வி.கே.சிங் விவகாரத்தில் சுப்ரீம் கோர்ட் நதிபதி மூலம் விசாரணை நடத்த வேண்டும். இலங்கை அதிபருக்கு பிரதமர் மன்மோகன்சிங் விளக்கக் கடிதம் அனுப்பியுள்ளது மிகமோசமான செயல்.

மின் கட்டணம் உயர்த்தியுள்ளதால் தொழில்கள் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பொது மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

கூடங்குளம் போராட்டத்துக்கு வெளிநாட்டுப் பணம் வருவதாக நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். இப்போதுதான் அதை பிரதமர் உணர்ந்துள்ளார். 60 சதவீதம் தோரியம் நமது நாட்டில் உள்ளது.

அதை கூடங்குளம் உள்ளிட்ட அணுமின் நிலையங்களுக்கு பயன்படுத்தலாம். சசிகலா மீதான நடவடிக்கை இரத்துச் செய்யப்பட்டுள்ளதால் ஜெயலலிதா தான் பாதிக்கப்படுவார் என்றார்.




## மறுதலிப்பும்! காட்டிக்கொடுப்பும்!

### தவக்காலச் சிந்தனை

பரிசுத்த வாரம் செவ்வாய்



இயேசுவின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவர்தான் யூதாஸ. ஆனாலும் இயேசுவுடன் கூடவே இருந்து, அவரோடு விருந்துண்டு, அவர் செல்லும் இடங்கள் எல்லாம் சென்றவர் தான். ஆனாலும் இறுதியில் தனது குருவை எதிரிகளுக்குக் 30 வெள்ளிக் காசுக்காக முத்தமிட்டுக் காட்டிக் கொடுத்தார்.


இதில் மற்றொருவர் தான் இராயப்பர். இவர் எப்பொழுதும் இயேசுவுடனே இருந்தவர். நீ பாறை உன் மேல் திருச்சபையைக் கட்டுவேன் என்று திருச்சபையின் திறவுகோலைப் பெற்றவர். இறுதியில் இயேசுவைத் தெரியாது என மூன்று முறை மறுத்தலித்தார். இப்படி அவரோடு கூட இருந்தவர்களே இயேசுவுக்கு எதிரியாக இருந்தார்கள். ஆனாலும் இயேசு இப்படியெல்லாம் நடக்கும் என்று முதலே அறிந்திருந்தார். அதனால்தான் அப்பம்பிட்கும்போது இயேசு யூதாசை நோக்கி "யூதா நீ செய்யப்போவதை விரைவாகச் செய்" என்றும், இராயப்பரை நோக்கி "நீ சேவல் கூவும் முன் மும்முறை என்னைத் தெரியாது என மறுதலிப்பாய்" என்றும் முன்னறிவித்தார். இதுவே கடவுளின் சித்தம் என்றும் உணர்ந்திருந்தார். ஆனாலும் தனது நண்பர்களை அவர் வெறுத்துவிடவில்லை. ஒதுக்கிவிடவில்லை. அவர்களுக்காக இறுதியில் இறைவனிடம் வேண்டுகிறார். "தந்தையே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் இவர்களது பாவங்களை மன்னியும்" என்று.

அன்பானவர்களே! நம்மில் எத்தயோ பேருடன் பழகினோம், நண்பர்களானோம். ஆனால் அவர்கள் விடும் தவறுகளை எம்மால் பொறுதது்க் கொள்ள முடியாமல் அவர்களது உறவை வெட்டியெறிந்து விடுகின்றோம். மன்னிக்கும் மனப்பாங்கை இழக்கின்றோம். எமது குடும்பம், சகோதரர்கள் மட்டில் நாங்கள் கொண்டுள்ள உறவுநிலையை புதுப்பித்து, பிறர்வாழ எமது வாழ்வை தியாகம் செய்வதன் மூலம் எமது எதிர்காலம் மேலும் சிறப்பானதாக அமையும். அப்போதுதான் பரலோக தந்தை எமது பாவங்களை மன்னித்து எம்மை தமது வான்வீட்டில் சேர்த்துக்கொள்வார். இந்தப் புனித வாரத்தில் நாங்கள் எம்மை ஆயத்தப்படுத்துவோம்.

**ஆர்.மதுசன், பாசையூர்.**

# சம்பளம் வாங்கமாட்டேன்

(டேராடுன்)



எம்.எல்.ஏ.வாக தேர்ந்தெடுக்கப்படும் வரை, சம்பளம் மற்றும் இதர சலுகைகளையும் வாங்க மாட்டேன் என, உத்தரகண்ட் முதல்வர் விஜய் பகுகுணா கூறியுள்ளார்.

உத்தரகண்ட் மாநில முதல்வராக, கடந்த 13 ஆம் திகதி பகுகுணா பதவியேற்றார். அதன்பின், ஏழு நாட்கள் கழித்து தன் அமைச்சரவையை விஸ்தரித்தார். இருந்தாலும் அமைச்சர்களுக்கான துறையை, அவர் ஒதுக்கவில்லை. இந்நிலையில், தன் அரசில் இடம் பெற்றுள்ள அமைச்சர்களுக்கு, நேற்றுமுன்தினம் இலாகாக்களை ஒதுக்கினார். உள்துறை, மின்சாரம், தொழில்கள் உட்பட, 20 முக்கிய துறைகளை தன்னிடம் வைத்துக் கொண்டார். இதன்பின், நிருபர்களிடம் பேசிய பகுகுணா, நான் சட்டசபைக்கு எம்.எல்.ஏ.வாக தேர்ந்தெடுக்கப்படும் வரை, சம்பளம் மற்றும் இதர சலுகைகளைப் பெறமாட்டேன். இருந்தாலும், எந்தத் தொகுதியில் போட்டியிடுவேன் என்பதை, இப்போதைக்கு தெரிவிக்க இயலாது என்றார். விஜய் பகுகுணா தற்போது லோக்சபா எம்.பி.யாக உள்ளார்.

# அண்டார்டிகாவில் புதிய ஆய்வு மையம்

(பெங்களூர்)

பனிமலைகள் நிறைந்த அண்டார்டிகா கண்டத்தில் இந்தியா, தனது மூன்றாவது ஆய்வு மையத்தை ஆரம்பித்து சோதனை ரீதியாக செயற்படத் தொடங்கியுள்ளது. உலகின் தென்பகுதியான அண்டார்டிகாவில் பல்வேறு நாடுகள் ஆய்வு மையம் அமைத்து பல்வேறு ஆய்வுகளில் ஈடுபட்டு வருகின்றன.

இதில் இந்தியாவும் இடம் பெற்றுள்ளது. இந்நிலையில் அங்குள்ள லார்சிமேன் பனிமலைப் பகுதியில் இந்தியாவின் மூன்றாவது ஆய்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக புவி அறிவியல் அமைச்சகத்தின் செயலாளர் சைலேஷ் நாயக் கூறியிருப்பது,

ஆய்வு மையத்தின் கட்டுமானப் பணிகள் முடிந்துவிட்டன. "பார்தி" என்று பெயரிடப்பட்டுள்ள இந்த ஆய்வு மையம் நவம்பரில் முறைப்படி திறந்து வைக்கப்படும்.

இந்தியா அறிவியல் ரீதியாக வேகமாக வளர்ந்து வருகிறது என்பதை இதுபோன்ற ஆய்வு மையங்கள் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்காட்டும். ராஜேஷ அஸ்தனா தலைமையிலான 15 பேர் அடங்கிய குழு இப்போது அங்கு முகாமிட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இதற்கு முன்பு, கடந்த 1988-89 இந்தியா சார்பில் "மைத்ரி" என்ற ஆய்வு மையம் அண்டார்டிகாவில் அமைக்கப்பட்ட. இதல் இருந்து சுமார் 3 ஆயிரம் கி.மீ. தொலைவில் புதிய ஆய்வு மையம் உள்ளது.

மைத்ரி மையத்தில் கோடை காலத்தில் 70 பேரும், பனிக் காலத்தில் 25 பேரும் தங்கி ஆய்வு செய்து வருகின்றனர். முன்னதாக 1983 ஆம் ஆண்டில் இந்தியா முதன்முதலாக அண்டார்டிகாவில் தட்சண கங்கோத்ரி என்ற முதல் ஆய்வு மையத்தை அமைத்தது. ஆனால் அது பனியில் மூழ்கி விட்டது.

நடப்பு பட்ஜெட்டில் துருவப் பகுதி ஆய்வுக்கென்று மத்திய அரசு ரூபா 290 கோடி ஒதுக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கறுப்புப் பணத்திற்கு எதிராக நாடு தழுவிய போராட்டம்



(பெங்களூர்)

பிரபல யோகா குரு பாபா ராம்தேவ், கறுப்புப் பணம் மற்றும் ஊழலை எதிர்த்து எதிர்வரும் யூன் 3ஆம் திகதி டில்லி ஜந்தர் மந்தரில் உண்ணா விரதப் போராட்டம் நடத்த உள்ளார். கடந்த 2011ஆம் ஆண்டு தலைநகர் டில்லியில் நடந்த அவரது உண்ணாவிரதம், பொலிஸாரின் தடியடியால் கலைக்கப்பட்டது.

தற்போது அதன் நினைவாக, அதே நாளில் இந்த உண்ணா விரதம் நடைபெற உள்ளதாக யோகா குரு செய்தித்தொடர்பாளர் திஜராவாலா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது, ஊழல் மற்றும் கறுப்புப் பணத்துக்கு எதிராக இன்று முதல் ஒகஸ்ட் 1ஆம் திகதி வரை, நாடு தழுவிய இயக்கத்தை ராம்தேவ் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் யூன் 4 ஆம் திகதி, நாட்டின் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும், இரத்ததான முகாம்கள் நடைபெறும் என்றும் திஜராவாலா தெரிவித்துள்ளார்.

# விண்ணில் ஏவுவதற்கு ஏப்ரல் - 20 இராசியான நாளாம்!

(பெங்களூர்)

முழுமையாக இந்தியாவில் வடிவமைக்கப் பட்ட முதல் ரேடார் இமேஜிங் செயற்கைக்கோள், எதிர்வரும் 20 ஆம் திகதி விண்ணில் ஏவப்படவுள்ளது. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தால், "ரிசாட் -1" என்ற ரேடார் இமேஜிங் செயற்கைக் கோள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்கைக்கோள், இரவு, பகல் மேகங்கள் சூழ்ந்த வானிலை என எந்த ஒரு சூழ்நிலையிலும் விண்ணிலிருந்து பூமியைத் தெளிவாகப் புகைப்படங்கள் எடுக்கும் திறனுடையது.

ரிசாட்-1 செயற்கைக்கோள் விவசாயம், நீர்வள மேலாண்மை உட்பட பலவிதமான பணிகளைக் கண்காணிக்க உதவிகரமாக இருக்கும். ரிசாட் - 2 போல, இது இராணுவம் தொடர்பான விடயங்களுக்குப் பயன்படுத்தப்படாது.

# மின்கட்டண உயர்வுக்கு எதிர்ப்பு விஜயகாந்த் போராட்டம்

(சென்னை)

மின் கட்டண உயர்வை திரும்பப் பெற வலியுறுத்தி, தே.மு.தி.க., சார்பில், வரும் 7 ஆம் திகதி, மின் வாரிய அலுவலகங்கள் முன் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடக்கும் என, அக்கட்சித் தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார். அவர் மேலும், மின் கட்டணத்தை, 7 ஆயிரத்து 874 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தி, மின் வாரியம் அளித்த பரிந்துரையை ஏற்று, மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அறிவித்துள்ளது. இந்த மின் கட்டண உயர்வால், மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டண உயர்வை திரும்பப்பெற வலியுறுத்தி, வரும், 7 ஆம் திகதி காலை 11 மணிக்கு, மாவட்ட தலைநகரங்களில் மின் வாரிய அலுவலகங்கள் முன், தே.மு.தி.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடக்கும் எனத் தெரிவித்தார்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................

முகவரி : ..................................

பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் ..................................

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# வி.ஐ.பிக்களுக்கு அளவுக்கு அதிகமான பாதுகாப்பு

(புதுடில்லி)


நாடு முழுவதும், 16 ஆயிரத்து 800 வி.ஐ.பி.க்களுக்கு, 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புப் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ளதாவும் இது அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை விட இரண்டு மடங்கு அதிகம் என்றும் இந்திய மத்திய உளதுறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும் வழக்கமாக, 16 ஆயிரத்து 788 வி.ஐ.பி.,க்களுக்கு, 28 ஆயிரத்து 298 பொலிஸார் மட்டுமே பாதுகாப்பு அளிக்க வேண்டும். ஆனால், தற்போது அனுமதிக்கப்பட்ட அளவை விட இரண்டு மடங்கு அதிக பொலிஸார், வி.ஐ.பி.க்கள் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கடந்தாண்டு ஜனவரியில், பொலிஸ் ஆராய்ச்சி புலனாய்வுத் துறை தயார் செய்த அறிக்கையில், ஒரு இலட்சம் மக்களுக்கு, 131 பொலிஸார் என்ற விகிதாசாரம் உள்ளது.

ஆனால், ஒரு இலட்சம் பேருக்கு, 173 பொலிஸார் என்ற விகிதாசாரம் என்பது தான், அனுமதிக்கப்பட்ட அளவு இதைக் கணக்கிடும் போது பொது மக்களுக்கான பாதுகாப்புக்கு அனுமதிக்கப்பட்ட அளவை விட குறைவான போலிஸார் தான். பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பயணிகள் விமானம் விபத்து; ரஷ்யாவில் 29 பேர் பலி



ரஷ்ய நாட்டு பயணிகள் விமானம் ஒன்று நிலை தடுமாறி விபத்தில் சிக்கி வெடித்ததில் அவ் விமானத்தில் பயணம் செய்த 29 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 2 ஊழியர்கள் உட்பட 43 பயணிகளை ஏற்றிக்கொண்டு இந்த விமானம் டியூமன் நகரிலிருந்து சென்ற சிறிது நேரத்தில் நிலைதடுமாறி கவிழ்ந்து விபத்துக் குள்ளானது.

டியூமன் நகரில் இருந்து 30 கி.மீற்றர் தொலையில் இந்த விபத்து நடந்துள்ளதாக ரஷ்ய நாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது. விபத்தில் சிக்கிய ரஷ்ய நாட்டு விமானத்தில் இருந்து சிலர் மீட்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. மேலும் இந்த விமான விபத்து குறித்த முழுமையான விசாரணைகளை ரஷ்ய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

உலகச் செய்திகள்

# ஆங் சான் சூகி அமோக வெற்றி



மியான்மரில் நடைபெற்ற நாடாளுமன்ற இடைத்தேர்தலில் ஜனநாயக கட்சித்தலைவர் ஆங் சான் சூகி அமோக வெற்றி பெற்றுள்ளார். மியான்மரில் இராணுவ ஆட்சி நடைபெறுகிறது. கடந்த 1990 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் ஆங்சான் சூகி (வயது -66) வெற்றி பெற்றார். ஆனால் அவரை ஆட்சியில் அமரவிடாதபடி இராணுவ அரசு வீட்டுக் காவலில் அடைத்து வைத்தது.

கடந்த 20 ஆண்டுகளாக சூகி பெரும்பாலும் வீட்டுச் சிறையிலேயே இருந்தார். கடந்த 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத்தேர்தலில், இவர் போட்டியிடவில்லை. இராணுவத்தின் ஆதரவுடன் தற்போது யூனியன் சொலிடாரிட்டி மற்றும் மேம்பாட்டு கட்சி ஆட்சியில் உள்ளது. இந்தக்கட்சி ஜனநாயக ரீதியாக சில சீர்திருத்தங்களை கொண்டு வந்தது.

மியான்மர் நாடாளுமன்றத்தில் கீழ் சபையில் 440 இடங்களும், மேல் சபையில் 224 இடங்களும் உள்ளன.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தின் கீழ் சபைக்கான 37 தொகுதிகளுக்கும், மேல் சபையின் ஆறு தொகுதிகளுக்கும் மற்றும் இரண்டு சட்டசபைத் தொகுதிக்கான இடைத்தேர்தலும் நடந்தது. 17 கட்சிகளைச் சேர்ந்த 176 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். சூகியின் தேசிய ஜனநாயக லீக் கட்சி 44 இடங்களில் போட்டியிட்டது. யாங்கூன் அருகே உள்ள காவ்மு மாவட்டத்தில் சூகி போட்டியிட்டார். இவரை எதிர்த்து ஆளும் கட்சி சார்பில் இராணுவ மருத்துவர் ஒருவர் போட்டியிட்டார்.

தேர்தலில் சூகி வெற்றி பெற்றுள்ளதால் அவர் முதன் முதலாக நாடாளுமன்றத்திற்குள் நுழைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. சூகி வெற்றி பெற்றதை கேள்வியுற்ற அவரது ஆதரவாளர்கள் யாங்கூன் உள்ளிட்ட நகரங்களில் ஆடிப்பாடி மகிழ்ச்சியை தெரிவித்தனர். மியான்மரின் ஆளுங்கட்சியை ஒப்பிடுகையில், சூகிக்கு 10 சதவீத உறுப்பினர்கள் கூட கிடையாது. எனவே நாடாளுமன்றத்தில் இவர் குரல் எழுப்பினாலும் எடுபடுமா என்பது சந்தேகம் தான் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

# இஸ்லாமியர்களுக்கு எதிராக டென்மார்க்கில் போராட்டம்

ஐரோப்பாவில் இஸ்லாமியர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை தடுத்து நிறுத்தக் கோரி, டென்மார்க்கில் போராட்டம் நடைபெற்றுள்ளது ஐரோப்பிய நாடுகளில் இஸ்லாமியர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது, இங்கிலாந்து விரைவில் கிறிஸ்தவ நாடு என்ற நிலையில் இருந்து மாறிவிடும் சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது என மக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். மேலும் பிரான்சில் வாலிபர் ஒரு வர் 7 பேரை சமீபத்தில் சுட்டுக் கொன்றார். விசாரணையில் அவர் அல் கொய்தா தீவிரவாத இயக்கத்தின் ஆதரவாளர் என்று தெரிய வந்தது. இந்த நிலையில் டென்மார்க், இங்கிலாந்து, ஜேர்மனி, சுவீடன், போலந்து உட்பட பல ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த



300இற்கும் அதிகமானோர் இந்தப எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தினர். பேரணிக்குச் சென்றவர்களை தடுத்து நிறுத்த 2,500இற்கும் அதிகமானோர் திரண்டனர்.

அப்போது இருதரப்புக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. கற்கள் மற்றும் போத்தல்களை வீசி தாக்குதலில் ஈடுபட்டனர். அவர்களை பொலிஸார் தடியடி நடத்தி விரட்டினர். இதுதொடர்பாக 80இற்கும் அதிகமானோரை கைது செய்தனர்.

# ஜப்பானில் தொடரும் நில நடுக்கம்


ஜப்பானில் கடந்த சில வாரங்களாக ஏற்படும் நிலநடுக்கங்களினால் அந்நாட்டு மக்கள் கவலையில் ஆழ்ந்துள்ளனர். ஜப்பானின் மேற்குப்பகுதியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 11.04 மணியளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதனால் நராஹா, தொமி யோகோ நகரங்களில் உள்ள வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கி அதிர்ந்தன. அப்போது அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த மக்கள் அலறியடித்தபடி எழுந்து வீதியை நோக்கி ஓடியதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இந்நிலநடுக்கம் 5.9 ரிக்டர் அளவில் பதிவானதாக ஜப்பான் வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. மேலும் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக வழக்கத்தை விட அதிக உயரத்தில் கடல் அலைகள் எழும்பின. ஆனால் சுனாமி எச்சரிக்கை எதுவும் அரசு அறிவிக்கவில்லை. இச்சம்பவத்தினால் ஏற்கனவே பாதிப்புக்குள்ளான புகுஷிமா மற்றும் நாய்னி அணுஉலைகளுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என்றும் ஜப்பான் அரசு அறிவித்துள்ளது.

# உலகைச் சுற்றிப் புறப்பட்ட குழுவின் பயணம் இரத்து







பிரித்தானியா மற்றும் அவுஸ்ரேலியா நாட்டைச் சேர்ந்த குழுவினர் உலகம் முழுவதையும் கடல் வழியாக சுற்றிப்பார்க்க உல்லாசப் படகொன்றில் பயணத்தை ஆரம்பித்தார்கள்.

இவர்களில் ஜான் ஹிட்சன்(வயது-50) இவர் மருத்துவராக பணியாற்றுகிறார். மார்க் புரோகிஸ்(வயது-37), நிக் போரா(வயது 28), இவர் லண்டனில் மென்பொருள் பொறியியலாளராக பணியாற்றுகின்றார்.

இவர்களுடன் அவுஸ்ரேலியா குயின்ஸ் லாண்டைச் சேர்ந்த மேக்ஸ் வில்சன்(வயது 62) என்ற முதியவரும் பயணம் செய்தார். தென்பசிபிக் பெருங்கடலின் கலிபோர்னியா பகுதியில் இவர்கள் பயணம் செய்த போது பயங்கர அலை ஒன்று தாக்கியது. இதன் காரணமாக படகு சேதமடைந்ததோடு பயணம் செய்த வீரர்களும் படுகாயமடைந்துள்ளனர். இதனால் இவர்களது பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இந்தத் தகவலை இப்பயணத்தின் ஒருங்கிணைப்பாளரான கிளிப்பர் வென்சர்ஸ் என்பவர் தெரிவித்துள்ளார்.

# இங்கிலாந்தில் கடந்த ஆண்டில் 400 குழந்தைத் திருமணங்கள்

இங்கிலாந்தில் கடந்தாண்டில் மட்டும் இந்தியா, பாகிஸ்தான் உட்பட ஆசிய நாடுகளைச் சேர்ந்த 400 சிறுமிகளுக்கு கட்டாயத் திருமணம் நடந்துள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. இங்கிலாந்து உள்துறை அமைச்சகத்தின் கீழ் குழந்தை திருமண தடுப்புப் பிரிவு செயற்படுகிறது. இந்தப்பிரிவு வெளியிட்ட அதிகாரப்பூர்வ தகவலின்படி கடந்த 2011ஆம் ஆண்டில் மட்டும் இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம் நாடுகளைச் சேர்ந்த 400 சிறுமிகளுக்கு அவர்களின் பெற்றோர்கள் கட்டாயத்திருமணம் செய்து வைத்துள்ளனர்.

அந்தச் சிறுமிகளில் 5 வயதுக் குழந்தையும் உண்டு. கடந்த 2008 ஆம் ஆண்டில் 1,618 குழந்தை திருமண தடுப்பு வழக்குகள் பதிவு செய்யப்பட்டது. 2010ஆம் ஆண்டில் இது 1,735 ஆக அதிகரித்தது. பின்னர் 2011ஆம் ஆண்டில் 1,500 ஆக குறைந்துள்ளது.

பெரும்பாலான பெற்றோர்கள், பள்ளி விடுமுறையின் போது குழந்தைகளை சொந்த நாட்டுக்கு அழைத்து சென்று அங்கு அவர்களுக்கு கட்டாயத் திருமணம் செய்து வைத்து விடுகின்றனர். இதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்தாலும் முழு அளவில் தடுக்க முடியவில்லை. எனவே குழந்தை திருமணம் செய்து வைக்கும் பெற்றோருக்கு 2 ஆண்டு வரை சிறை தண்டனை அளிக்கும் வகையில் புதிய சட்டம் கொண்டு வர பரிசீலித்து வருகிறோம் என்று அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# 11 வயது மாணவிக்கு தங்கப் புதையல்



அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள ஆக்லாந்தில் 11 வயது மாணவிக்கு தங்கப் புதையல் கிடைத்துள்ளது.

தனியார் பள்ளியில் 6ஆவது வகுப்பு படிக்கும் மாணவர்கள் அங்குள்ள ஒரு ஏரியை சுத்தப்படுத்தினர், அப்போது குப்பை கூளமாகக்கிடந்த இடத்தில் ஒரு பை இருந்ததை 11 வயது மாணவி கண்டெடுத்தார்.

அதன் பின் மாணவ, மாணவிகள் அந்த பையைத் திறந்து பார்த்ததில், 100இற்கும் மேற்பட்ட தங்க நகைகள், வெளிநாட்டு பழங்கால நாணயங்கள் மற்றும் மோதிரங்கள், பிரேஸ்லெட் போன்றவை இருந்தன.

பின்னர் இவை அரசு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. பொதுவாக இந்த ஏரியை சுத்தம் செய்யும் போது கைத்தொலைபேசிகள், துணி வகைகள் மற்றும் டென்னிஸ் பந்துகள் தான் கிடைக்கும். தற்போது தங்க நகைகள் கிடைத்து இருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது என மாணவர்கள் தெரிவித்தனர்.

# யோ. கர்ணனின் "சேகுவேரா இருந்த வீடு"

- கருணாகரன்

யோ. கர்ணனின் 'சேகுவேரா இருந்த வீடு' சிறுகதை நூலின் அறிமுக நிகழ்வைப் பற்றிய தொடக்கம்...

யோ.கர்ணன் தன்னுடைய இரண்டாவது சிறுகதைத் தொகுதியின் அறிமுக நிகழ்வை யாழ்ப்பாணத்தில் நடத்தலாம் என்று விரும்பினார். ஆனால், அதற்காக அவர் பட்ட சிரமங்கள் கொஞ்சமல்ல. அது ஒரு பெரிய போராடடம். முள்ளிவாய்க்கால் சிரமங்கள், அகதிமுகாம் வாழ்க்கைச் சிரமங்கள், தடுப்புமுகாம் வாழ்க்கைச் சிரமங்களைப் போல அவர் இந்தப் புத்தகத்தின் அறிமுகத்தைச் செய்வதற்கும் சிரமங்களையே படவேண்டியிருந்தது.




கூட்டத்தை ஒழுங்கு படுத்துவது, அதை நடத்துவது என்பதில், அவர் தொடர்பு கொண்டவர்கள், அவர் எதிர்பார்த்தவர்கள், அவர் விரும்பியவர்களிற் சிலர், அவரை விட்டு, அவருடைய கதைகளை விட்டு விலகிக் கொண்டதே இந்தச் சிரமங்களில் முக்கியமானது. இதனால் ஒரு கட்டத்தில் அவர் கலந்து கொள்வோரைத் தீர்மானிக்க முடியாதவராக இருந்தார். கலந்து கொள்ளச் சம்மதித்தவர்கள் மெல்லக் கழன்று கொண்டிருக்கிறார்கள் என்று சோர்வுடன் ஒரு கட்டத்தில் சொன்னார் கர்ணன். ஆனாலும் அவர் தளர்ந்து விடவில்லை.

இறுதியில் சிறப்பாக நடந்தது அறிமுக நிகழ்வு. பல்வேறு தரப்பினரும் நிகழ்வுக்கு வந்திருந்தனர். குப்பிளான் ஐ. சண்முகன் நிகழ்வுக்குத் தலைமை ஏற்றார். பருத்த்தித்துறை 'அறிவோர் கூடல்' அமைப்பைச் சேர்ந்த திரு. குலசிங்கமும் சட்டத்துறையைச் சேர்ந்த குமாரவடிவேல் குருபரனும் 'சேகுவேரா இருந்த வீடு' நூல் தொடர்பாக அபிப்பிராய உரைகளை நிகழ்த்தினர்.

குலசிங்கத்தின் உரை மிகச் சுவாரஷயம். அந்த உரையை முழுமையாக யாராவது எழுதினால் அதைப் பிறரும் அறியலாம். அல்லது குலசிங்கமே எழுதலாம்.

குமாரவடிவேல் குருபரன் மாற்றுப் பார்வைகளைக் குறித்து உரையாற்றினார். இளைய தலைமுறையைச் சேர்ந்த அவருடைய உரை கவனத்திற்குரியது. விமர்சனங்களை முன்வைப்போர் தங்களின் மீதான விமர்சனங்களையும் முன்வைக்க வேண்டும். அல்லது தங்களைப் பற்றி வைக்கப்படும் விமர்சனததுக்கும் முகம் கொடுக்க வேண்டும் என்றார் அவர். மாற்றுப் பார்வையாளர்கள் தங்களுடைய நிலைப்பாடுகளைக் குறித்துச் சிந்திப்பதும் அவசியம் என்ற அவருடைய கருத்துக் கவனத்திற்குரிய ஒன்று.

இதற்குப் பிறகு தேவாவின் பேச்சு. தேவா 'குழந்தைப் போராளிகள்' மற்றும் 'அனோனிமா' என்ற இரண்டு புத்தகங்களை மொழிபெயர்த்திருந்தவர். மிகச் சுருக்கமாக - ஆனால் அழுத்தமாகப் பேசினார். கதைகளின் மையத்தைச் சுட்டியதாக அவருடைய பேச்சிருந்தது.

அடுத்து, நிலாந்தன் யோ.கர்ணனின் எழுத்துகளின் முக்கியத்துவம், அவற்றின அடையாளம் குறித்து நீண்டதொரு உரையை நிகழ்த்தினார். அந்த உரையின் எழுத்து வடிவம் விரைவில் வெளியாகும் எனத் தெரிகிறது. அவர் எழுதுவதைப்போலவே பேசுவார். எழுத்துக்கும் பேச்சுக்குமிடையில் அதிக இடைவெளியோ வேறுபாடுகளோ இருப்பது குறைவு.

அடுத்தது (கருணாகரனின்) என்னுடைய உரை. கர்ணனின் கதைகள் காயங்களின் கதைகள் என்ற சாரப்பட அமைந்த உரை. சு.குணேஸ்வரன் (துவாரகன்) எல்லோருக்கும் நன்றி சொன்னார்.

நிகழ்வில் கீரன், மித்திரன், தேவா, ரங்கன், ஜோர்ச்,தேடகம் கோணேஸ் போன்ற புலம்பெயர் நாடுகளிலிருந்து வந்திருந்தவர்களும், சோ.பத்மநாதன், ஓவியர் ஆ. இராசையா, ஐ.வரதராஜன், தபின் (அம்பலம் - பிரபா), கலைமுகம் ஆசிரியர் செல்மர் எமில், சி.ரமேஸ், தானா. விஷ்ணு, யாத்திரீகன், யோகி, ந.சத்தியபாலன், தயாளன், கலாவண்ணன், ராதேயன், சர்வேஸ் எனப் பல உள்ளூர்வாசிகளும் கலந்துகொண்டனர். ஆனால், இலக்கியக் கூட்டங்களில் அதிகமாகப் பங்கெடுக்கும், அதிகாரச் செல்வாக்கைச் செலுத்தும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினர் - அதனுடைய இலக்கியப் பேச்சாளர்கள், விமர்சகர்கள் யாரும் வந்ததாகத் தெரியவில்லை. கர்ணன் புத்தகம் தொடர்பாகப் பேசுவதற்கு அழைத்தவர்களில் மறுத்தவர்கள் அல்லது சம்மதித்தபின் கதைகளைப் படித்தபிறகு சங்கடப்பட்டுக் கழன்றவர்கள் இந்தத் தரப்பினர் என்று கர்ணன் சொன்னார். (இந்த நிலையில் இலக்கிய ஆய்வுகளும் மாணவர்களின் இலக்கிய ஆய்வுகளுக்கு வழிகாட்டுவதும், அவற்றை மதிப்பிடுவதும் எப்படியிருக்கும்? இந்தக் கேள்வியை பலரும் நீண்டகாலமாகவே கேட்டு வருகின்றனர்).

ஏறக்குறைய அந்தப் பகுதியினர் இந்த நிகழ்வைத் தவிர்த்திருந்தனர் போலப்பட்டது என்றார் நிகழ்வுக்கு வந்திருந்த ஒரு நண்பர்.

முதல் வெளியாகிய 'தேவதைகளின் தீட்டுத்துணி' இந்தியாவில், புலம்பெயர் நாடுகளில் அறிமுகமான அளவுக்கு இலங்கையில் அறிமுகமாகியிருக்கவில்லை. தேர்ந்த வாசகர்களுடன் மட்டும் நின்று விட்டது. வாசித்த பலரும் கூட அபிப்பிராயங்களைச் சொல்லவில்லை. எந்தப் பத்திரிகையிலும் அல்லது எந்த இலக்கிய இதழ்களிலும் அதைப்பற்றிய விமர்சனங்கள் வந்ததாகவும் இல்லை. இவ்வளவுக்கும் கடந்த ஆண்டு சிறந்த சிறுகதைத் தொகுதி 'தேவதைகளின் தீட்டுத்துணி' என்று தேர்ந்தெடுத்து அதைப் பற்றி அறிமுகத்தைச் செய்திருந்தது ஆனந்த விகடன். இவ்வளவு பகிரங்கப்படுத்தப் படுத்தியும் அந்தத் தொகுதியை இரகசியமாக்கி விட்டது தமிழ்ச்சூழல்.

ஆனால், இப்பொழுது இரண்டு தொகுதிகளுடன் குறுகிய காலத்தில் கவனிப்புக்குரிய ஒருவராக வந்துள்ளார் யோ.கர்ணன். அடுத்ததாக விரைவில் அவருடைய இன்னொரு புதிய புத்தகத்தை - புதிய எழுத்தை நாம் எதிர்பார்க்கலாம்.

அவருடைய புத்தகங்களை வெளியிடும் 'வடலி' க்கு வாழ்த்துகளும் நன்றியும்.

---

# தாயும் சேயும்!

- அ.முத்துலிங்கம்

நான் ஆபிரிக்காவில் இருந்தபோது ஒரே கதையை பலரும் சொல்லக் கேட்டிருக்கிறேன். அந்தக் கொடூரமான கதை உண்மையாகக் கூட இருக்கலாம். சோமாலியாவில் ஒரு தாயும் சேயும் பாலைவனத்தை கடக்கிறார்கள். மணல் தணல் போல சுடுகிறது. தாய் குழந்தையை இடுப்பில் சுமந்தபடி ஓடுவதும், மர நிழல்களில் சற்று நின்று இளைப்பாறுவதுமாக முன்னேறுகிறாள். ஓர் இடத்தில் கால் வெந்துபோக வேதனை தாங்க முடியாமல் குழந்தையை கொதிக்கும் மணல்மேல் போட்டு அதன் மேல் ஏறி நிற்கிறாள். எத்தனை வலி என்றால் அந்தத் தாய் அப்படிச் செய்திருப்பாள் என்று நினைக்கும்போதே மனம் பதைக்கிறது.

இந்தக் கதையை கேட்டபோது எனக்கு பல வருடங்களுக்கு முன்னர் நான் சிறுவனாய் இருந்த சமயம் யாழ்ப்பாணத்தில், பரமேஸ்வராக் கல்லூரி வளாகத்தில் நடந்த தமிழ் விழா நினைவுக்கு வந்தது. சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை, பெரியசாமி தூரன், கல்கி, தவத்திரு தனிநாயகம் அடிகள் போன்ற பெரியோர்கள் அங்கே உரையாற்றினார்கள்.

விழாவில் வேலைசெய்த தொண்டர்களில் ஆக வயதில் குறைந்தது நான்தான். இரும்பினால் செய்த இராட்சத தண்ணீர் டாங்கை சுத்தம் செய்வதற்காக என்னை அதற்குள் இறக்கிவிட்டார்கள். அரைநாளாக சுத்தம் செய்தேன். அதுதான் நான் தமிழுக்கு ஆற்றிய ஆகச் சிறந்த தொண்டு. 100,000 மக்கள் குடித்த நீர் என் பாதம் பட்டுத்தான் அங்கிருந்து வெளியேறியது.

ரா.பி சேதுப்பிள்ளை பேசும்போது சிலேடையாகப் பேசி நிறைய கைதட்டல்கள் வாங்கினார். அவருடைய மாலையை யாரோ அவசரத்தில் மாற்றிப் போட்டுவிட்டார்கள். அதே சமயம் காலை நிகழ்ச்சி ஒன்று மாலை நிகழ்ச்சியாக மாறியதை அறிவிக்கவேண்டிய கட்டாயமும் அவருக்கு நேர்ந்தது. சொல்லின் செல்வர் எழுந்து ஒலிவாங்கியின் முன்னால் நின்று 'மாலை மாறிவிட்டது' என்று சுருக்கமாகச் சொன்னார்.

ரா.பி.சேதுப்பிள்ளை அன்று பேசும்போது பல தடவை 'தாய்நாடு, சேய்நாடு' என்று குறிப்பிட்டார். தாய்நாடு இந்தியா, சேய்நாடு ஈழம். அப்பொழுதெல்லாம் நான் இந்தியா என்றால் அது முழுக்க முழுக்க தமிழர்களால் நிரம்பிய நாடு என நம்பிய காலம்.

சில வருடங்களுக்கு முன்னர் இந்தியா செல்வதற்காக நானும் மனைவியும் கனடாவில் உள்ள இந்திய தூதரகத்தில் விசா விண்ணப்பம் செய்தோம். தூதரகத்தின் பூட்டிய கதவுகளுக்குமுன் நின்ற வரிசையில் நாங்களும் நின்றோம். விண்ணப்பத்தை கொடுத்துவிட்டு உள்ளே நுழைந்தோம். தேனீக்கள் ஒன்றின்மேல் ஒன்று அமர்ந்திருப்பதுபோல ஆட்கள் நெருக்கியடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். மூன்று மணி நேரம் காத்திருந்த பின்னர் எங்கள் முறை வந்து கூப்பிட்டார்கள்.

யன்னலுக்கு போய் அதிகாரியிடம் பேசினோம். 'அவர் எத்தனை நாளைக்கு?' என்றார். சொன்னேன். 'எதற்காக போகிறீர்கள்?' என்றார். சுற்றுலாவுக்கு என்றேன். மீண்டும் 'எதற்காகப் போகிறீர்கள்?' என்றார். மறுபடியும் சொன்னேன். பல் வைத்தியர் 'இன்னும் அகலமாக', 'இன்னும் அகலமாக' என்பதுபோல அதே கேள்வியை திருப்பி திருப்பிக் கேட்டார்.

எல்லாம் முடிந்துவிட்டது என நான் நினைத்த நேரம் ஒரு நீண்ட பாரத்தை நீட்டி 'இதையும் நீங்கள் நிரப்பவேண்டும். உங்கள் விண்ணப்பத்தை இலங்கைக்கு அனுப்பி அவர்கள் அனுமதி பெற்ற பின்னர்தான் இந்திய விசா வழங்கப்படும்' என்றார்.



'எங்களுடையது கனடா கடவுச் சீட்டு' என்றேன். அவர் 'ஆனால் நீங்கள் இலங்கையில் பிறந்திருக்கிறீர்கள். இலங்கையின் அனுமதி கிடைத்தால்தான் இந்தியாவுக்கு விசா தரமுடியும்.' உட்கார்ந்துகொண்டு தொடங்கிய பதிலை நின்றுகொண்டு முடித்தார்.

'கனடா கடவுச்சீட்டில் கனடிய குடிமகன் ஒருவர் இந்தியா போவதற்கு இலங்கையிடம் ஏன் அனுமதி கேட்கிறீர்கள்?' என்று கோபமாகக் கேட்டேன். அதிகாரி செல்பேசியை மூடுவதுபோல முகத்தை மூடினார். அதே சமயம் யன்னலையும் மூடினார்.

ரா.பி.சேதுப்பிள்ளை வர்ணித்த 'தாய்நாடு சேய்நாடு' உறவு இதுதான் எனப் புரிந்து கொண்டேன். ஒரு மாதம் சென்று எங்கள் இருவருக்கும் விசா கிடைத்தது. மனைவி மட்டும் இந்தியா போனார். நான் போகவில்லை.

# அரசாங்க மருந்துப் பொருட்கள் தனியார் மருந்தகத்திலிருந்து மீட்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்க வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்ட மருந்துப் பொருட்கள் தனியார் மருந்துவமனையொன்றுக்கு வந்து சேர்ந்தமை எப்படி என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையைச் சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்று யாழ். நகரப் பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்தனர்.

இதன்போதே மேற்படி மருந்துப் பொருட்கள் இவ்அதிகாரிகள் குழுவிடம் சிக்கிக்கொண்டன.

ஆரியகுளம் பகுதியில் உள்ள தனியார் மருந்தகமொன்றில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் மேற்படி திடீர் பரிசோதனைக் குழுவைச் சேர்ந்த பிராந்திய தொற்றுநோயியலாளர் சு.சிவகணேஸ், பிராந்திய உணவு மருந்துப் பரிசோதகர் பொ.சிவரூபன், மருந்தாளர் எஸ்.விக்கினேஸ்வரன் ஆகியோர் மேற்கொண்ட பரிசோதனையின் போது அரசாங்க இலட்சினை பொறிக்கப்பட்ட அரசாங்க வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்படும் மருந்துகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தனியார் மருந்தக உரிமையாளருக்கெதிராக பொலிஸாரூடாக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## மாதாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும், அரச சார்பற்ற நிறுவனங்களிற்குமான ஏப்ரல் மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் நாளைமறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்றும் இதில் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது சமுகமளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

# விசேட மீள் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இதழியல் டிப்ளோமா கற்கை நெறி முழுநேரம் அணி III (2008 / 2009), பகுதி நேரம் அணி II (2008/2010) கல்வியாண்டு மாணவர்களுக்கான விசேட மீள் பரீட்சை எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் பணிப்பாளர், ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் ஊடாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 15.04.2012 என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# தெற்கின் பிரமுகர்கள் நெடுந்தீவில் சுற்றுலா



(யாழ்ப்பாணம்)

நாடாளுமன்ற உத்தியோகத்தர்கள் மற்றும் தென்பகுதியைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் சுமார் நாற்பத்துமூன்று பேர் நேற்று முன்தினம் நெடுந்தீவுப் பகுதிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

இவர்கள் நெடுந்தீவின் சுற்றுலாத்தலங்களுக்கு விஜயம் செய்ததோடு நெடுந்தீவுப் பிரதேசத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி செயல் திட்டங்கள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டனர்.

இவர்களை நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளர் தானியேல் றெக்சியன் வரவேற்று நெடுந்தீவு அபிவிருத்தி பற்றி கலந்துரையாடல் ஒன்றையும் நிகழ்த்தி, இவர்களுக்கு நெடுந்தீவு சுற்றுலா பயணத்தின் மகிமை பற்றியும் எடுத்துக் கூறினார்.

# தொலைபேசியில் மிரட்டல் சூத்திரதாரிக்கு வழக்கு

(யாழ்ப்பாணம்)

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடமையாற்றும் அராலிப் பிரிவு பொது சுகாதாரப் பரிசோதகருக்கு உணவகம் ஒன்று சுகாதாரத்துக்கு கேடான வகையில் இயங்கியமைக்காக வழக்குத் தொடர்ந்ததன் காரணமாக தொலைபேசியூடாக ஒருவர் மிரட்டல் விடுத்துள்ளார்,

இதன் போது தான் ஒரு வழக்கறிஞர் எனவும், குறித்த பொது சுகாதாரப் பரிசோதகருக்கெதிராக மேல் மட்டங்களில் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும், தகாத வார்த்தைகளைப் பாவித்தும் மிரட்டல் விடுத்துள்ளார்.

இந்த வேளையில் குறிப்பிட்ட பொது சுகாதாரப் பரிசோதகர் உரையாடலை தனது கைத் தொலைபேசியில் பதிவு செய்து அதனை பொலிஸ் நிலையத்திலும், பிராந்திய சுகாதார பணிப்பாளருக்கும் கையளித்ததுடன் தனது முறைப்பாட்டையும் பதிவு செய்துள்ளார்.

உடனடியாகவே பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பொலிஸ் தலைமையகத்திற்கு தெரிவித்ததையடுத்து குறிப்பிட்ட நபர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

விசாரணையில் குறிப்பிட்ட நபர் ஒரு அரச உத்தியோகத்தர் என்பதும், மது போதையில் இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டதும் தெரியவந்துள்ளது என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## பரிசளிப்பு விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியின் பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று முற்பகல் 10.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி ஜெயந்தினி தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா மாவட்ட வைத்திய அத்தியட்சகர் ச.சத்தியமூர்த்தி, சிறப்பு விருந்தினராக கரைச்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# இராஜதந்திர அழுத்தம் பிரயோகிக்க வாய்ப்பு

## அமைச்சர் பீரிஸ் ஆருடம்

(கொழும்பு)

ஜெனிவாவில் இலங்கைக்கெதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்ட நிலையில் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லாத போதிலும், இராஜதந்திர ரீதியிலான அழுத்தங்கள் இலங்கை மீது பிரயோகிக்கப்படலாமென வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை மீதான பொருளாதாரத் தடைகளை விடவும் தற்போதைக்கு இராஜதந்திர ரீதியான அழுத்தங்களின் ஆபத்தே அதிகளவில் காணப்படுகிறது.

குறிப்பாக விடுதலைப் புலி ஆதரவாளர்கள் செறிந்து வாழும் நாடுகளில் இலங்கை இராஜதந்திரிகள் மீது பல்வேறு வழிகளில் அழுத்தங்கள் பிரயோகிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இதன் ஓர் கட்டமாகவே க்ளோபல் தமிழ் போரம் அமைப்பு, பிரித்தானியாவிற்கான இலங்கைத் தூதரக உயரதிகாரி மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா மீது அழுத்தங்களை பிரயோகித்து வருகிறது.

எதிர்வரும் காலங்களில் இவ்வாறான நெருக்கடிகள் ஏற்படலாம் எனவும் அவ்வாறான சவால்களை எதிர்நோக்க தயாராக வேண்டுமெனவும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

## பிரேரணைக்கு....

குற்றஞ் சாட்டுவதிலேயே சிலர் கவனம் செலுத்துகின்றனர்.

இந்த நிலையில், சர்வதேச நாணய நிதியத்திற்கு எதிராக குற்றஞ்சாட்டுவது தவறான செயலாகும்.

கப்பலில் ஏற்றப்பட்ட நிலையில் தற்போது இலங்கை வந்து கொண்டிருக்கும் வாகனங்களுக்கான வரியில் நிவாரணம் வழங்க சில நிறுவனங்கள் கோரியுள்ளன. இந்த விடயத்தின் நியாயத் தன்மையினை அரசாங்கம் ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை எடுக்கும்.

இந்தியா ஜெனிவா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தமையினால் அதற்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் இந்த வரி அதிகரிப்புகள் மேற்கொள்ளப்பட்டதாக சில இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இது தொடர்பாக அமைச்சர் தெரிவிக்கையில், இந்தியாவிற்காக இவ்வளவு வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டதாக எங்கும் குறிப்பிடப்படவில்லை.

ஜெனிவா தீர்மானத்திற்கு ஆதரவாக செயற்பட்டதற்காக எந்தவொரு நாட்டுடனும் குரோத மனப்பான்மையில் செயற்படவும் இல்லை, செயற்படப் போவதும் இல்லை என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## நிரந்தர சமாதானத்திற்கு...

இருக்க வேண்டும். அது இல்லாமல் நல்லிணக்கமும், நிரந்தர சமாதானமும் இனங்களுக்கிடையில் வர முடியாது. இது இலங்கையின் சகல இன மக்களுக்கும் நல்லதென்றும், அவர்களை நிரந்தர ஒற்றுமைக்கு இட்டு செல்லும் என்றும் நம்புகிறோம் எனக் கூறினார்.

இந்தியா வாக்களித்திருப்பது, அந்தப்பகுதி அயல் நாடுகளுக்கிடையில் கடுப்பு நிலைகளை தோற்றுவிக்காதா என்று அவரிடம் கேட்டபோது, பிரேரணையானது எல்லா நாடுகளும், இலங்கை மக்களுக்கு ஒரு நிரந்தர சமாதானத்திற்காக, இலங்கை அரசுடன் சேர்ந்து உழைப்பதற்காகும் என்றும் அதை எதிர்வழத்தில் பார்க்க முடியாதென்றும் கூறினார்.

அதேநேரம் இலங்கையின் நண்பனான இந்தியாவின் இணைவு பிரேரணையின் நன்நோக்கத்தை தெளிவாக நம்பவைக்கிறதென்றும், பிரேரணையின் நடைமுறைக்கு இது பாரிய பங்களிப்பாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

மேலும் இலங்கை நம்பிக்கையான விசாரணை ஒன்றை நடத்தும் என்றும், அவர்களின் நல்லிணக்க அறிக்கையில் கூறப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவார்கள் என்று தானும் நம்புவதாகவும் கூறினார்.

இந்த இரண்டும் இலங்கையில் நடந்தது போன்ற பாரிய மனித உரிமை மீறல்களுக்கும், மனித அழிவுகளுக்கும் பின்னர் ஒரு நல்லிணக்கம் ஏற்பட்டு நிலையான சமாதானம் உண்டாக தேவையானவை எனத் தெரிவித்தார்.

## வாழ்க்கைச்சுமை....

கொண்டாடப்படும் மூன்றாவது புதுவருடத்தில் தமது வாழ்நாளில் முன்னொருபோதும் இல்லாதவாறு எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

புதுவருடத்தில் அடுப்பு மூட்டுவதற்கான தீப்பெட்டியினை ஒன்பது ரூபா கொடுத்தே வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எரிவாயு நிறுவனங்களும் பால்மா நிறுவனங்களும் விலைகளை அதிகரிப்பதற்கான அனுமதியைக் கோரியுள்ளன.

## காலவரையறையுடன்...

கிடைக்கின்றவற்றை முதலில் பெற்றுக் கொண்டு, பின்னர் தேவையான விடயங்கள் தொடர்பில் வலியுறுத்தலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, வடமாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கேட்கப்பட்டமைக்கு, வட மாகாணத்தின் வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் முழுமை பெற்றதன் பின்னர், தேர்தல் ஆணையாளர் இது குறித்து தீர்மானிப்பார் என அவர் தெரிவித்தார்.

அத்துடன் தற்போதைய தேசிய சனத்தொகை கணக்கெடுப்பும் இதில் கருத்தில் கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்றாம் தரப்பு ஒன்றுடன் அரசாங்கத்துடன் பேச்சு நடத்த விரும்புவதாக வெளியான தகவல் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போது, இது காலத்தை வீணடிக்கும் செயலென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாட்டில்...

பாதுகாப்புக்கான ஊடக மையத்தின் தலைமை இயக்குநர் லக்ஷ்மன் ஹுலுகல்ல பி.பி.சி தமிழோசையிடம் கருத்து வெளியிடுகையில் இந்தச் செய்தியை மறுத்தார். தானும் அந்தச் செய்திகளைப் பார்த்ததாகவும், ஆனால் இதை உறுதிப்படுத்தும் வகையில் நம்பகத்தன்மை கொண்ட ஆதாரம் ஏதும் இல்லை. எனவே இதில் உண்மை எதுவும் இல்லை என்றுதான் சொல்லவேண்டும் என்றார்.

ஆனால் இந்தப் பத்திரிகை, இலங்கை உளவுத்துறையை மேற்கோள் காட்டி இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிறதே என்று கேட்டதற்கு பதிலளித்த ஹுலுகல்ல, ஆனால் இந்த செய்தி பொதுப்படையாக அப்படிக்கூறுகிறது. எந்த ஒரு பொறுப்பான அதிகாரியையும் மேற்கோள் காட்டவில்லை. இவ்வாறு அவர்கள் கூற முடியாது என்றார்.

## பிரிட்டன்....

நேற்றிரவு தங்கியிருந்தனர்.

இன்று காலை 9.00 மணிக்கு யாழ். செயலகத்திற்கு விஜயம் செய்யும் குழுவினர் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரைச் சந்தித்து தற்போது யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் குறித்து கலந்துரையாடவுள்ளனர்.

அத்துடன் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்து வைத்தியசாலையின் தேவைகள் குறித்து வைத்தியசாலை நிர்வாகத்தினருடன் கலந்துரையாடுவர். மேலும் வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகளையும் பார்வையிடவுள்ளனர்.

அதேவேளை, யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டுவரும் யுத்தத்திற்குப் பிந்திய அபிவிருத்திப் பணிகள், வீடமைப்புத் திட்டங்கள் குறித்தும் நேரில் விஜயம் செய்து பார்வையிடவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (பா)

# வவுனியா முகாம் மக்களின் மீள்குடியமர்வு 6 மாதத்தில்

வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கவைக் கப்பட்டுள்ள மக்களை முழுமையாக மீள்குடியேற்றி முடிப்பதற்கு இன்னும் 6 மாத காலங்கள் தேவை என மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரகோன் தெரிவித்துள்ளார். வவுனியா நலன்புரி நிலையங் களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களை மீள்குடி யேற்றவென 1700 வீடுகள் அமைக்கப்பட்டு வருவதா கவும் அதில் 206 வீடுகள் அமைத்து முடிக்கப்பட் டுள்ளதாகவும் 200 வீடுகள் இன்னும் மூன்று மாதத் தில் அமைக்கப்பட்டுவிடும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மெனிக்பாம் முகாம் பகுதியில் வீசிய மினி சூறா வளியை அடுத்து முகாமில் உள்ள மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியதுடன் அடுத்த சூறா வளி வருவதற்கு முன்னர் தங்களை மீள்குடியேற்று மாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனினும் இயற்கையை கட்டுப்படுத்த முடியாது. சேதமடைந்த குடிசைகளை திருத்தி அமைக்க நடவடிக்கை எடுத்துவருகிறோம். மக்கள் கஷ்டப் படுவதை நாம் உணர்கிறோம். எனினும் அவர்களை மீள்குடியேற்ற எமக்கு காலம் தேவை என அமைச் சர் குணரத்ன வீரகோன் தெரிவித்துள்ளார்.

# வீட்டின் கதவினை உடைத்து திருட்டில் ஈடுபட்ட சிறுவர் கைது

மன்னார், எழுத்தூர் - பெரியகாமம் கிராமத்திலுள்ள வீடொன்றின் கதவை உடைத்து கொள்ளையில் ஈடுபட்ட 15 வயது சிறுவன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதி காரி துஷார தலுவத்தை தெரி வித்தார்.

அத்துடன் களவாடப்பட்ட பொருட்களையும் பொலிஸார் மீட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். குறித்த வீட்டின் கதவை நேற்று முன்தினம் மதியம் உடைத்துக் கொண்டு உள்ளே சென்ற குறி த்த சிறுவன் அங்கிருந்த 177450 ரூபா பெறுமதியான மடி கணினி மற்றும் 3 கையடக்க தொலை பேசிகள் என்பவற்றை திருடிய தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கொள்ளை சம்பவம் தொடர்பில் குறித்த வீட்டு உரிமை யாளர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய் துள்ளார்.

இதனையடுத்து, மன்னார் பொலிஸார் களவாடப்பட்ட வீட் டிற்கு அருகிலுள்ள 15 வயது சிறுவனை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து மேற்கொண்ட விசாரணைகள் மூலம் திருடப் பட்ட மடிக்கணினி உள்ளிட்ட பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் மன்னார் பொலி ஸார் சிறுவனிடம் மேலதிக விசா ரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர்

# பாகிஸ்தான் சென்ற இராணுவத் தளபதி உயர் அதிகாரிகளுடன் பேச்சு



உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டு பாகிஸ்தான் சென்று இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரிய, அந்நாட்டு இராணுவத் தளபதி ஜெனரல் அஷ்பாக் பர்வேஸ் கயா னியை சந்தித்து இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர இரா ணுவ விடயங்கள் மற்றும் இரு நாட்டு இராணுவங்களுக்குமான பயிற்சித் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

பாகிஸ்தான் இராணுவ தளபதியின் அழைப்பை ஏற்று அங்கு சென்ற இராணுவத் தளபதிக்கு பெரும் வரவேற்பு அளிக்கப்பட் டுள்ளது. அத்துடன், நேற்றுக் காலை, பாகிஸ்தான் இராணுவத் தலைமையகத்தில் அந்நாட்டு இராணுவ மரபுப்படி அணிவகு ப்பு மரியாதை செலுத்தப்பட்டது. இதனையடுத்து, பாகிஸ்தான் இராணுவத்தில் உயிர்த்தியாகம் செய்த வீரர்களுக்கு இராணுவ தளபதி ஜகத் ஜயசூரிய மலர் அஞ்சலி செலுத்தினார்.

இராணுவத் தளபதியின் விஜ யத்தின் போதான இரண்டாவது அம்சமாக, பாகிஸ்தானின் கூட் டுப்படைகளின் பிரதிநிதிகளின் குழுவின் தலைவர் ஜெனரல் காலித் எஸ்.வைனை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

# மின்கட்டணத்தில் கழிவு புதிய திட்டம் அறிமுகம்

நாளைய தினத்துக்காக இன்று மின்சக்தியை பாதுகாப்போம் என்ற, மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் திட்டத்திற்கு சமனான புதிய திட்டம் ஒன்று மின் பாவனையாளர்களுக்கு அறிமுகம் செய்யப பட்டுள்ளது. புதிய திட்டத்தின்படி மார்ச் மாதத்தில் பாவனை செய்த தைவிட ஏப்ரல் மற்றும் மே, ஜூன் ஆகிய மாதங்களில் 10 சதவீதம் மின்சாரத்தை குறைத்து பாவித்தால் 50 சதவீத மின்கட்டண கழிவை பெறமுடியும்.

மேலும் 20 சதவீதம் குறைத்து பாவனை செய்தால் ஒரு மாதத் திற்கு இலவச மின்சாரம் வழங்கப்படும். ஏப்ரல் முதலாம் திகதி தொடக் கம் அமுலுக்கு வரும் வகையில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள[illegible] இத்திட்டத்தில் பங்குபற்ற மின் பாவனையாளர்கள் குறுந்தகவல் மூலம் தம்மை பதிவு செய்துகொள்ளலாம்.

நீங்கள் இலங்கை மின்சார சபை பாவனையாளர் என்றால் L என டைப் செய்து இடைவெளி விட்டு இலங்கை மின்சார சபையின் உங்கள் கணக்கு இலக்கத்தை குறிப்பிட்டு 0114 338338 என்ற இலக்கத்திற்கு குறுந்தகவல் அனுப்பவும்.

லெகோ மின்பாவனையாளர்களாக இருந்தால் ESC என டைப் செய்து லெகோ மின் பாவனை இலக்கத்தை குறிப்பிட்டு 0714 643643 என்ற இலக்கத்திற்கு குறுந்தகவல் அனுப்புமாறு மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது

# புலி உறுப்பினர்களை கண்டுபிடிக்க கிழக்கில் படையினர் தேடுதல்

(கொழும்பு)

இலங்கைக்கு வந்ததாக சந் தேகிக்கப்படும் விடுதலைப் புலி உறுப்பினர்களையும் ஏனைய ஆயு தக்குழுக்களையும் சட்டவிரோத ஆயுதங்களையும் கண்டுபிடிக்கும் முகமாக கிழக்கு மாகாணத்தில் படையினர் தேடுதல் நடவடிக் கைகளை ஆரம்பித்துள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரி விததன.

திருகோணமலை, அன்புவழி புரம், திருகோணமலை - அநுரா தபுரம் சந்தி ஆகிய பகுதிகளில் பொலிஸாரும் இராணுவத்தின ரும் இணைந்து தேடுதல் நடவ டிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒரு வரின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலி சந்தேக நபர் ஒருவர், இந்தியா விலிருந்து விடுதலைப் புலி உறு ப்பினர்கள் இலங்கை வந்திருப்ப தாகக் கூறியதைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவ தாக அவ்வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# புலி உறுப்பினர் கைது

புனர்வாழ்வு பெறாமல் தலை மறைவாகி இருந்து வந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் அக்கரைப் பற்று கண்ணகிபுரம் பிரதேசத் தில் வைத்து கைது செய்யப் பட்டுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டதாக அக்க ரைப்பற்று பொலிஸார் தெரிவித் தனர்.

2002 ஆம் ஆண்டு காலப்பகு தியில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து வெளியேறி இராணுவ புனர்வாழ்வு நிலை யத்தில் புனர்வாழ்வு பெறாமல் தலைமறைவாக இருந்து வந்து ள்ள கண்ணகிபுரம் முதலாம் பிரி வைச் சேர்ந்த குடும்பத்தினரான சிவலிங்கம் கமலராஜன் (வயது - 29) என்பவரே கைது செய்யப்பட டுள்ளார்.

# புலிகளின் ஊடுருவல் உறுதிப்படுத்தப்படவில்லை

விடுதலைப்புலி உறுப்பினர் கள் நாட்டுக்குள் ஊடுருவியிருப் பதாக வெளியான தகவல்கள் இன்னமும் உறுதிப்படுத்தப்பட வில்லை என இராணுவம் அறி வித்துள்ளது.

புலி உறுப்பினர்கள் கிழக்கு மாகாணத்தில் ஊடுருவியிருப்ப தாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும், இது தொடர்பில் உறுதியான ஆதாரங்கள் எதுவும் இதுவரையில் வெளியிடப் படவில்லை என தெரிவிக்கப்பட் டுள்ளது. புலி உறுப்பினர்கள் ஊடு ருவியிருப்பதாக வெளியான செய்திகள் வெறும் ஊகங்களே என இராணுவம் தெரிவித்துள் ளது. எனினும், குறித்த தகவல் கள் தொடர்பில் விசாரணை ந[illegible] தப்பட்டு வருவதாக இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, புலி உறுப்பி னர்கள் நாட்டுக்குள் ஊடுருவிய தாக தமக்கு எவ்வித உத்தியோக பூர்வ அறிக்கைகளும் கிடைக்க வில்லை என பொலிஸ் ஊட கப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

# பழங்கள் பதனிடும் தொழிற்சாலை மூடல் கவலை கொள்கிறது அமெரிக்கா

முழுமையாக தொழிற்படாத மற்றும் குறைந்த பயன்பாட்டில் உள்ள சொத்துக்களை புனரமைத்தல் சட்டத்தின் கீழ் அரசாங்கத் தினால் பொறுப்பேற்கப்பட்ட செவனகல சீனித் தொழிற்சாலை வளா கத்தினுள் அமைந்துள்ள பழங்கள் பதனிடும் தொழிற்சாலை மூடப் பட்டதையிட்டு கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவராலயம் கவலை வெளியிட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலை பற்றிய நடப்பு விடயங்கள் குறித்து கொழும பிலுள்ள அமெரிக்க தூதுவராலயம் அக்கறையாகத் தன்னிடம் விசாரித்ததாக செவனகல சீனித் தொழிற்சாலையின் முன்னாள் தலைவர் தயா கமகே தெரிவித்தார்.

இந்தத் தொழிற்சாலை எப்போது மீண்டும் திறக்கப்படும் எனவும் தூதுவராலயம் வினவியதாக அவர் குறிப்பிட்டார். இந்தப் பழங்கள் பதனிடும் தொழிற்சாலை யூ.எஸ்.எயிட் நிதிப்படுத்தப்பட்டதனால் தான் அமெரிக்கா இது தொடர்பில் அக்கறை காட்டுவதாக கமகே தெரிவித்தார்.

இந்தத் தொழிற்சாலையை அரசாங்கம் பொறுப்பேற்கவில்லை எனக் கூறிய கமகே, செவனகல தொழிற்சாலை வளாகத்தினுள் மேற்படி பழங்கள் பதனிடும் தொழிற்சாலை அமைந்துள்ளமையி னால் ஊழியர்கள் உட்பிரவேசிக்க அனுமதிக்கப்படுவதில்லை. இதனா லேயே குறித்த தொழிற்சாலை வலுக்கட்டாயமாக மூடப்பட்டுள்ளது என குறிப்பிட்டார்.

இந்நிலையில் செவனகல சீனி தொழிற்சாலைக்கு அருகில் அமைந்துள்ள தயா கமகேவுக்கு சொந்தமான நிலத்தை அரசாங்கம் தற்போது அளவீடு செய்கின்றது. இந்த நிலம் கமகேவிடம் மீண்டும் கையளிக்கப்படும் என அரசாங்கம் கூறியுள்ளது.

# பொருளாதார நிலை யூ.பி.எஸ்.எச்சரிக்கை

இலங்கையின் பொருளாதார நிலைமை குறித்து உலகின் முதனிலை முதலீட்டு வங்கிகளில ஒன்றான யூ.பி.எஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொடுகடன் வட்டி வீதம், பொருளாதார அபிவிருத்தி வீழ் ச்சி, அந்நிய செலாவணி, பாதீ ட்டுப் பற்றாக்குறை போன்ற கார ணிகள் சாதகமான நிலையை பதிவு செய்யவில்லை என சுட் டிக்காட்டியுள்ளது.

நிதிக்கொள்கை தொடர்பில் எடுக்கப்பட்ட சில பிழையான தீர் மானங்களே இந்த நிலைமை ஏற படக் காரணம் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி பற்றி பலர் சாதகமான கருத்துக்களை வெளியிட்ட போதி லும், உண்மையில் பல்வேறு நெருக்கடி நிலைமைகள் காணப் படுவதாக சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.




இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஏப்ரல் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.